www.tamilanangam.net

# எரிமலை

ஈழத்தமிழர் தாயகம் தமிழீழம்

ஓகஸ்ட் 2001



## ஒட்சிசன் போர்:

## சிறீலங்கா தேடும் இறுதித்தீர்வு!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilanangam.net











# அக்கரைப்பூக்கள்

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

என் இனிய வணக்கங்கள் பல, நான் இங்கு 7வருடங்களாக எரிமலை இதழைப் படித்து வருகிறேன். எரிமலை இதழ் எனது கரங்களில் தவழும் ஒவ்வொரு நிமிடமும் தமிழீழத்தின் மூலையில் எங்கோ இருப்பது போன்ற இன்பம். அனைத்து அம்சமும் எரிமலையில் நன்றாக, மிக மிக அற்புதமாக, அட்டை வண்ணம், கட்டுரை, கவிதை, போராளிகளின் ஆக்கங்கள், தலைவரின் பிரகடனங்கள், வில்லுக்குளத்துப் பறவைகள், சிங்களப் பேரினவாதத்தின் அத்துமீறல்கள், பாலியல் சித்திரவதை, வியாசனின் கவிக்களம் யாவும் அற்புதமாகவே உள்ளன. நன்றாக மெருகேறிவரும் எரிமலைக்கு என் நன்றிகள்.

அ. அகிலன்
நாப்போலி
இத்தாலி.

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு
வணக்கம்,

மே 2001 எரிமலை இதழ் கிடைத்தது. தொடர்ந்து நீங்கள் அனுப்பிவைக்கும் எரிமலை இதழ் வந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மே இதழில் வந்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு தன் சக்திக்கு மீறியதெனக் கருதும் எரிக் சொல்கையிம் எனும் கட்டுரை சமாதானப் பேச்சுவார்த்தையில் உள்ள பல பிரச்சினைகளை உணர்ந்து கொள்ளும்படி இருந்தது. தமிழீழ தேசியப் பிரச்சினையை, பாலஸ்தீன தேசிய இனப்பிரச்சினையில் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளமுடிந்தது. சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெறப்போவதாக உள்ளூர் செய்திகள் மூலம் அறிந்து கொண்ட நாங்கள், எம் மாதிரியான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகள் நடக்கும் என்பதில் குழப்பமாக இருந்தோம். எங்களுக்கு அந்தக் குழப்பம் மேற்கூறிய கட்டுரையின் மூலம் தீர்ந்தது. தொடர்ந்து இதுமாதிரியான கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம்.

அன்புடன்
இ.சி ராமச்சந்திரன்
தமிழ்நாடு.

வணக்கம்,

மே மாத எரிமலை இதழ் கிடைத்தது மகிழ்ச்சி. இந்த இதழில் வெளியான தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின், எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றியடைந்தே தீரும் என்ற சிந்தனைக் கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. தாய் மண் மீட்க, தமிழீழம் கனக்க இன்னுயிர் நீத்த பல்லாயிரம் மாவீரர்களின் உதிரம் உறைந்து போகவில்லை. களம் கண்ட வீரர்கள் ஒருநாளும் மறைவதில்லை. அவர்கள் வாழ்கிறார்கள், அவர்கள் வாழ்ந்துவிட்ட வாழ்க்கை இனி வாழப்போகும் தமிழர்களுக்கு வரலாறாகும்.

அன்புடன்
அ. தமிழ்செல்வன்
தருமபுரி மாவட்டம்
தமிழ்நாடு

வணக்கம்,

கர்நாடக அரசின் தொழிற்சாலையில் வேலைபார்த்து வந்தேன். கன்னடர்கள் அதிகம் உள்ள இந்த தொழிற்சாலையில், "தமிழ்ச்சங்கம்" அமைத்து தமிழர்களை ஒருங்கிணைத்த காரணத்திற்காக பலர் பழிவாங்கப்பட்டனர். அதில் நானும் ஒருவன். வேலை நீக்கம் செய்யப்பட்டு நாலரை ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் நடுவர் மன்றத்தில் வழக்கு நடந்துகொண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி காரணமாக எரிமலை இதழுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. எப்பொழுதாவது யார் மூலமாவது பார்க்க மட்டும்தான் எரிமலை கிடைக்கும். தமிழ் தமிழர் என ஆர்வமுள்ள நண்பர்களுக்கு எடுத்துச் சென்று காட்ட முடியவில்லையே என வருத்தமடைவேன். தமிழ் ஆர்வமுள்ள, இன எழுச்சியுள்ள நண்பர்கள் உதவியால் இம் மடல் எழுதுகின்றேன். எரிமலை இதழை இங்குள்ள நண்பர்கள் படித்து புத்துணர்வு பெற, இனி வரும் இதழ்களை அனுப்புவதோடு, ஓயாத அலைகள் 3 நிழற்படத்தொகுப்பும், பழைய இதழ்களும் அனுப்பினால். அதனைக் கொண்டு தமிழீழ நிலவரங்களை மற்றவர்களுக்குச் சொல்ல துணையாக இருக்கும்.
நன்றி

நீதி ஜெயகுமார்
பெங்களூர்
கர்நாடகம்.

www.tamilanangam.net

எரிமலை

# உள்ளே...


## கட்டுரைகள்

இலங்கைப் பொருளாதாரத்தை விழுங்கும் பாதுகாப்புச் செலவினம் பக்கம் - 10

சிறீலங்காவில் இரசாயன ஆயுதங்கள் பக்கம் - 18

இன ஒடுக்குமுறையின் ... பக்கம் - 21

தாயகம்: எழுச்சியும் மீட்பும் பக்கம் - 28

ஈழத்தமிழர் தாயகம் தமிழீழம் பக்கம் - 36

## அணையாத தீபம்

கடற்கரும்புலி மேஜர் சந்தனா பக்கம் - 46

## போராளிகளின் படைப்புக்கள் பக்கம் - 12

## கவிதை

எல்லாம் பரிநாசம் - மாவன்னா பக்கம் - 08

எரியுண்டு போனது... - மயிலை தர்மராஜா பக்கம் - 08

சிரம் தாழ்த்தா வாழ்வே... -வியாசன் பக்கம் - 24

பலஸ்தீனக் கவிதைகள் பக்கம் - 33

## செவ்வி

எஸ். ஜி. சாந்தன் பக்கம் - 34

## சிறுகதை

காவல் பக்கம் - 20

பிரிவு பக்கம் - 21

சிறையிருப்பு -முல்லைக்கோணேஸ் பக்கம் - 30

## தொகுப்பு

நினைவுக் குறிப்புக்கள் பக்கம் - 41

பதிவுகள் பக்கம் - 42

மீள்பார்வை ஜூலை 2001 பக்கம் - 47

கண்கள் கூறும் வார்த்தைகள் பக்கம் - 48

04 ஒட்சிசன் போர்




44 ரெற் தாக்குதல்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# ஒரு சத்திய வேள்வியில் தர்மமே வெற்றிகொள்ளும்



ஒருபுறம் யுத்தத்தை தீவிரப்படுத்திக் கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடாத்தி, புலிகள் மீது நெருக்குதல் கொடுத்து ஒரு தீர்வைத் திணித்துவிடலாம் என சிங்கள அரசு எண்ணுகின்றது. போரும், பேச்சும் என்ற இந்த இரட்டை வேட அணுகுமுறையை எமது விடுதலை இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. தமிழீழ மண்மீது பெரும் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டு, தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொன்று குவிக்கப் பட்டால் நாம் திறந்து வைத்திருக்கும் சமா தானக் கதவு மூடப்பட்டுவிடும் என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

நாம் சமாதான மார்க்கத்திற்கு விரோதிகள் அல்லர். ஆனால், சமாதான அணுகுமுறை என்பது எமது மக்களின் உரிமைகளையும், நலன்களையும் விட்டுக்கொடுக்கும் விவகாரம் அல்ல. எனினும் எமது மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியுமானால், எமது மக்களின் நலன்களைப் பேணிப்பாதுகாக்க முடியுமா னால் சமாதான வழிமுறையை நாம் தழுவிக் கொள்ளத் தயார். ஆனால், எமது எதிரியோ சமாதான அணுகுமுறையை ஒரு அரசியல் பொறியாகக் கையாள விரும்புகிறான். எனவே எதிரியின் தந்திரோபாயத்தையிட்டு நாம் மிக வும் விழிப்பாக இருக்கவேண்டும்.


அஞ்சாத் துணிவும், உறுதியும் எம்மிட முள்ள வரை எந்தச் சக்தியாலும் எம்மை வென்றுவிடமுடியாது. ஒரு சத்திய யுத்தத்தில் தர்மமே வெற்றிகொள்ளும் என்பது வரலாற்று உண்மை.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

('எனது மக்களின் விடுதலைக்காக' கருத்துத் தொகுப்பிலிருந்து)

www.tamilanangam.net







கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபதாம் ஆண்டு

ஓகஸ்ட்

2001

திருவள்ளுவர் ஆண்டு 2032



ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:editor@erimalai.com


# அழைப்பும் - நிராகரிப்பும்!

இவ்வாண்டின் ஆரம்பத்தில் புலிகளின் போர்நிறுத்த - பேச்சுவார்த்தை அழைப்புக்களை நிராகரித்துவந்த சந்திரிகா அரசு தற்போது போர் நிறுத்தம் பற்றியும், பேச்சுவார்த்தைகளை மீள துரிதப்படுத்தல் பற்றியும் பேச முற்படுகின்றது. சந்திரிகா - கதிர்காமர் கூட்டணிக்கேயுரிய இயல்பான பாசாங்குத்தனம் நிரம்பிய இம்முயற்சிகளை புலிகள் உறுதியாக நிராகரித்துள்ளனர். கபடத்தனமான அரசியல் - இராஜதந்திர நாடகம் என இதனைப் புலிகள் வர்ணித்துள்ளனர்.

போர்நிறுத்தம் செய்வதை நேர்மையற்ற விவகாரம் என மட்டகரமாக விபரித்துக் கொச்சைப்படுத்திய கதிர்காமர் தற்போது போர்நிறுத்தம் பற்றி நாசுக்காகப் பேசுவது மற்றுமொரு இராஜதந்திர கபட முயற்சி என்பதுடன் போராட்டம் ஏற்படுத்தியுள்ள 'முதுகுமுறியும்' நிலையிலிருந்து விடுபடுவதற்காக 'காலத்தை வாங்குகின்ற' முயற்சியேயாகும்.

பேய்களுடன் கூட்டுச்சேர்ந்தாவது அதிகாரத்தைப் பாதுகாப்போம் என வெட்கமற்றுக் கூக்குரலிடும் சந்திரிகா பண்டாரநாயக்காவின் அரசானது புலிகளுக்கும் - தமிழர்களுக்கும் எதிராக மற்றுமொரு சுற்றுப் பரப்புரை முயற்சிகளை மேற்கொள்ள தமது இப் போர்நிறுத்த - பேச்சுவார்த்தை அறிவிப்புக்களை பாவிக்க முயல்வார்கள். தமது அரசும், தானும் பேச்சுக்கள் மூலம் மட்டுமே போரை நிறுத்திவிட முயல்வதாக சந்திரிகா நேரிடையாகவும், தன் நலன்விரும்பிகள் மூலமும் உலகின் மூலை முடுக்கெங்கும் பரப்புரை செய்ய முற்படுவார் என்பதை சந்திரிகாவின் அரசியல் நடத்தையைப் புரிந்த எவரும் இலகுவாக ஊகம் கூறிவிடுவார்கள். ஆயினும், சந்திரிகாவின் அழைப்புக்கு எதிரான புலிகளின் நிலைப்பாடு எழுப்பியுள்ள கேள்விகள் ஆழமானவையும், உலக சமூகம் இலகுவாகப் புரியும்தன்மை கொண்டவையுமாகும்.

பலவீனமான - ஊழல் நிரம்பிய சனநாயக விரோத அரசுடன் பேச புலிகள் தயாராகவில்லை என்கின்ற அறிவிப்பானது உலக சமூகத்தினால் அடையாளம் காணக்கூடியவையும், மறுக்கமுடியாதவையுமாகும். இன்றைய சிங்கள அரசு சிறீலங்காவின் சனநாயக தராதரத்தில்கூட பலவீனமானதும் - நிலைக்கமுடியாததுமாகும். போதிய பெரும்பான்மை இல்லாத நிலை ஏற்பட்டபோது பாராளுமன்றத்தை சர்வாதிகாரப் பாணியில் ஒத்திவைத்துவிட்டு அரசமைப்பையே மாற்ற மக்களிடம் அனுமதி கோரப் புறப்பட்ட சந்திரிகா பண்டாரநாயக்காவின் சனநாயக முரண்பாடுகள் அனைவரினதும் கண்முன்னே நடந்த கோமாளித்தனமாகும். நச்சுரக ஆயுதக் கொள்வனவுகளில்கூட மில்லியன்களில் நடக்கும் ஊழல்களால் சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஊழல்கள் மறைப்பிட முடியாது நிரம்பிக் கிடப்பவையாகிவிட்டன.

இன்றைய சிங்கள அரசுடன் பேசுவதும், போர்நிறுத்தம் செய்வதும் பயனற்றதும் - ஆபத்தானதுமாகும். இடதுசாரிகளாகவும், வலதுசாரிகளாகவும் சிங்கள இனவாதிகள் குவிந்துநின்று இனவாதம் பேசுகையில் தமிழீழ மக்களின் பாதுகாப்புக் கவசங்கள் கீழே இறக்க முடியாதவை. புலிகளின் அறிவிப்பு இதனை தெளிவாக வலியுறுத்தியுள்ளது. தமிழீழ மக்களின் அரசியல் எதிர்காலமும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனும் நம்பிக்கை கடைசித் தமிழீழ பிரசைக்கும் ஏற்படும் வரையும் சிங்களத்தின் ஒவ்வொரு காலடி அசைவுகளையும் புலிகள் கணித்துவைத்துக்கொள்வார்கள்!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

**நாதன்**






# ஒட்சிசன்

# சிறீலங்கா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

நாசகார கொலை ஆயுதமான ஆர்.பி.ஓ - ஏ ரொக்கட்டுக்களை போரில் பயன்படுத்தும் சிறீலங்கா, போரினை அதன் மோசமான அழிவுதரும் எல்லைவரை இழுத்துச் செல்ல விளைகின்றது.

கேள்வி: அவை பாவிக்கப்படமாட்டாது என்றால் ஏன் அவை இறக்குமதி செய்யப்படுகின்றன?

பதில்: அவற்றைப் பாவிப்பது பற்றிய முடிவு அத்தகையதொரு சூழ்நிலை ஏற்படும்போது மேற்கொள்ளப்படும். உலகம் பூராவும் உள்ள இரசாயன மற்றும் அணு ஆயுத பாவனை பற்றி நீங்கள் பார்ப்பீர்களாயின் இதனை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்வீர்கள்.

(பிபிசி செய்தி நிறுவனத்திற்கு சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளர் இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாக அளித்த செவ்வி. 14 ஆகஸ்ட் 2001)

சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள கொழும்பு ஆங்கில ஏடான 'தி சண்டே லீடர்' கடந்த 12.08.2001 அன்று ஒரு புதிய ஊழலை அம்பலப்படுத்தியது. ரஸ்சிய தயாரிப்பான ஆர்.பி.ஓ - ஏ சாமல் ரொக்கட்டுக்களை கொள்வனவு செய்வதில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக உயர்மட்ட இராணுவத் தளபதிகளை அது குற்றம்சாட்டியது. இந்த நடவடிக்கைகளின்போது குறித்த ரொக்கட்டுக்கள் ஆபத்தான இரசாயன ஆயுதமாகக் கருதக்கூடியவை என்கின்ற அதிர்ச்சி தரும் உண்மை வெளிவந்தது.

சிறீலங்கா அரசின் பேச்சாளர் அவ்வாயுதக் கொள்வனவை ஒப்புக்கொண்டார். அவை ஒரு முக்கியமான காலகட்டத்தில் போரில் பாவிக்கப்படும் என்பதையும் ஏற்றுக்கொண்டார். ஆயினும் சிறீலங்காவின் வெளிநாட்டு உறவுகளுக்கு இது சங்கடத்தை ஏற்படுத்தியது. உலகளாவியரீதியில் இரசாயன ஆயுதங்களைத் தடுப்பதற்கான உலக அமைப்பின் ஆசிய பிரதிநிதிகளாக இந்தோனேசியா, பாக்கிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளுடன் சிறீலங்காவும் தேர்வாகியிருந்தது. 2002ம் ஆண்டுவரை இரசாயன ஆயுத தடுப்பு உடன்பாடுகளை பாதுகாக்க வேண்டிய அமைப்பின் பிரதிநிதியான சிறீலங்காவிற்கு ஆயுதங்கள் இருப்பதாக ஒப்புக்கொள்வது இராஜதந்திர தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் என்பதால் தம்மிடம் இரசாயன ஆயுதங்கள் கிடையாது என மறுக்க ஆரம்பித்தது.

இருபது வருடங்களுக்கு மேலாக விவாதிக்கப்பட்டு 29 ஏப்பிரல் 1997ல் அமுலுக்கு வந்த இரசாயன ஆயுதங்களுக்கான உடன்பாட்டின் கீழ் பகிரங்கமாக இரசாயன ஆயுதங்கள் உள்ளமையை ஒப்புக் கொள்வது முட்டாள்தனமானது என்பதை முதலில் ஒப்புதல் அறிவிப்பை வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் அறியவில்லை. எனினும், அவர்களின் பிந்திய மறுப்புக்கள் குறித்த ரொக்கட்டின் பன்முகப்படுத்தப்பட்ட பாவனையினை சாதகமாகப் பாவித்து திசைதிருப்பும் விதத்தில் விடுக்கப்பட்டனவாகும். இரசாயன ஆயுதமாக வடிவமைக்கபட்ட எரியூட்டும் ஆற்றலுள்ள ஆர்.பி.ஓ - ஏ ரக ரொக்கட்டுக்களை தாம் கொள்வனவு செய்ததை சிறீலங்கா மறுக்கவில்லை. மாறாக அதனை தமது சட்டபூர்வ தேவைகளுக்கான ஆயுதமாகவே சிறீலங்கா விபரிக்க முற்படுகின்றது. (இவ்வாயுதம் பற்றிய விபரிப்பை பெட்டியில் பார்க்க)



சிறிலங்கா இத்தகைய ஆயுதங்களை ஏற்கனவே சிறிய அளவில் போர்முனைகளில் பாவிக்க ஆரம்பித்துவிட்டதாக கூறப்படுகின்றது. சிறீலங்கா நடத்திய அக்னிகீல நடவடிக்கைகளின்போது புலிகளின் நிலைகளை நோக்கி எரியூட்டும் பொருட்களைக் கொண்ட வெடிமருந்துகளைப் பாவித்து சிறீலங்கா முன்னேறமுற்பட்டது என ஒரு ஆய்வாளர் ஊகம்வெளியிட்டுள்ளார். சண்டே லீடர் பத்திரிகையின் மற்றுமொரு ஆய்வாளர் கடந்த ஆண்டு இத்தகைய நாசகார ரொக்கட்டுக்களில் 900 கொழும்பு வந்தடைந்தது எனவும், தென்மராட்சியில் சாவகச்சேரி நகரம் தீயூட்டப்பட்டது இத்தகைய தடைசெய்யப்பட்ட ஆயுதத்தினால் எனவும் கூறினார். மேலும், ஒருமுறை பாவித்துவிட்டு எறியும் இவ் ரொக்கட்டுக்களின் மீதிப் பகுதிகளை கவனமாக மீள எடுத்து வருமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டதாகவும், இதன் மூலம் இதுபற்றிய ஆதாரங்கள் கிடைக்கவிடாது தடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆர்.பி.ஓ - ஏ ரக ஆயுதங்களை மேற்குலக நாடுகள் தடைசெய்துள்ளமையால் இதன் ரஸ்சியத் தயாரிப்பாளர்கள், தரகர்கள் ஊடாகவே பெரும்பாலும் இதனை விற்கின்றனர் என ஜேன்ஸ் இராணுவச் சஞ்சிகை விபரிக்கின்றது. இத்தகைய இடைத்தரகர்களிடம் அவ்வாயுதங்களை வாங்குவதற்கான கொள்வனவு உத்தரவுகளைக் கொடுத்தபோது தமக்கு இலஞ்சமாக சில லட்சம் டொலர்களை தற்போதைய இராணுவத் தளபதி பலகல்ல கேட்டுள்ளார் என்பதே சண்டே லீடர் முன்வைத்த மூலமான குற்றச்சாட்டு. (பார்க்க பெட்டிச் செய்தி)

# போர்: தேடும் இறுதித்தீர்வு!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



ஆர்.பி.ஓ - ஏ எரிதழல் செலுத்திகள்:

தடைசெய்யப்பட்ட கொல்லி!

வியட்நாம் போரின்போது அமெரிக்கத் துருப்புக்கள் தடைசெய்யப்பட்ட நேபாம் குண்டுகளைப் பாவித்து பேரழிவை மக்களுக்கு ஏற்படுத்தியது. இதற்கு இணையாக தமது ஆப்கானிஸ்தான் போரின் போது எதிரிகளின் நடவடிக்கைகளைத் தகர்க்கும் தேவைகளுக்காக பெரும் பின் விளைவுகளை ஏற்படுத்தும் எரியூட்டும் தொழில்நுட்பங்களைக் கொண்ட ஆயுதங்களை ரஸ்சியா பாவிக்கலாயிற்று.

1960களின் இறுதியிலேயே இப்படியான ஆயுதங்களை உருவாக்கும் ஆய்வு முயற்சிகளில் முன்னைய சோவியத் யூனியன் ஈடுபட்டது. கண்ணிவெடி வயல்களை வெடிக்க வைப்பதற்கான உத்தியாக தேர்மோபரிக் (எரியூட்டும்) முறையை அவர்கள் பரிசீலித்தனர். பின்னர், போர்களின்போது தமது அன்றைய எதிரிகளான நேட்டோ நாடுகளின்(அமெரிக்க கூட்டணி நாடுகள்) முன்னரங்கங்களை உடைத்தெறியும் தேவைகளுக்கு எரியூட்டும் முறை மிகுந்த பலனளிக்கும் என அன்றைய சோவியத் இராணுவத் தளபதிகள் கருதியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆயிரக்கணக்கான பீரங்கிக் குண்டுகளிலும் பார்க்க தேர்மோபரிக் ஆயுதங்களைப் பாவித்து பேரழிவை ஏற்படுத்தலாம் என சோவியத் கருதியது. பின்னர் ஆப்கான் போரின்போது மலைகளும், பெரும் வெளிகளும் நிரம்பிய பகையரண்களில் தனது தேர்மோபரிக் ஆயுதங்களை சோவியத் பயன்படுத்தியது. எனினும் 1999ம் ஆண்டு செச்சினிய போராளிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிராந்தியங்களை ரஸ்சியப் படைகள் கைப்பற்றியபோது ஆபத்தான - எரியூட்டி அழிக்கும் மோசமான இரசாயன ஆயுதங்களினை எவ்வாறு ரஸ்சியா பாவித்தது என்கின்ற விபரங்கள் உலகிற்குக் கிடைக்கலாயிற்று. அங்கு பாவிக்கப்பட்ட பல வகைப்பட்ட இரசாயன அழிவு திறன் உள்ள தேர்மோபரிக் ஆயுதங்களில் ஒன்று ஆர்.பி.ஓ - ஏ ரக ரொக்கட்டுக்கள். இதனையே சிறீலங்கா தற்போது கொள்வனவு செய்துள்ளது.

# சிறீலங்கா அரசின் இரசாயன ஆயுதக் கொள்வனவு குறித்து விடுதலைப் புலிகள் கடுமையான கண்டனம்

## பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டி ஏற்படும் என எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 16.08.2001 அன்று, வன்னியிலுள்ள தலைமைச் செயலகத்தில் இருந்து விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில், சிறீலங்கா அரசு சமீபத்தில் வாங்கியுள்ள நவீன இரசாயன ஆயுதங்கள் குறித்து கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது. இப்புதிய ஆயுதம் வடக்கு கிழக்குப் போர்முனைகளில் பாவிக்கப்பட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும், விடுதலைப் புலிகள் சந்திரிகா அரசிற்கு கடும் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர். 'எரியூட்டும் இரசாயன வெடிப்பு முனைகளைக் கொண்ட இந்நவீனரக ஆயுதங்களை சிறீலங்கா அரசாங்கம் வாங்கியுள்ளதை அறிந்து நாம் கவலை அடைந்தோம். ரஸ்சியாவில் உற்பத்தி செய்யப்படும் இவ்வாயுதம் சர்வதேசரீதியாக தடைசெய்யப்பட்டது. ஏவுகணையாகச் செலுத்தப்படும் இவ்வாயுதம் தீப்பிழம்பாக வெடிக்கும்போது, அதிலிருந்து வெளியாகும் நச்சுவாயு போராடுபவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உயிராபத்தை விளைவிக்கவல்லது. இந்தத் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை வாங்கிக் குவித்திருப்பதன் மூலம் சிங்கள அரசானது ஈழப்போரை ஒரு புதிய, ஆபத்தான பரிமாணத்திற்கு விரிவாக்கம் செய்துள்ளது' என விடுதலைப் புலிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ரஸ்சியாவைத் தவிர உலக நாடுகளின் தேசிய இராணுவங்கள் இவ்வாயுதப் பாவனையை தடைசெய்துள்ளன. போர் நியமங்களுக்கு விரோதமானதும், ஆபத்தான விளைவுகளை உண்டுபண்ணுவதுமான இந்த இரசாயன ஆயுதத்தைப் பெற்றிருப்பது பற்றி சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வித மனக்கிலேசமும் அடைந்ததாகத் தெரியவில்லை. வடக்கு கிழக்குப் போரில், பாரிய உயிர்ச்சேதம் ஏற்படுத்தும் நவீன ஆயுத தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன்மூலம் சிங்கள அரசானது தனது போர் வெறியை அம்பலப்படுத்தியுள்ளது. அத்தோடு, இராணுவத்தீர்வில்தான் அரசிற்கு உறுதியான நம்பிக்கையுண்டு என்பதையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளது. இந்தப் புதிய திருப்பமானது, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு பேரிடியாக அமைந்துள்ளது. தமிழர் தாயகத்திலுள்ள பட்டினங்கள், கிராமங்கள் மீது தற்போது தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் விமானத் தாக்குதல்களும் சமாதானத்திற்கான சூழ்நிலையை சிதைத்துவருகின்றன' இவ்வாறு விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மிகவும் ஆபத்தான, தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை சிறீலங்கா அரசு வாங்கியுள்ளதை சர்வதேச சமூகம், குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா ஆகியன கண்டிக்கவேண்டும். அத்தோடு, இவ்வாயுதங்களைப் பாவிப்பதால் ஏற்படும் பயங்கர விளைவுகள் பற்றியும் சிங்கள அரசிற்கு அச்சுறுத்தல் விடுக்க வேண்டும்' என விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



## தேர்மோபரிக் தொழில்நுட்பம்

இது எரிபொருள் - வாயு (fuel - air) ஆயுதங்கள் என இவற்றின் தொழில்நுட்பம் ஆய்வாளர்களால் விபரிக்கப்படுகின்றது. முதலில் குண்டு அல்லது ரொக்கட் அல்லது எறிகணையினுள் ஒரு வெடிப்பு நிகழும். இதன் பிரதான குண்டுப்பகுதியில்(War head) எரியூட்டும் திறன்மிக்க வாயு, திரவக் கலவை அல்லது இதற்கென சிறப்பாக உருவாக்கப்பட்ட வெடிமருந்துகள் காணப்படும். இவ் வாயு, திரவக்கலவை (அல்லது சிறப்பு வெடிபொருள்) வெடித்துச் சிதறி முகில்கள் போன்ற படையை உருவாக்கும். இம் முகில்கள் மீண்டும் வெடித்துச் சிதறி சுற்றாடல் காற்றில் உள்ள ஒட்சிசனை விழுங்கி எரிதழல்களை உருவாக்கும். ஒட்சிசன் இவ்வாறு விழுங்கப்படுவதால் (அல்லது இல்லாதாக்கப்படுவதால்) பெரும் காற்றழுத்தம் அப்பகுதிகளில் ஏற்படும். இந்த அதிகூடிய அழுத்தம் அல்லது வெடிப்பு பெரும் சேதாரங்களை ஏற்படுத்தும். மிக குறுகிய செக்கன்களில் (நுண்செக்கன்களில்) ஒரு சதுர சென்றிமீற்றரில் 30 கிலோகிராம் அழுத்தத்தை (ஒரு சதுர அங்குலத்தில் 427 இறாத்தல்) இது ஏற்படுத்தும். சாதாரணமாக நாம் வாழும் சூழலின் அழுத்தம் இதனிலும் பன்மடங்கு குறைவானது. உதாரணமாக மட்டக்களப்புச் சூழலில் 14 இறாத்தல் அழுத்தமே ஒரு சதுர அங்குலத்தில் இடம்பெறும். தேர்மோபரிக் குண்டுப் பொறிமுறை ஏற்படுத்தும் கடும் அழுத்தத்தை சாதாரண வெடிகுண்டுகளோ, பீரங்கிக்குண்டுகளோ ஏற்படுத்தாது. இந்த தேர்மோபரிக் முகில்களில் அகப்படும் எவரும் அழுத்தத்தில் நசுங்கி இறந்துவிடுவார்கள். இந்த தேர்மோபரிக் முகில் பரப்புக்கு வெளியே வெடிஅதிர்வுகள் வெகுவிரைவாகப் பரவி சேதாரங்களை ஏற்படுத்தும்.

இதன் அழிவுகளை ஆராய்கையில் கதிர்வீச்சுக்கள் இல்லாத அணுஆயுதத்திற்கு இதனை ஒப்பிடலாம் என அமெரிக்காவின் அந்நிய இராணுவங்களை கற்பதற்கான பணியகத்தின் உயரதிகாரிகளை ஆதாரம் காட்டி அமெரிக்க கடற்படை வீரர்களுக்கான சஞ்சிகை கூறுகின்றது. இந்த எரிபொருள் - வாயு கலவை இலகுவாக பரவக்கூடியதால் எந்த மறைவுகளுக்குள்ளும் பரவி வெடித்து பெரும் சேதாரத்தை ஏற்படுத்தும். இது ஏற்படுத்தும் சேதாரங்களை பட்டியலிடும் கடற்படை சஞ்சிகை MARINE CORPS GAZETTE ஆகஸ்ட் 2000 மக்களின் பொருளாதார வளங்களை எரியூட்டும் சக்திமிக்க ஆயுதம் என்கின்றது. வயல்வெளிகள், தோட்டங்கள், மக்கள் குடியிருப்புக்கள் போன்றவற்றை எரியூட்டும் தேர்மோபரிக் ஆயுதங்கள் சிதைத்தழித்துவிடும்.

இவற்றில் தற்போது சிறீலங்கா கொள்வனவு செய்துள்ள ஆயுதங்களான ஆர்.பி.ஓ - ஏ ரக ரொக்கட்டுகளும் அடங்கும்.

இதனை செச்சினிய தலைநகரான குரூஸ்னியைக் கைப்பற்ற இவ்வகை தேர்மோபரிக் ரொக்கட்டுக்களை வீசும் ஆயுதங்களை ரஸ்சியா பயன்படுத்தியது. நகரம் எரியூட்டப்பட்டு கைப்பற்றப்பட்டது.

ஆர்.பி.ஓ - ஏ ரக ரொக்கட்டுக்கள் பற்றிய தொழில்நுட்ப விளக்கங்களில் இதனை இரசாயன ஆயுதங்கள் என்றே ஆய்வாளர்கள் வர்ணிக்கின்றனர். இதன் பிரதான பயன்பாடு எரியூட்டும் வெடிகுண்டுகளை வீசுவதே என்பதால் இதனை அத்தகைய ஆயுதம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும் சிறீலங்கா ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இதற்கு வேறுவிளக்கம் கொடுக்க முற்பட்டார். ரஸ்சிய இரசாயன படையணிகளின் தீச்சுவாலை வீசும் ஆயுதமாக இதுவே காணப்படுகின்றது என்பதையும் ஆய்வாளர் ரிமோத்தி ஸ்மித் என்பவர் சுட்டிக்காட்டுகின்றார். மேலும் இதன் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளில் 80சதுர மீற்றர் பகுதிகளில் அகப்பட்ட அனைத்தும் எரியுண்டு அழிந்துவிடும் எனக் கணிப்பிடப்படுவதாக பிறிதொரு ஆய்வாளர் கூறுகின்றார். அமெரிக்க இராணுவத் தலைமையகத்தின் விபரிப்புக்களில் இதனை தேர்மோபரிக் (எரியூட்டும்) குண்டுகளைக் காவும் அழிவுதரும் ஆயுதம் என்கின்றது. ரஸ்சியப் படைகள் இதனை பொக்கற் ஆட்டிலறி என்கின்றனர். இதனைப் பாவித்து செச்சினிய தலைநகரைக் கைப்பற்றியதிற்காக 512 துருப்புக்கள் ரஸ்சிய அரசினால் கௌரவிக்கப்பட்டனர்.






### கொலைக் கருவியில் ஊழல்!

சிறீலங்கா இராணுவம் இவ் வாண்டு சனவரியில் 1000ஆர்.பி.ஓ- ஏ ரக ரொக்கட்டுக்களை கொள்வனவு செய்ய முடிவு செய்தது. இதன்போது 1999ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்து ரொக்கட்டுக்களை தம்மிடம் நேராகப் பெறுமாறு ரஸ்சிய உற்பத்தியாளர்கள் தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்லவிடம் நேர டியாகக் கேட்டுக்கொண்டதாகவும், அதனையும் மீறி பிரித்தானியாவை தலைமையகமாகக் கொண்ட கிளட்ஸ் ரோன் எனும் தரகர் நிறுவனத் திடம் இதனைப் பெறுவதற்கான உத்தரவை தளபதி பலகல்ல வழங்கினார். மேலும், இவ்வாயுதங்களைப் பார்வை யிடச் சென்ற சிறீலங்கா இராணுவ உயரதிகாரி 90 நாட்கள் காத்திருப்புக்குப் பின்னர் ஒரு சனி மாலை 1 மணி நேரத்தில் சிறீலங்காவிற்குச் செல்ல விருந்த அவ்வாயுதங்களைப் பார்க்க அனுமதிக்கப் பட்டார். இப்பரி சோத னைகளின்போது அங்கிருந்த ஆயுதங் கள் 1991 - 1989 காலப்பகுதி என்பதால் அதனை ஏற்கவேண்டாம் என அவ வதிகாரி கொழும்பிற்கு அறிவித்த போதும், ஆயுதங்களை கொழும்புக்கு அனுப்புவதற்கான உத்தரவு வழங்கப் பட்டுவிட்டது எனவும் சண்டே லீடர் கூறுகின்றது. கிளட்ஸ்ரோன் நிறுவனத் துடன் இராணுவம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 1999ம் ஆண்டு ரொக்கட்டுக் களுக்கே பணம் கொடுக் கப்பட்டது. எனினும் காலம் கூடிய ரொக்கட்டுக்களே சிறீலங்கா இரா ணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

இக்காலப்பகுதியில் கிளட்ஸ்ரோன் நிறுவனத்தின் உயரதிகாரி அமீர் ரிமூர் என்பவர் யூலை 16ம் திகதி பதவி யைவிட்டு விலக்கப்பட்டார். மறு நாள் 17 யூலை சிறீலங்காவில் குறித்த ஆயுதங்கள் தரையிறங்கின.

கிடைக்கப்பெறும் தகவல்களின் பிர காரம், அமீர் ரிமூர் ரஸ்சிய நிறுவ னத்துடன் கிளட்ஸ்ரோன் நல்லு றவை ஏற்படுத்தவே நியமிக்கப்பட் டார் எனத் தெரியவருகின்றது. எனி னும், இவ்வாயுதங்களை கொள்வ னவு செய்யும் வாய்ப்பை தமக்குத் தந்த சிறீலங்காவின் இராணுவ உய ரதிகாரிகளுக்கு 500 000 டொலர்கள் வழங்குவதற்கான விவகாரத்தில் ஒத் துழைத்து கையொப்பமிட மறுத்த திற்காகவே அவர் தூக்கி எறியப் பட்டார். இது தொடர்பான சில ஆவ ணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

(12 ஆகஸ்ட் 2001 சண்டே லீடர் பத்திரிகையின் பரபரப்பு செய்தியின் சுருக்கம்)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# எல்லாம் பரிநாசம்

புல் வேய்ந்த வீட்டோடு
கல் வீடும் எரிந்ததுண்டு
கல்லூரி சென்ற பிள்ளை
கால்களின்றிப் போனதுண்டு
இரட்சகரே என்றவரின்
இல்லத்துள் சென்றவர்கள்
எல்லோரும் ஒன்றாக
இறையடிக்குப் போனதுண்டு
காலை எழுந்தவுடன்
கடப்படிக்கு வந்தவர்கள்
குடலுருவி முற்றத்தில்
குவிந்து கிடந்ததுண்டு...
வானம் இரைந்து வரப்
பங்கருக்குள் படுக்கையிலே
உலகத்துக் கோவிலெல்லாம்
இல்லாத நேர்த்திவைத்தோம்
பாழ்பட்டுப் போவார்
பற்றி எரிவரென்றும்
பறந்து வரும் வேளையிலே
புகையாகிப் போவரென்றும்
எரிந்து தான் போச்சு தங்கே
எல்லாம் பரிநாசம்
இருந்தாலும் கண்ணெதிரே
எரிந்து விழக்காணவில்லை
இனி வந்தால் எம் மண்ணில்
வீழ்ந்தெரியச் செய்திடுவோம்
குனிந்திடுமோ தலை நிமிர்த்தித்
திரிந்திடுமோ பகையரசு...

**மாவன்னா**



# எரியுண்டு போனது வல்லூறுகள்வாழ்வு..!

சில நாட்களுக்கு முன்பும்
அந்த வல்லூறுகள்
எம் வானத்தை முற்றுகையிட்டன.
கிறீச்சிட்ட அவற்றின் ஒலி அதிர்வில்
பொத்தலாகிப் போயின செவிப்பறைகள்
அக்கினித் துண்டங்கள் போன்ற
அவற்றின் எச்சங்களால்
எம் மேனிகள் பஸ்யமாகிப் போயின
அடைகாத்த தாயின் அரவணைப்பில்
முட்டைகள் வெடித்து தலைகாட்டிய
பிஞ்சுக் குஞ்சுகளையும்
அந்த வல்லூறுகளின் கோர அலகுகள்
கொத்திப் புசித்திருந்தன.
இதற்கு முன்பும் பலதடவைகள்
இப்படியேதான் நிகழ்ந்து போயிற்று
பின்பெல்லாம் அடிக்கடி நிகழலாயிற்று
வல்லூறுகளின் குருதிவடியும் நகங்களின்
கீறல்களைத் தாங்கிக்கொண்டு
வாழவே முடியாது என்று குஞ்சுகள் கிளர்ந்தன.
அக்கினியைச் சுமந்துசென்று
வல்லூறுகளின்வாழ்விடங்களைப் பொசுக்கின.
உடைந்துபோன எலும்புகளோடும்
குருதி சொட்டச் சொட்ட
எரியுண்ட இறக்கைகளால்
தத்தித் தத்தியேஎஞ்சியவை தலைதெறிக்கப்
பறந்துபோயின இம்முறை
அவற்றின் ஒலி அதிர்வுகள்,
செவிப்பறைகளோடு சமரசம் செய்தனபோலும்
ஏனோ,எமக்கு முணுமுணுப்பாகத்தான் தோன்றின
இப்பொழுது எச்சங்கள் இடுவதற்குக்கூட
அவற்றுக்கு திராணி இல்லை.
இவ்வளவு காலமும்
அவற்றினால் கீறல்பட்டு கீறல்பட்டு
துவண்டுபோன
எம்மினத்தின் இதயங்களில் நிம்மதி
நிறைந்து வழிய
உதடுகள் புன்னகை உதிர்த்தன.

*மயிலை தர்மராஜா*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



கடந்த 24.07.2001 அன்று கட்டுநாயக்கவில் மேற்கொள் ளப்பட்ட தாக்குதலில் முற்றாகச் சிதைந்துபோன சிறீலங்கா விமானப்படை யுத்த விமானங்களில் மேலும் ஒரு தொகுதி.



K- 8



MIG-27




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# இலங்கைப் பொருளாதாரத்தை விழுங்கும் பாதுகாப்புச் செலவினம்




இராணுவ தொழில்நுட்ப சஞ்சிகை: (MILTECH 1/2001)

**முன்னொரு காலத்தில் தனது இராணுவ, பாதுகாப்புப்படைப் பிரிவுகளை மெச்சி, மார்தட்டிவந்த சிறீலங்கா அரசு இன்று அப்படைப்பிரிவுகளின் வீழ்ச்சியையும், சிதைவையும் கண்டு மௌனித்துப் போயிருக்கிறது. கோடிகோடியாய் பணத்தை அள்ளி இறைத்தும் பாதுகாப்பில் உள்ள ஓட்டைகள் சிறீலங்காவை ஆட்டங்காணச் செய்துகொண்டுதானிருக்கின்றன.**

**படைப்பிரிவுகள், ஆயுதங்கள், பல்வேறு நாட்டு இராணுவங்கள், மற்றும் பிற அரச பாதுகாப்புச் சார்ந்த ஆய்வுகள், கட்டுரைகள், தரவுகள் போன்ற இன்னோரன்ன விடயங்களைத் தாங்கிவரும் MILTECH என்னும் இராணுவ தொழில்நுட்ப சஞ்சிகையின் Vol.xxv.issue 1—2001 இதழில் வெளிவந்துள்ள சிறீலங்காவின் பொருளாதாரம், பாதுகாப்பு, அதற்கான வரவு செலவு, படைப்பிரிவுகள் என்பவற்றின் புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

**பொருளாதாரம்:**

1999ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி சிறீலங்காவின் நேரடி உற்பத்தி (GDP) 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டு வளர்ச்சி வீதம் 2,600 அமெரிக்க டொலர்கள். அதாவது 3.7 வீதம். இறக்குமதி வர்த்தக மீதி 5.6.2001ஆம் ஆண்டின் கணிப்பீட்டின்படி 5.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அதேவேளை ஏற்றுமதி வர்த்தக மீதி (FOB 1998) 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள். வரவு செலவுத் திட்டத்தின் மொத்த வரவு 2.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள், அதேவேளை மொத்தச் செலவு 4.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள்.

**பாதுகாப்பு:**

மொத்த மனித வளம் 100,000 (றிசேவ் படை உட்பட) இராணுவத்தோடு இணைந்து செயற்படும் படையினர் 28,000 காவல்துறை நாசகார எதிர்ப்புப் பிரிவு 10,000 தேசிய தொண்டர்படை. 20 பிரிவுகள், 50,000 வரையிலான ஆண்களைக் கொண்ட படை தற்காப்பு படையை அமைக்க திட்டம் நிறைவேற்றப்பட்டது. கட்டாய சேவை இல்லாவிட்டாலும் தொண்டர் படை என்ற பெயரில் பெரும்பாலான மக்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

**பாதுகாப்பு வரவு செலவு:**

1998இல் 760 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இது மொத்த அரச செலவீனத்தின் 15 வீதமாகும். இத்தொகை மேலும் 184 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டது.



**தரைப்படைகள்**

மனித வளம் 90,000 றிசேவ் உட்பட
சேர்க்க விரும்பும் தொகை 105,000

**அமைப்பு:**

4 தலைமையகப் பிரிவுகள்
1 இயந்திர மயப்படுத்தப்பட்ட தரைப்படையணி (பயிற்சியில்)
1 ஆகாய நடமாடும் படையணி (பயிற்சியில்)
18 தரைப்படையணிகள்
2 உளவுப் படைப்பிரிவு
5 கடமைப் படைப்பிரிவு
3 ஆட்டிலறிப் படைபிரிவு
1 ஆகாய பாதுகாப்புப் பணி
4 தொழில்நுட்பப் பிரிவு
1 கொமாண்டோப் பிரி?வு
1 சிறப்புப் படையணி
உபகரணங்கள்:





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



உபகரணங்கள்:
- 15 ரீ-55 ரக முன்னாள் செக்கோஸ்லோவாக்கிய தயாரிப்பு. ரீ-69 சீனத் தயாரிப்புக்களின் எண்ணிக்கை தெரியாது.
- கவசவாகனங்கள் 210 BMP-1, BMP-2
- 23 சலாடின், Mk4 சோர்லாண்ட், 20 பிறெற்
- இராணுவ வாகனங்கள்-குறைந்தது 200, ஆபிரிக்க பவள் உட்பட, 30 சறசன், 85 ரக சீன வாகனங்கள் 21, 86 ரக சீன வாகனங்கள் 12 ஆகியவை அடங்கும்.

- ஆட்டிலறி 36, ரக66 152மி.மீ, 12 130மி.மீ ரக59-1,85மி.மீ, 30, ரக56 88மி.மீ, 81மி.மீ, 107 மி.மீ மோட்டார்கள்.
MRL 16,122 மி.மீ செக்கோஸ்லோவாக்கியாவினால் வழங்கப்பட்டது. 2001 ஆண்டு ஆரம்பகாலப்பகுதியில் பாகிஸ்தானில் ஆயுதம் வாங்கியதன் வரவாக 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. ஆயுத விபரங்கள் குறிப்பிடப்படவில்லை.
AA 40 மி.மீ, 24 90 மி.மீ
மேலதிக 40, ப-55 MBT, செக்கோஸ்லோவாக்கியாவின் ஆயுதக் குதத்தில் மேலதிகமாக உள்ளவை வழங்கப்பட்டது.
மேலதிகமாக 36 பாவித்த BMP க்கள் வாங்கப்பட்டன. 16, 122 MRL செக். குடியரசால் நன்கொடையாக வழங்கப்பட்டது.



**விமானப்படை:**
மனிதவளம்-700

2 C-2 ரக 5 கிபீர்கள், 2 TC-2 கிபீர்கள் கொண்ட எதிர்ப்புப் படைப்பிரிவு (10 ஆம் இலக்கம், கட்டுநாயக்க)
- F7 - 5 /F7-7, 4 மிக் 27 ஆகியவைகளைக் கொண்ட தாக்குதற்பிரிவு (5ஆம் இலக்கம், கட்டுநாயக்க)
5 M1-24 HIND க்களைக் கொண்ட யுத்த ஹெலிகொப்டர் படைப்பிரிவு (9 ஆம் இலக்கம், கிங்கறுஹாட)
3 செஸ்ன 337 ஸ்கைமாஸ்ரர், 2 SA 365 டாபின் II ஆகியவற்றைக் கொண்ட கடற்பரப்பில் ரோந்து செல்லும் படைப்பிரிவு (3ம் இலக்கம்)
12C 130B, 2HS, 748, 5Y/12, 2 Ar/12, 4 An/32, 4An/24 வர்த்தகத் துறையினரிடம் வாடகைக்கு பெற்றவை Superking Air.
2 செஸ்ணா 421, 1 செஸ்ணா இணைக்கக்கூடிய விமானம்.
1 கொயின் பயிற்சிக்கிளை 9SF- 260W/TP கள், 3FMA -58A புக்காரா 5 செஸ்ணா 150 ஐக் கொண்ட பயிற்சிப்பிரிவு.
8 பெல் 212, 7 பெல் ஜெற்ரேஞ்சர், 4 பெல் 412, 11 எம்.ஐ.17 ஆகியவற்றைக் கொண்ட 3 கெலிகொப்டர் படைப்பரிவு.

முக்கிய குறிப்பு
2000ஆம் ஆண்டில் உக்கிரேனில் மேலதிகமாக இருந்த MIG-27 ரக விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 5ஆம் இலக்க படைப்பிரிவால் கட்டுநாயக்கவில் பாவிக்கப்பட்ட F-7 வகை விமானங்களுக்கு பதிலாக பாவிக்கப்பட்டது. மேலும் இஸ்ரேலில் மேலதிகமாக இருந்த திருத்தியமைக்கப்பட்ட 5 C2 கிபீர் விமானங்கள் மேலதிகமாகப் பெறப்பட்டது.

பிரதான வான்தளங்கள்:
அம்பாறை, கட்டுநாயக்க, பலாலி, ரத்மலான, சிகிரியா, வவுனியா

**கடற்படை:**
9800 படையினரைக் கொண்டது.
கடற்படை பிரிவுகள்:
1 ஜயசேகர ரோந்துப்படகு
3 ரண ரோந்துப் படகு
7 சூரியா அதிவேக தாக்குதல் படகு
(முன்னைய சீன ஷங்காய்11 போன்றது)
1 பராக்கிரமபாகு பீரங்கி ரோந்துப்படகு
3ட430 வகை தென்கொரியா தயாரிப்பு அதிவேக தாக்குதல் படகு
8ட 463 வகை இஸ்ரேலிய டோரா.
10 கொழும்பு அதிவேக தாக்குதல் படகு.
25 கரையோர ரோந்துப்படகு
40 துறைமுக ரோந்துப்படகு



**கடற் தரைப்படைகள்**
2 சீன தயாரிப்பான WAHU நடுத்தர தரையிறக்கக் கப்பல்
2 LCM தரையிறக்கப் படகு
1 LCP
1 சீன தயாரிப்பான சரக்கு தரையிறக்கக் கப்பல்
1 MIO படகு
பிரதான கடற்படை முகாம்கள்- கொழும்பு, காரைநகர், தங்காலை, திருகோணமலை, வெலிசற.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilanangam.net

## மண்

# எம் நாட்டை விட்டு போகாவிட்டால்

நான் எப்படிப் பாதுகாப்பைத்
தேடுவது
எனக்காக என்னில் அனைவரும்
சுதந்திரமாக வாழவேண்டுமென்று
உங்கள் உடல்களையும்
இரத்தங்களையும்
எனக்கு உரமாக்கும்போது - நான்
எப்படி சுதந்திரத்தை தேடுவது
நீங்கள் என்னில்
பாதுகாப்பைத்தேடி
உட்புகும் வேளையில் உங்களை
மறைத்து வைக்கவென துடிக்கும்
நான்எவ்வாறு பாதுகாப்பைத்
தேடுவது ஆனாலும் ஒவ்வொரு
அடிக்கும் பீரங்கிக்
குண்டுகள், கிபீர்க் குண்டுகள்
பைற்றர் செல்கள்
என்னை நன்கு கொத்திக்
கிளறுகின்றது
ஆனாலும் எனக்காகப் போராடும்
உங்களைவிட்டு நான் எப்படிப்
பாதுகாப்பைத் தேடுவது
உங்களின் செந்நீரில் வளரும்
மரங்கள் புல்பூண்டுகளினால்
எனக்கு போதியளவு
குளிர்மையாக உள்ளது -
என்றாலும்
எரிகுண்டுகளால் கொடியவன்
எரிக்கின்றான் - ஆனாலும்
எவ்வளவு கொடுமைகள் தான்
நடந்தாலும் எனது பிள்ளைகள்
உங்களைவிட்டு
நான் எப்படிப் பாதுகாப்புத்
தேடுவது
ஆனாலும் மனிதாபிமானம்
இல்லாத
இரத்தங்களும் உடல்களும்
என் மேனியில் படுவதால் எனக்கு
அருவருப்பாக உள்ளது -
இருந்தாலும் உங்களைப்
பாதுகாக்க வேண்டிய நான்
எவ்வாறு பாதுகாப்பைத்
தேடுவது.

- மாவீரர் லெப்டினன்ட் கேணல்
**செல்வி** *(மாலதி படையணி)*



நாம்
ஆசை தீர அள்ளி மண் உண்ட
அந்த முற்றம்
ஓடி ஆடி விளையாடி புழுதி
படிந்த
எம் தெருக்கள்
காலம் காலமாய் எம் பரம்பரையின்
உடல்களைத் தாங்கி நிற்கும்
மயானம்
ஒவ்வொரு நாள் மாலையிலும்
ஆரவாரமாய் இருக்கும்
விளையாட்டு மைதானம்
எந்நேரமும் கலகலப்பாய் இருக்கும்
எம் கடைத்தெருக்கள்
சந்தைக் கட்டடம்
எம் மனதை விட்டு நீங்காத
பள்ளிக்கூடமும்
பாடசாலை வாழ்வும்
அரட்டை அடிக்கும்
தெரு மதகும்
வாசிகசாலையும் ரியூட்டரியும்
வியர்வையையும் ஊற்றி வளர்த்த
வயல் வெளியும், தோட்டம் துரவும்
அக்காவும், அம்மாவும் அடிக்கடி
மெழுகி அழகு பார்க்கும் எங்கள்
அழகான வீடு
சுதந்திரமாய் நீச்சல் அடிக்கும்
கிராமத்துக்குளம்
இவ்வளவுக்கும் மேலாய்
அனாதையாகிவிட்ட
வளர்ப்புப் பிராணிகள்
இவை எல்லாவற்றையும்
எப்படித்தான்
எம்மால் பிரிந்திருக்க முடியும்
ஓ...... சிங்களமே — எம்
நாட்டை விட்டு போகாவிட்டால்
உன் உயிர்
கூட்டைவிட்டு விரைவில் போகும்!

**போராளி கு. அறிவு**

## போராளிகளின் படைப்புக்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# வாழ்க்கை என்பது

சிறுகதை

கனவிலிருந்து திடீரென விழித்த போடியார் மணிக்கூட்டின் பெரியமுள் பத்து என்ற இலக்கத்திலும் சிறியமுள் நான்கை நன்றாகக் கடந்து ஐந்து என்ற இலக்கத்தினை அண்டியும் நிற்கக்கண்டு மளமளவென்று படுக்கையைச் சுருட்டிக்கொண்டு எழுந்துவிட்டார்.

வயது ஐம்பத்திஐந்தைத் தாண்டியும் ஓரளவு கட்டுக்குலையாத தேகம். அவர் தனது கடைசிக்காலத்தை எல்லோரைப் போலவும் கோவில்களில் கழிக்க விரும்பாதவர். எமது தேசவிடுதலையின் அத்திவாரங்களான மாவீரச் செல்வங்களின் துயிலும் இல்லத்தில் தனது மிகுதி வாழ்நாட்களையும் கழிப்பதே தனது கடமை எனக் கொண்டவர். தனது வயதை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் தன்னால் முடியுமட்டும் உடலைவருத்தி தான்கொண்ட தொழிலில் விருத்தி காணும் மனப்பான்மை கொண்டு அதற்குச் செயல்வடிவம் கொடுப்பவர்.

தேனீருக்காக அடுப்பை மூட்டி தண்ணீரைச் சுடவைத்தவர் காலைக்கடன்களை முடித்துவிட்டு வருவதற்குள் தண்ணீர் சுட்டுவிடவும் கணக்காக இருந்தது. தேனீர் ஊற்றிக்குடித்த போடியார், விளக்குமாறும் வாளியுமாக கொட்டிலைவிட்டு வெளிப்பட்டார். அவர் தனது பிள்ளைகளைப்போல் பார்த்துவரும் குரோட்டன்களையும் பூச்செடிகளையும் பார்த்தபடியே சென்றார்.

அண்மையில்தான் 'ஒவ்வொரு மாவீரனுக்கும் நீ ஒவ்வொரு சிகப்பு றோசாப் பூக்களைத் தரவேணும்' என்று கூறிக்கொண்டே அந்த சிகப்பு றோசாத் தடியை ஊன்றினார். அதற்கு அருகில் ஒருசில நிமிடங்கள் நின்று அந்த றோசாச் செடியில் ஏதேனும் மொட்டுக்கள் அரும்பி இருக்கின்றனவா என ஒவ்வொரு கிளையாக ஆராய்ந்தவர் ஏமாற்றமே விளைவாகக் கோபம் அடைந்தவர்போல் றோசாச்செடிக்கு சின்னதாக ஒரு வெருட்டல்விட்டார். 'உனக்கு இனிப்பார் நான் தண்ணி ஊத்தமாட்டேன். இப்படியே கிடந்து செத்துப்போடுவாய். கெதியா எனக்குப் பூக்களை நீ தா. நான் என்ர பிள்ளைகளுக்குக் குடுக்கோணும். கிழவனுக்கு என்னோட பகிடி எண்டு மாத்திரம் நினைச்சுப்போடாத, செயலுக்கு முன்னுரிமை கொடுக்கிறவன் இந்தப் போடியார்' என்றவர் கிணத்தை நோக்கி விரைந்தார்.

வாளியைக் கிணத்தடியில் வைத்துவிட்டு அவருடன் உதவிக்காக நின்ற இருவரையும் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றச்சொல்லிவிட்டு, தான் கூட்டத் தொடங்கினார். கூட்டிக்கொண்டு இருந்தவர், 'டேய் தம்பியவை கெதியாத் தண்ணிய ஊத்திமுடியுங்கோ இண்டைக்குக் கனக்கவேலை கிடக்குது. அதுக்காக கொஞ்சக் சொஞ்சத் தண்ணியாக் காட்டிறேல்ல' என்றவாறு தனது வேலையில் மூள்கினார்.

கூட்டிமுடித்த போடியார் 'தம்பியவை நானும் வாறன்ரா' என்றவாறு பூக்கண்டுகளுக்குத் தண்ணீர் ஊற்றத் தொடங்கினார். போடியாரின் தண்ணீருடன் வியர்வையையும் பெற்றுக்கொண்டிருந்த பூமரங்கள் மாவீரர் துயிலும் இல்லத்தையே ஒரு புனிதம் நிறைந்த பூங்காபோல் தோற்றம் கொடுத்து மகிழ்ந்தன. 'தம்பியவை சாப்பிடவாங்கடா சாப்பிட்டிட்டு இனிமற்ற வேலையைச் செய்வம்' என்றவாறு நடந்தார்.

சாப்பிட்டுவிட்டு மண்வெட்டியும் கூடையுமாக வந்தவர்கள் விதைகுழிகளை வெட்டத் தொடங்கினார்கள். வெட்டிக் கொண்டிருந்தவர்களின் உடலில் இருந்து சொட்டுச் சொட்டாக வியர்வைத்துளிகள் மண்ணை அடைந்தவண்ணம் இருந்தன. திடீரென சூடான நீர்த்துளிகளை உணர்ந்தாள் நிலமகள். 'ஆம் சந்தேகம் இல்லை. சூடான நீர்த்துளிகள்தான் அவை. வெட்டிக்கொண்டிருந்த போடியாரின் கண்ணீர்த்துளிகள்தான் அவை' தன்னால் இவர்களின் கண்ணீர்த்துளிகளைத் துடைக்க முடியவில்லையே என்ற கவலையுடன் தலைகவிழ்ந்தாள்.

போடியாரின் கைகள் மண்ணை வெட்டிக்கொண்டிருந்தன. கண்கள் கண்ணீர்த்துளிகளைச் சொட்டிக் கொண்டிருந்தன. மனமோ தனக்குள் போராடிக்கொண்டிருந்தது. எனது கைகளாலேயே எத்தனை பிள்ளைகளுக்கு விதைகுழி தோண்டி இருக்கிறேன். அவை அவர்களை என் கைகளால் புதைப்பதற்காக எல்லோ. அவர்கள் இளமை இன்பங்களை அறியாதவர்கள், அனுபவிக்காதவர்கள். எத்தனை தாய்மார்கள் தனது மூன்றுவேளை உணவையும் விடுத்து தன்பிள்ளைக்கு ஒருநேர உணவாகக் கொடுத்து வளர்த்தெடுத்த செல்வங்கள். தமிழ்ப் பிள்ளைகள் என்பதாலா இவர்களின் ஆயுள் இருபத்திஐந்துக்குள். இல்லை இல்லை நீ செய்வது சரிதான். நீ எங்கே புதைக்கின்றாய் விதைக்கின்றாய் எல்லோ. அவர்கள் மீளாத்துயில் கொள்வதற்கு அவர்களின் துயிலும் இல்லத்தில் பாதுகாப்பான ஓர் இடத்தைக் கொடுத்துதவுகின்றாய். அவர்கள் தமது கடமையை சரிவரச் செய்தவர்கள். அவர்களால்த்தான் எம் தமிழினமே மீண்டும் தன்னை நிலைநிறுத்தி தலைநிமிர்ந்து கொண்டிருக்கின்றது என்றது போடியாரின் இரண்டாம் மனம். வெட்டிக்கொண்டே இருந்தவர் 'அண்ண ஆழம் காணுமண்ண' என்ற குரல் மீண்டும் சுய நினைவுக்கு அவரைக் கொண்டு வந்தது.

மாலை வேளைகளில் மீழாத்துயிலில் இருக்கும் பிள்ளைகளுடன் கதைப்பதையும் அவர்களின் கடந்தகாலம் அப்படி இருந்திருக்கும், சீச்சி இப்படித்தான் இருந்திருக்கும் என்றவாறு துயிலும் இல்லத்தையே ஒரு சுத்துச் சுத்திவந்துவிடும் வளக்கமுடையவர் போடியார்.

அன்றும் அப்படித்தான் காலைநேரம் துயிலும் இல்லப் பகுதி ஒரு புனித பூமியாகக் காட்சிகொடுத்தது. போடியார் ஒவ்வொரு மாவீரனின் விபரங்களையும் நன்றாகப் பார்த்துப் பார்த்து வந்தார். அப்போது அவர் பார்த்த மாவீரனின் பிறந்ததினம் அன்றுதான். இருபத்தியோராவது பிறந்ததினம். 'என்ர அம்மாக்களும் இஞ்ச இருந்தா மற்ற அம்மாக்கள் தங்களின்ர பிள்ளையளிட்ட வாறமாதிரி வருவினம் தானே. நான் வீரமரணம் அடையேக்கையே அம்மாக்கள் ஒருத்தரும் வரேல்ல. பிறந்தநாளுக்கு எப்படி வருவினம். எப்ப என்னோட வந்து கதைக்கப்போகினம்' என கல்லறைக்குள் இருந்து ஓர் ஆதங்கக்குரல் எழுந்துகொண்டிருப்பதைப்போல் உணர்ந்தார் போடியார். அவர் கண்கள் குளமாகின. 'தம்பி நான் இருக்கிறன்ரா உன்ர அப்பா, உன்னோடையும் ஒவ்வொருநாளும் வந்து கதைக்கிறனான்தானே. இவயள் எல்லாரும் என்ர பிள்ளையள்தானே. எனக்கு எத்தின பிள்ளையள் பாத்தியா? நானும் உன்ர சகோதரங்களும் உன்னோடதானடா இருக்கிறம். என் தெய்வங்களுக்குப் பணிவிட செய்யிறத்துக்கு நான் குடுத்து வைச்சவன்ரா' எனக்கூறிக்கொண்டே மாவீரனின் கல்லறைக்கு நிறைய மலர்களைக்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# வாழ்க்கை என்பது

கொண்டு வந்து தூவி மகிழ்ந்தார்.

கண்களை இமைகள் காப்பதுபோல் தான் காத்துவரும் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்த போடியாரின் உள்ளத்தை என்னவென்று சொல்லமுடியாத ஓர் உணர்வு ஆட்கொண்டிருந்தது. றோசாச் செடிக்கு நீரை ஊற்றும்போது அருகிருந்த பூச்செடிக்குள் ஓர் அழகான பெரிய சிகப்பு றோசாப்பூ பூத்திருப்பதைக் கண்டுவிட்டார். 'எனக்கு இந்தளவு நாளும் ஒழிச்சு இருந்தனி' என்று கூறியபடி பூவைப்பிடித்துத் தடவிக் கொடுத்தார். கடந்தகால நினைவுகளில்.....

வீட்டின்முன் வந்துநின்ற ஜீப்பில் இருந்து இறங்கிய இராணுவத்தினர் வைத்ததை எடுக்கவந்தவர்கள் போல வீட்டிற்குள் புகுந்து தேடத் தொடங்கினார்கள். போடியார் அவரது ஒரே மகனான நிமல், மனைவி திலகம் மூவரும் காலைச்சாப்பாட்டுடன் இருந்தனர். பயந்துபோன இவர்கள் சுவரோரமாய் ஒட்டிக்கொண்டு நின்றனர். பெட்டிக்குள் பூட்டிவைத்திருந்த நகைகளையும் பணத்தையும் பெட்டியுடனே ஜீப்பில் ஏற்றினார்கள். மற்றையவன் போடியாரை ஏதோ சிங்களத்தில் கேட்டுப் பிரட்டி எடுத்தான். திலகம் இதைத்தடுத்து 'ஐயோ அவர அடிக்காதையுங்கோ நீங்கள் வந்த அலுவல் முடிஞ்சுதானே இனிப்போங்கோவன்' என்று குளறவே மற்றொருவன் திலகத்தின் தலைமயிரைப் பிடித்து சுவருடன் அடித்தான். அந்தச் சுவரில் மாட்டப்பட்டிருந்த நிமல் கீறி மாவட்டமட்டத்தில் முதலாம் இடம்பிடித்த சிகப்பு றோசாப்படம் விழுந்து நொருங்கியது.

திலகத்தின் தலையில் இருந்து ஓடிய இரத்தம் சிதறிய படத்தை முழுவதுமாக நனைத்துக்கொண்டிருந்தது. இவற்றைக்கண்டு கதறியபடி நின்ற நிமல் அவன் கையில் அகப்பட்ட போத்திலால் தாயை அடித்தவன்மீது எறிந்தான். அவன் மண்டையால் இரத்தம் வழிந்தபடி விழவே பின்கதவால் ஓட்டம் எடுத்தான் நிமல். மற்றைய ஆமிக்காரர் அவனை நோக்கிச் சுட்டனர். இவற்றையெல்லாம் அரைகுறை மயக்கத்துடன் பார்த்திருந்த போடியார் முழுமையாகவே மயங்கிவிட்டார்.

'வீரக்குழந்தைகளே எங்கள்....' என்ற பாடல்கேட்டு கண்களைத் துடைத்த போடியார் றோசாப் பூவிலும் கண்ணீர்த்துளிகள் இருப்பதைக்கண்டார். மெல்ல அதை ஒற்றி எடுத்தார். பின் தான் செய்யவேண்டிய காரியங்களில் இறங்கினார்.

'மலர் தூவ வாருங்கள்....' என்ற பாடல் ஒலிபெருக்கியில் அழைக்கவே போடியார் றோசாப்பூவைப் பிடுங்கிக்கொண்டு வித்துடல் இருந்த இடத்தை நோக்கி விரைந்தார். வித்துடல் வைக்கப்பட்டிருந்த பேளைக்கு அருகில்ச் சென்று மாவீரனின் முகத்தை ஒருமுறை பார்த்தவர் அப்படியே பார்த்தபடி நின்றார்.


'என்ன அப்படிப்பாற்கிறாய் அது உன் பிள்ளைதான். ஏன் சந்தேகம் இவன் உன் ஒரே ஒரு செல்வமான நிமல்தான். நன்றாகப்பார் அவன் இடது நாடியில் இரு சிறிய மச்சங்கள்' என அவரின் உள்மனம் சொன்னது. கண்கள் மாவீரனின் விபரம் இருந்த இடத்தை மொய்த்தன.

வீரவேங்கை கப்டன் சிறீதரன், கந்தப்போடியார் நிமல்ராஜ், கதிரவெளி, மட்டக்களப்பு என இருந்தது.

'தம்பி நிமல், நீ என்ர வையித்தில பாலவாத்திட்டாயடா. உன்ர அம்மாவ வீட்டுக்க உயிரோட எரிச்சவங்கள எங்கள இந்த நிலைக்கெல்லாம் காரணமானவங்கள, எங்கட இளஞ் செல்வங்களைக் கொண்டவங்கள எல்லாம் கொல்ல எனக்கு ஒரு பிள்ளை இல்லஎண்டு நினைச்சிட்டனடா. அப்பாவ விட்டிற்று இவ்வளவு நாளும் எங்கடா இருந்தனி. நான் தேடாத இடமே இல்லையடா. நிமில் நீ என்ர ஆசையை நிறைவேற்றீற்ரயடா என மௌனமாக அழுதார்.

அந்த றோசாப்பூவை மாவீரனின் காலடியில் வைத்தவர் பெரிதாகக் கத்தினார். 'நீ விரும்பிக் கீறி மாவட்டத்தில முதலாம் இடம் கிடைச்சது இந்தப் பூத்தானடா, நீ ஆசையா ஒவ்வொரு நாளும் துடைச்சுத் துடைச்சுக் கொழுவினியே அதுதானடா இது. அம்மான்ர இரத்தமும் என்ர கண்ணீரும் வேர்வையும் அது உனக்காக இப்படி மாற்றிற்றாயடா' எனக் கதறினார். சிறீதரனுடன் வந்த தோழர்களின் கண்களிலும் ஒருசில நீர் முத்துக்கள்....

வீரவணக்க நிகழ்வுகள் முடிந்ததும் வித்துடல் விதைகுழியில் இடப்பட்டது, போடியார் வெளியில் அழாதவராய் அழுதுகொண்டு மண்ணை அள்ளித்துாவினார் மகனின் வித்துடல்மீது. 'நிமல், உன்ன விதைக்க நான்தான்ரா கிடங்கு வெட்டினனான், என்ர கையாலேயே உன்ன விதைக்கவாடா நான் உன்னப் பெத்தெடுத்தனான். உன்ன இந்த நிலேல காணவாடா எங்கயிருந்தோ வந்து என்னை அறியாமலேயே இஞ்ச நிண்டனான். உன்ன எப்படியும் காணுவன் எண்டு நினைச்சன் கண்டிற்ரன்ரா வீரமகனா, மாவீரனா நீ என்ர மகன் என்ற நிலையைக் கடந்திற்ரையடா. எங்கட இனத்தின்ர காவல்த் தெய்வங்களோட நீயும் சேந்திற்ரையடா. இப்ப நீயும் எங்கட இனத்தின் ஒரு காவல்த் தெய்வம்தான்ரா' என்று உறங்கும் எரிமலையாய் நின்று கொண்டிருந்தார் போடியார்.



**போராளி க. காந்தன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# அன்றும் இருந்தார்கள் ஆனால்....

வன்னி மண்ணின் வடகாட்டுப் பிரதேசம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்துவத்தை உலகெங்கும் ஓங்கி ஒலிக்கச் செய்துகொண்டிருக்கும் அந்த தொடர்பூடகத்தின் செய்தித் தொடர்பாளருடன் அந்த உரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. உண்மையின் குரலாய் ஓங்கி ஒலிக்கும் அத் தொடர்பூடக செய்தியாளர் பல சிரமங்கள் உயிராபத்துக்கள் மத்தியில் இங்கு வந்திருந்தார். வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடை, விமான மற்றும் எறிகணைத் தாக்குதல் போன்றவற்றால் எம் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பங்களை வெளியுலகின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்ற உந்துதல் அவ் இளைஞரிடம் நிரம்பியிருந்தது.

சமர்முனைக்குச் சென்று நிலைமைகளை நேரில் தெரிந்துகொள்ளவும் அவர் விரும்பியதால், அங்கும் அழைத்துச் சென்றிருந்தோம். அன்று ஒலுமடுவில் பாரிய டாங்கி நகர்வை எமது போராளிகள் தீரத்துடன் முறியடித்து எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தி எதிர்கால டாங்கி நகர்வுகளையே கேள்விக்குறி யாக்கியிருந்தனர். இன்னும் எரிந்துகொண்டிருக்கும் எதிரியின் டாங்கிகள், சிதறிக் கிடக்கும் பெருவிருட்சங்கள், இடிந்துபோய்க்கிடக்கும் எம் காப்பரண்கள், அச்சமும் ஆச்சரியமும் அவர் விழிகளில் நிறைந்திருந்தன. அங்கு நின்ற ஆண், பெண் போராளிகளுடன் உரையாடிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். அச் சூழ்நிலையிலும் எமது போராளிகள் காட்டிய கலகலப்பை நீண்டகால காப்பரண் வாழ்வில் அவர்கள் காட்டும் உயர் தாங்குமாற்றலை காவலரணிற்கு மேலால் டாங்கிகள் பயணம் செய்யும்போதும், தளராது போரிடும் உறுதியை வழிநெடுக வியந்து பேசிக்கொண்டே வந்தார்.

வரும் வழியில் பொதுமக்கள் சிலருடனும் அன்று உரையாட வேண்டுமென்ற விருப்புக்கிணங்க சமர் முனைக்கருகே இருந்த வடகாட்டுக் கிராமத்திற்குச் சென்றோம். சமர்முனையில் தொடர்ச்சியாக எறிகணை வீச்சுகளும், துப்பாக்கி வேட்டுக்களும் இடம்பெற்ற வண்ணம் இருக்க அந்த எழுபது வயது மதிக்கத்தக்க பெரியவருடன் உரையாடல் ஆரம்பமானது. உரையாடல் பல்வேறு கோணங்களில் சென்றுகொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில் செய்தித் தொடர்பாளர் அம் முதியவரிடம் ‘அன்று நீங்கள் எல்லாம் உணர்ந்து போராடியிருந்தால் இன்று இந்த இளம் சந்ததி சுதந்திரமாய் வாழ்ந்திருக்கும் அல்லவா’ என்று கேட்டுவிட்டு அப்பெரியவரை உற்று நோக்கினார்.

சற்று நிதானித்த அப்பெரியவர் ‘தம்பி அண்டைக்கு பிரபாகரன் இருக்கேல்ல’ என்று கூறிவிட்டு மௌனமானார். இளைஞர் சற்று குழப்பத்துடன் பெரியவரை நோக்க பெரியவர் மேலும் தொடர்ந்தார். ‘தம்பி எங்களில் பலபேர் ஆயுதமேந்திப் போராடத் தயாராகத்தான் இருந்தவை. ஆனா ஒரு பிரபாகரன் அண்டைக்கு எங்களுக்குக் கிடைக்கேல்லை. இப்படிப்பட்ட ஒரு தலைவன் எங்களுக்கு கிடைச்சிருந்தா நீங்க



இண்டைக்கு சுதந்திர நாட்டிலதான் வாழ்ந்திருப்பியள்’

தொடர்பாளர் மென்று விழுங்கிக் கொண்டிருந்தார். எமக்கோ நெஞ்சமெல்லாம் பெருமையால் நிரம்பி நிமிர்ந்துவிட்ட ஒரு உணர்வு. நாம் பெரியவர்களிடம் இதே கேள்வியைக் கேட்டதுண்டு. ஆனால் இத்தனை தெளிவான, யதார்த்தமான பதிலைப் பெற்றதில்லை.

சிங்கள அரசுகளின் ஒடுக்குமுறைகள் ஆரம்பமான நாட்களில் இருந்தே எம் மக்கள் அதற்கெதிராய் எவ்வழியிலும் போராடத் தயாராகவே இருந்துள்ளனர். ஆயினும் தமிழ்த் தலைவர்கள் என தம்மை அழைத்துக்கொண்ட பிற்போக்கும், சுயநலமும் மிக்க ‘பின்கதவு’ அரசியல்வாதிகளின் தவறான கொள்கைகளும் நடைமுறைகளுமே இம்மக்களின் எழுச்சிமிக்க போராட்ட உணர்வுகளை மழுங்கடித்திருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

‘அப்பவும் எங்களில் பல பேர் ஆயுதமேந்திப் போராடத் தயாராத்தான் இருந்தவை’ பெரியவரின் அந்த வரிகளை மெய்ப்பித்து நிற்கும் சில சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தன. இவைபற்றி ஓரளவிற்கு நாம் முன்னமே அறிந்திருந்தபோதும், அண்மையில் அவற்றில் சிலவற்றை வரிவடிவில் காணமுடிந்தது.

திரு. நாராயணசாமி அவர்கள் எழுதிய ‘TIGERS OF LANKA FROM BOYS TO GUERRILLAS’ என்ற நூலில் அவற்றைக் காணமுடிகிறது. (இந்நூலில் எமக்கெதிரான அவதூறான பல கருத்துக்களும் காணப்படுகின்றன என்பது வேறுவிடயம்)

1. ‘1956இல் ஏற்பட்ட திட்டமிட்ட இனக்கலவரத்தின் பின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்புப் பகுதியில் தம்மை ஒழுங்கமைத்துக்கொண்ட ஒரு தமிழ்க் குழுவினர் சிறீலங்கா இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்’

2. ‘1958ஆம் ஆண்டு வெடித்த திட்டமிட்ட மற்றுமொரு இனக்கலவரத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் ஆகக்குறைந்தது இரு பொலிசார் கொல்லப்பட்டனர்’

3. ‘1961இல் சமஸ்டிக் கட்சியினரால் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் ஒடுக்கப்பட்டபின் மற்றுமொரு இராணுவத்தினர் மீதான தாக்குதல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது, எனினும் இதில் எவரும் கொல்லப்படவில்லை’


ஆம் அன்றும் இருந்திருக்கிறார்கள் ஆனால்......

இவைபோன்ற பல சம்பவங்கள் தமிழீழமெங்கும் நிகழ்ந்திருக்கலாம் இவைபற்றிய பூரண தகவல்களைத் திரட்டி ஆவணப்படுத்தி எம் எதிர்காலச் சந்ததியின் பார்வைக்குக் கொடுப்பது எம் முந்தைய தலைமுறையின் உணர்வுள்ள தமிழருக்கு நாம் செலுத்தும் மரியாதையாக அமையும்.

1. ‘.... a group of Tamils organised themselves and opend fire at the srilankan army in the easten district of Batticalo after the 1956 riots’

2. ‘.... killing at least two policemen in Separate attacks in Batticaloa Following another outbuist of racial in riots 1958’

3. ‘There was anct her attack on army soldiers in Jaffna after Colombo Stifled the federal party ‘Satyagraha’ in 1961 but no one was killed’



**போராளி வஞ்சியூரான்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# ஈகம்,வீரம்!

நாகக. பத்மநாதன்

ஆணவ பலம்

உலகை அடக்கி ஆளலாம் எனக் காட்டிநின்ற ஆதிக்க பலம், இப்போது விசாரணைக் கூண்டினுள் கூனித் தலைகுனிந்து நின்றது.

இறந்த அதிகாரப் பிரமுகர், எதிரே இருந்த உயர் பீடத்தில் அமர்ந்திருந்தார். இது மண்ணுலகம் அல்ல! இருள் சார்ந்தோர்க்குப் புகலிடம் கொடுக்கும் இன்னொரு உலகம்! கனதி மங்கிய இருள். இவற்றின் நடுவே வீற்றிருந்த அதிகாரி தனது கம்மிய குரலில் கேட்டார்.

'நீயும் என்னுடன் கூட இருந்தாய் தானே?'

'ஆம்' எனத் தலைகுனிந்தது பலம்.

'வேறு யார்?'

'புலனாய்வு, பாதுகாப்புப் படை வல்லமை என யாவும் சூழ்ந்து இருந்தன'

'ஆமாம், எல்லாம் எம் முகாமில் இருந்தன. எல்லாவடிவிலும் இருந்தன, இல்லாயா?' அந்தக் கேள்வியில் கேலியுடன் விசனமும்தொனிக்கிறது. மீண்டும் ஒருகணம் மௌனம். அதில், நடந்த நிகழ்வுகள் நினைவில் எழுந்து மறைகின்றன.

உச்ச உயர் அதிகாரி என்ற வகையில் இவர் தமக்குரிய அறையில் இருக்கிறார். பக்கத்தில் மெய்ப்பாதுகாவலர் சூழவும் பூரண ஆதிக்க பலம், பாதுகாப்பு. கவலையறியாத அகம்பாவ நிலை! சிந்தனை சிறகடிக்கிறது!

தமது கட்டளையின் பேரில் எழுந்த எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள் அழிக்கப்பட்ட தமிழரின் குடிமனைகள், பறிக்கப்பட்ட உயிர்கள், இவ்விதம் அந்த இனத்தை அழிக்கவே போகிறோம்...! வெல்லவே போகிறோம்! இந்தப் பரவச நிலை ஒருநொடியில் சிதறிய பயங்கர நினைவு எழுகிறது.

'என்ன நடந்தது' என, உயர் பீடத்தில் இருந்தபடியே கேள்வி எழுப்புகிறார்.

'சொல்லுகிறேன் எசமான், அந்நிய உதவி, இறக்குமதி ஆயுதம், அதன் படைபலம் எனப்பல வடிவிலும் இருந்தோம். ஆனால்...'

'ஆனால்.....?'

'அந்த நள்ளிரவில் எம் கற்பனைக்கு எட்டாத இளம் தமிழன் ஒருவன், எமக்கு மின்னாத இடிபோல ஆகினான். முகாம் அதிர்ந்தது!

வாகனங்கள் எழுந்து வீழ்ந்தன. எங்கும் தீச்சுவாலை, அவல உணர்வு. புலிகளின் சீறல்நனைந்த நிலம். விரைந்தோடும் காலடிகள். கைவிடப்பட்ட ஆயுதங்கள்! இந்த அவலத்தின் நடுவே, நீங்கள் துண்டமாய்க் கிடந்தீர்கள்' அதிகாரி தடுமாறியபடி ஒரு கேள்வியை எழுப்பினார்.

'அவன் கொண்டுவந்ததும் குண்டுதானே?'

'குண்டு மட்டும் அல்ல. அவன் வரிந்து வந்தது....'

'பயப்படாது சொல்' 'ஒரு மாவீரனின் ஈகம், வீரம்' அதிகாரி மூர்ச்சித்து மெல்லென வீழ்ந்தார். மீண்டும் இறந்தார்.

தூரத்தே, மண்ணுலகில் ஒளியொன்று தெரிந்துகொண்டிருந்தது. அது, அடிமை வாழ்வை அகற்றவந்த ஈழத் தமிழினத்தின் சுடர். மாவீரரின் ஈகம்-வீரத்தால் ஏற்றப்பெற்ற அணையாத தீபம்!

குட்டிக்கதை

சேந்தன்



# இயக்கம்

அங்கும் இங்குமாக பாறைகளில் மோதி விழுந்து எழுந்து இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கும் ஆற்று நீரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது குளத்து நீருக்கு.

தன்னைப் போன்று நிலையாக இருந்து சுகமான வாழ்வை அனுபவிக்கத் தெரியாத ஆற்றுநீருக்கு யார்தான் புத்திமதி கூறப் போகின்றார்களோ என நினைத்துக் கொண்டது.

சோவென மாரி பொழிந்தது.

பெருக்கெடுத்து ஓடியது ஆற்று நீர். வெள்ளம் புகுந்து குளத்து நீர் நிரம்பி வழிந்தது.

எதிர்பாராமல் ஆற்று நீரும், குளத்து நீரும் ஒன்றையொன்று சந்தித்துக்கொண்டன.

குளத்து நீர் தன் நீண்டநாள் அவதானிப்பை வினாவாகத் தொடுத்து நின்றது.

"ஓரிடத்தில் என்னைப்போல ஆறஅமர இருக்காமல் உன் வாழ்நாள் முழுவதும் ஓடிக்கொண்டிருப்பதால் யாருக்கு என்ன பயன் உண்டாகப்போகின்றது?"

குளத்து நீரின் குறுகிய மனப்பாங்கை நினைத்து தனக்குள் நொந்து கொண்ட ஆற்று நீர் சொன்னது.

"நண்பா! நீ ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே தேங்கிக் கிடப்பதனால், உன் கரையை அண்டியிருக்கும் மரங்களுக்கும் சிறியதொகை மனிதர்களுக்கும் மட்டுமே உன்னால் பயன்படக்கூடியவாறு இருக்கின்றது.

நானோ என்னை வருத்தி, காடு மலையெல்லாம் தாண்டி வருவதனால், நான் போகுமிடமெல்லாம் நிலம் பூரித்துப் போகின்றது. மரங்களும், செடிகளும், கொடிகளும் செழித்தோங்கி வளர்கின்றன. பெருந்தொகையான மிருகங்களும் எண்ணிலடங்காத மனிதர்களும் தம் தேவைகளை நிறைவு செய்கின்றனர். என் வாழ்வோ முடிவுறாமல் நீள்கிறது"

குளத்து நீர் தன் அறியாமையை எண்ணி வருந்திக் கொண்டது.

*"மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது" தலைவரின் கருத்துரையிலிருந்து.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# வழித்தடம்

வன்னியின் மையப்பகுதியை ஊடுருவிய எதிரி மணலாறு, ஒட்டுசுட்டான், மாங்குளம், நெட்டாங்கண்டல், மன்னார் என நீண்டு விரித்திருந்தான். வன்னியின் ஒரு பரந்த பிரதேசம் எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. பல கிலோமீற்றர் தூரம் நீண்டு வளைந்திருந்த எமது காவலரண் வரிசை எந்த இடத்திலும் உடைக்கப்பட்டு எதிரி முன்னேறலாம் என்ற நிலை அப்போது இருந்தது. ஒருசில மாதங்களின் முன்னர்தான் எதிரி பெருமெடுப்பில் மேற்கொண்ட ரணகோச-5 நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. இப்போது இராணுவம் கரிப்பட்டமுறிப்பிற்கு வடக்காக அம்பகாமம் பகுதியூடாக நகரலாம் என ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

15-10-1999 அதிகாலை வேளை, புலிகளின் படையணிகள் தற்காலிகமாக அமைத்திருந்த காவலரண் தொடரை உடைத்துக்கொண்டு சிங்களத்தின் 'வோட்டர் செட்' இராணுவ நடவடிக்கை தொடங்கியது. பெரும் படைப்பிரவாகம். பெரும் எதிர்பார்ப்போடு படையினர் உக்கிரமான அந்தச் சமரைத் தொடங்கினர். அன்றைய களச்சூழல் மிகவும் நெருக்கடியானது. மட்டுப்படுத்தப்பட்டிருந்த எமது போர் அணிகளில் பெரும்பகுதி தலைவர் அவர்களின் ஓயாத அலைகள்-3 நடவடிக்கைக்கான பயிற்சிகளிலும், தயாரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. எனினும் எதிரியின் நகர்வு ஆபத்தானது. முறியடிப்பு அவசியமானது. எனவே வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் அணிகள் களமிறக்கப்பட்டன. அம்பகாமம் வனம் பீரங்கிக் குண்டுகளால் அதிர்ந்துகொண்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகள் முறியடிப்பில் இறங்கின. இடைவிடாத பீரங்கி மழையில் நனைந்தவாறு புலிகள் சமராடத்தொடங்கினர்.

புலிக்குட்டி என்ற போராளி, சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவிற்கு மாத்திரமல்ல போராட்டத்திற்கே புதியவன். ஐந்து பேரடங்கிய ஒரு முறியடிப்பு அணியில் அவன் இருந்தான். அன்றைய சண்டையில் அவர்கள் சாதிக்க வேண்டிய இலக்கு கடுமையானதாக இருந்தது. இராணுவம் ஊடுருவிய ஒரு கேந்திரமான நிலையை அவர்கள் மீளக்கைப்பற்ற வேண்டும். எதிரியின் கைவசம் உள்ள அந்த நிலையின் அருகில் சென்ற அணிகள் எல்லாம் ஏற்கனவே எதிரியின் கடுமையான எதிர்ப்பால் சிதைக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய அவர்கள் மட்டுமே இப்போது அந்த நிலையைப் பிடிக்க வேண்டியிருந்தது.

தமது இலக்கைச் சென்றடைய இன்னமும் இருபது மீற்றர் தூரம் மட்டுமே உள்ள நிலையில் அவர்களுடைய அணியில் ஆகமொத்தம் இரண்டுபேர் மட்டுமே இருந்தனர். எதிரியின் இயந்திரத்துப்பாக்கி ஒன்று தொடர்ச்சியாக அவர்களை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தது. அந்த நிலையை கைப்பற்றினால்தான் மிகுதி முன்னேற்றம் இவர்களுக்கு சாத்தியமானது.

போரில் அனுபவமிக்க, போர்க்களங்களின் கடினங்களுக்குப் பரீட்சயமான போர் வீரர்களே திகைப்படையும் கொடிய களச்சூழல், எல்லா அணிகளும் எதிரியால் முறியடிக்கப்பட்டுவிட்ட நிலை. எஞ்சிய அணியிலும் அவர்கள் இருவர் மட்டுமே இப்போது இருந்தனர். அவர்களுக்கு பின்வாங்குமாறு கட்டளை வந்தது.


ஆனாலும், இன்னமும் அவர்களது துப்பாக்கிகள் சடசடத்துக் கொண்டிருந்தன. தொடர்ந்தும் அந்த இரண்டு வீரர்களும் முன்னேறிக்கொண்டிருந்தனர். எதிரி தனது எதிர்ப்பில் தீர்க்கமாக இருந்தான்.

'மச்சான் நான் காயப்பட்டிட்டன்'

புலிக்குட்டியின் அருகிலிருந்த அவனது கடைசித்தோழனும் எதிரியின் குண்டடிபட்டு விழுந்தான். வேதனையுடன் ஒலித்த அவனது குரலில் தன் தோழனுடன் தொடர்ந்து முன்னேற முடியவில்லையே என்ற ஆற்றாமையிருந்தது.

'பிரச்சினையில்லையடா, நான் தனியாப்போறன்'

வெடித்துச் சிதறிய எறிகணைகளின் ஊடாக புலிக்குட்டி, அந்த இளம் வீரன் தொடர்ந்தும் முன்னேறினான்.



இடைவிடாது அவனுக்குக் கிடைத்த பின்வாங்கும் கட்டளையையும் கடந்து அவனில் ஆவேசமான முன்னேற்றம் இருந்தது. தனது நிலத்தை ஆக்கிரமிப்பவனின் மீதான ஆத்திரம், எப்படியாவது, எதிரியை முறியடித்துவிட வேண்டும் எனும் உத்வேகம் அவனை அந்தக்களத்தில் வேகமாக இயக்கின. காட்டிற்கு உணர்விருந்தால் அவனின் துணிச்சலை நேரில் கண்டு சிலிர்த்துப்போயிருக்கும்.

சண்டையின் அந்தப் பொழுதுகள், சாதாரணமானவர்களால் புரியப்பட முடியாதவை. வர்ணனைக்கு அப்பாற்பட்டவை. தனியொருவனாக, எதிரியின் மூர்க்கமான எதிர்ப்புக்களின் மத்தியில் இடைவிடாத எறிகணை வீச்சுக்களின் மத்தியில் முன்னேறுவது போர்க்களத்தில் எல்லோராலும் சாதித்துவிடக்கூடியதல்ல.

இறுதியில் எதிரியின் அதே நிலைகளை வீழ்த்துவதற்கு இன்னமும் ஐந்து மீற்றர் தூரமே உள்ள நிலையில் அவன் வீழ்ந்துபோனான். பெருமைக்குரிய அந்த வீரன் திரும்பிவரவில்லை.

அவன் உயிருடன் இருந்திருந்தால் நிச்சயம் கட்டளையை மீறித் தனித்து முன்னேறிச் சென்றதற்கு தண்டனைகூட பெற்றிருப்பான். ஆனால், இன்று விசாரணைக்கு உட்படுத்த முடியாத அவனது வீரத்தை மெச்சி, பெருமை கொண்டார் அவனது தளபதி. உறுதியுடன் அவனது நாவுகள் இறுதியாகத் தன் தோழனுக்கு சொல்லிவிட்டுச்சென்ற வார்த்தைகள் மீண்டும் எம் காதுகளில் மோதி ஒலிக்கின்றது.

'பிரச்சினையில்லையடா, நான் தனியாப்போறன்'



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

பிரஜைகள் குழு வன்னிப் பிராந்தியம்
CITIZEN COMMITTEE OF VANNI REGION

– 3 –

# சிறீலங்காவில் இரசாயன ஆயுதங்கள்


கோபி அனான்

**சிறீலங்கா அரசானது தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தும் கோக்கோடு, புதிய கொடிய விளைவுகளை ஏற்படுத் தவல்ல இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளது குறித்து ஐ.நா, பொதுச்செயலாளர் கோபி அனான் அவர்களுக்கு வன்னிப்பிராந்திய பிரஜைகள் குழு அனுப்பிவைத்துள்ள கடிதம்,**

மேதகு **கோபி அனான்**
பொதுச்செயலாளர்,
ஐ.நா. தலைமைக் காரியாலயம்,
ஜெனீவா.

மேன்மை தங்கிய ஐயா!

சிறீலங்கா அரசாங்கம் சர்வதேசக் கோட்பாடுகளை மதித்து, ஜனநாயக நல்லாட்சி நடாத்தும் ஓர் நாடு என்று உலகிற்குக் காட்டிவருவதால், உலக நாடுகளும் இந்நாட்டுக்கு பல விதத்திலும் உதவி வருகின்றன. ஆனால், இவ்வரசாங்கம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை வருத்தத்தோடு, பல வழிகளில் உள்நாட்டிலும், வெளியிலும் ஸ்தாபனங்கள் மூலமும், ஊடகங்கள் மூலமும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலமும் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றது. தமிழரின் விடுதலை இயக்கத்தின் பிரதிபலிப்பே தமிழீழ விடுதலைப் புலிகள். இது தமிழரின் நம்பிக்கையை இழந்த அரசாங்கத்தின் தோற்றுவிப்பே ஆகும். இதை உலகம் உரிய முறையில் விளங்கிக் கொள்ள மறுக்கின்றது.

உண்மையிலேயே தற்போது இலங்கை அதிபராக இருக்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994இல் தேர்தல் பிரச்சாரத்தின்போது, முன்னைய அரசாங்கங்களினால் தமிழர்கள் கீழ்த்தரமாக நடாத்தப்பட்டார்கள் என்ற உண்மையை ஒத்துக்கொண்டு ஆட்சிக்கு வந்தார். முன்னைய அரசாங்கங்கள் என்று அவர் குறிப்பிட்டது. அவரது தந்தையும், தாயும் அங்கம் வகித்த கட்சியினால் ஏன் அவர்கூட தற்போது அங்கம் வகிக்கின்ற கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமே. அன்று அவர் நீதியும் அர்த்தமும் உள்ள விதத்தில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையினால்தான் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படலாம் என அறிவித்திருந்தார். மறுபக்கத்தில் தற்போதைய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி முதலாக அதே கருத்துக்களை தேர்தலின் போது வெளியிட்டது. ஆனால், யதார்த்தமாகப் பார்க்கும்போது இரு கட்சிகளுமே பதவிக்கு வந்ததும், தாங்கள் சூளுரைத்த மேற் குறிப்பிட்ட தீர்மானங்களை குப்பைக் கூடையில் வீசிவிட்டு, தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டிவிடுகிறார்கள். விடுதலைப் புலிகளோ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு சமாதானப்பேச்சுவார்த்தைகள் அர்த்தமுள்ள விதத்திலும், புரிந்துணர்வோடும் நடாத்தப்படவேண்டும் என்பதை எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு, அமெரிக்க, பிரித்தானிய, இந்திய, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஆசீர்வாதத்துடன் நோர்வேயின் எரிக் சொல்கைம் தொடக்கிவைத்த சமாதான முயற்சியின் முதற்படியாக விடுதலைப் புலிகள் அறிவித்த நான்குமாதகால ஒருதலைபட்ச யுத்தநிறுத்தமேயாகும். இந்த நல்லெண்ண சமிக்ஞையை தந்திர புத்தியுள்ள சிறீலங்கா அரசு தனக்குச் சாதகமாகப் பாவித்து, தனது யுத்த களத்தைத் தயார்படுத்தி 'அக்னிகீல' (தீச்சுவாலை) என்ற பெயரிட்டு பாரிய படை நடவடிக்கையை மேற்கொண்டது. இதுபோன்ற பல படை நடவடிக்கைகளினால் சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞையை உதாசீனம் செய்து அவர்களை அவமதித்தது. விடுதலைப் புலிகள் தாங்களே தங்களுக்கு விதித்துக் கொண்ட யுத்தநிறுத்த தர்மத்தின் மூலம் பல உயிரழிப்புகள் முதலாக அவர்கள் சந்திக்கநேரிட்டது. அதுமட்டுமல்ல வழமை போல பல தமிழ்க் குடியிருப்புக்கள் பாழாக் கப்பட்டது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த ஆகஸ்ட் 12ஆம் திகதி 2001, சண்டே லீடர் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. அதாவது, சிறீலங்கா இராணுவம் இரகசியமான முறையில் PRO-A ஸ்மெல் ரொக்கட் என்ற இரசாயன ஆயுதத்தை கொள்வனவு செய்திருக்கின்றது என்பதே யாகும். அதைத் தொடர்ந்து வந்த செய்திகளான இராணுவப் பேச்சாளரின் உரை இக்கொள்வனவை உறுதி செய்திருக்கின்றது. இதைப்பற்றிய ஊழல்கள் வெளிவந்தன. படைகளின் அதி உயர் தலைவரான நாட்டின் அதிபரும் இதையெல்லாம் அறிந்திருந்தார். இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது இந்நாட்டின் அதிகாரத்தில் இருப்பவர்களின் மேல் உள்ள நம்பிக்கை அற்றுப்போகின்றது. எதிரிடையாக ஆனால், இந்நாட்டின் ஊடகங் களின் வழமைப்படி இரகசிய கொள்வனவில் நடந்த ஊழல் பற்றி ஆர்ப்பாட்டம் செய்தனவே அல்லாமல், அந்த ஆயுதத்தின் பாவனையால் பாதிக்கப்படப்போகும் தமிழ் மக்கள் பற்றி மௌனம் சாதித்துவிட்டனர். இவ்வாயுதம் பாவிக்கப் படப்போகும் யுத்த களத்தில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய தமிழர்களைப் பற்றி தற்செயலாகக்கூட குறிப்பிடாதது மட்டு மல்ல, தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதங்களைப் பாவிப்பது, பல சர்வதேச சட்டதிட்டங்களை மீறுவதைக்கூட இவைகள் குறிப்பிடவில்லை. இவை இரகசியமாக பெறப்பட்டதனால், சர்வதேச புலனாய்வு முகவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை என்று எம்மால் நம்பமுடியாது. ஏனெனில், இதை ஒத்த பிறசம்பவங்களில் குறிப்பாக ஐ.நாவும் பரவலாக சர்வதேச சமூகமும் தடைகளும் கட்டுப்பாடுகளும் கொண்டு வந்ததை நாம் நன்கு அறிவோம்.

சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாக வெளியே காட்டிக்கொண்டு இப்படியான கொடூரமான யுத்த குற்றச் செயல்களில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

சிறீலங்கா அரசு ஈடுபடுவது தமிழ் மக்களை ஏமாற்றத்திற்கும், சினத்திற்கும் உள்ளாக்கி இருக்கின்றது. இதில் சர்வதேச சமூகம் மௌன பார்வையாளர்களாக இருப்பது மேலும் தமிழர்களின் சினத்தை அதிகரிக்கின்றது.

சிறீலங்கா அரசு இரசாயன ஆயுதங்களை ஆயுத அட்டவணையில் சேர்த்துக் கொள்ளப்படுவது இதுதான் முதற் தடவையல்ல என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். 1990 தொடக்கத்தில் சிறீலங்கா வான்படை 'நம்லம்' என்ற இரசாயனக் குண்டுகளை வீசி தமிழர்களையும் பாதுகாக்கப்பட்ட காடுகளையும் தமிழ்ப் பிரதேசங்களில் அழித்ததை ஞாபகப்படுத்துகின்றோம். இத்தருணத்தில் சிறீலங்கா வான்படையின் கீழ்த்தரமான செயல்களையும் நாம் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். பீப்பாய்களில் கழிவுப் பொருட்களை அடைத்து அவற்றை தமிழ் குடியிருப்புக்களின் மேல் யாழ்ப்பாணத்தில் குண்டுகளாகப் போட்டன. இதனால் ஏற்படக்கூடிய தொற்றுநோய்களைத் தடுப்பதற்காக இவற்றை அப்புறப்படுத்த நகர சபைகளுக்கு பல நாட்கள் பிடித்தன.

அரச பேச்சாளர், சிறீலங்கா, இராணுவத்திடம் இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன ஆனால் அவற்றைப் பாவிக்கப் போவதில்லை எனக் கூறியிருப்பது ஆச்சரியத்திற்குரியது. வெற்றுக்கஜானாவுடைய ஒரு ஒட்டாண்டி அரசாங்கம் தகைமையற்ற ஒரு இராணுவத்தை வைத்து போராடும் அரசாங்கம் சர்வதேச சட்டங்களையும் மீறி இரகசியமான முறையில் இந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்து, தனது ஆயுதக்குதத்தில் அடுக்கியிருக்கின்றனவென்றால் அதனைப் பாவியாது அழகு பார்ப்பதற்கு என்று அரசு சொல்ல அதை நம்புவதற்கு தமிழர்கள் புத்தியற்றவர்கள் அல்ல.

சிங்கள-பௌத்த பேரினவாதம் மட்டுமே நிலைக்கும் மற்றவை எல்லாம் அழிந்தொழிந்து போகும் என்ற நிலைப்பாட்டை எமக்கு வெளிப்படுத்துகின்றது.

எனவே இவ்விடயத்தில் தலையிட்டு தமிழ் மக்களை அவர்களின் இன ஒழிப்பிலிருந்து காப்பாற்றவும், அவர்களுடைய சுதந்திரத்தையும், தன்மானத்தையும் உறுதிப்படுத்தவும் ஆவன செய்யவேண்டுமெனவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றியுடன்,

தலைவர்,
அருட்பணி **M.X. கருணாரத்னம்.**



# விடியல்

**இருள் திரை போர்த்திங்கு
நில மகள்
மாசுப்பாதங்கள் பதிந்து
நொந்து போயுள்ளாள்.
ஒரு கூட்டில் பொரித்து
கூடியிருந்த குஞ்சுகள்
திக்கொன்றாய்.
விடியலின் அறிகுறி
சேவலின் கூவலில் அல்ல
கதிரவனின்
இளஞ் சூட்டுக் கதிர்களிலுமல்ல
ரீங்காரமிடும்
சிட்டுக் குருவிகளின்
சிறகடிப்பிலுமல்ல
கனத்த இருளின் கருக்கலில்
காலடிகள் சில கரைதேடி
காவியங்கள் ஆகும்
இவை உண்மை
விடியலுக்காக.**



அ. பிலோமினா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# காவல்

விழுக்குளத்துப் பறணை சம்பவம்-6

வன்னிக் கிராமங்களுக்கே உரித்தான ரம்யமான விடியல் ஒன்று. சூரியனின் மஞ்சள் கதிர்கள் வெண்பனி படர்ந்த பச்சைப் புல்மீது பட்டுத்தெறிக்கின்றன. கிராமங்களின் செல்வங்களான கால்நடைகள் ஒழுங்கையை நிரப்பிக்கொண்டு, 'உங்களுக்கு எல்லா நேரமும் வழிவிட முடியாது' என முரண்டு பிடிப்பதுபோல் நின்றுகொண்டிருந்தன. மாடுகளின் முதுகில் வாஞ்சையுடன் தட்டியபடி, தனக்கிட்ட வேலையை எப்படிச் சுலபமாகச் செய்துமுடிக்கலாம் என்று சிந்தித்தபடி, எமது தோழன் ஒருவன் சென்று கொண்டிருக்கிறான்.

'சூய்... சூய்... சூய்... சூய்'

சற்றுத் தள்ளி ஒரு பெண்ணின் ஆடு மேய்க்கும் சத்தம். சத்தம் வந்த திசையைப் பார்க்கிறான். ஆடுகளையோ... மாடுகளையோ காணவில்லை. வேலிக்கப்பால் இருந்து ஆடு மேய்க்கும் சத்தம் விட்டுவிட்டுக் கேட்கிறது. ஜனசந்தடி மிக்க நகர்ப்புறத்தில் பிறந்து வளர்ந்த அந்தத் தோழனுக்கு இவை எல்லாம் சுக அனுபவங்கள். இயற்கையை ஒட்டிய மனிதனின் வாழ்க்கை அந்த நகர்ப்புற இளைஞனுக்கு சுகந்தமான காட்சி. ரசித்தபடி நடக்கிறான் மீண்டும்...

'சூய்... சூய்... சூய்... சூ...ய்'

மிகவும் நெருங்கிய நிலையில் அந்தச் சத்தம்.

உன்னிப்பாக அவதானிக்கிறான். அடைக்கப்படாமல் கிடந்த அலம்பல் வேலிக்கு மேலால் ஒரு 'ஆச்சி' தெரிந்தாள். தன்னுடைய அம்மாவை நினைத்துக்கொண்டு கேட்டான்.

'என்ன ஆச்சி! ஆடோ கலைக்கிறியள்?'

'சூய்.. சூய்.. சூய்சூய்... சூய்'

இப்பொழுது, அந்தக் குரலில் ஒரு பதற்றம் தெரிந்தது. அந்தச் சத்தத்துக்கூடாக ஒரு செய்தி அனுப்பப்படுகிறதா எனச் சந்தேகித்தவாறு, நடையை நிறுத்துகிறான். ஆச்சியினுடைய முகம் ஏதோ ஒன்றைச் சொல்ல அவசரப்படுகின்றது. தன்னுடைய தலையைத் தடவுவதுபோல் பாசாங்கு செய்துகொண்டு கையைப் பின்புறமாகக் காட்டி 'ஆமி' என வாயசைத்தாள்.

நிலைமையைப் புரிந்துகொண்ட எமது தோழனின் கண்கள் பாதையைத் துழாவுகின்றன. சற்றுத் தள்ளி இருந்த பாலை மரத்திற்குப் பின்னால் நிலை எடுத்துக்கிடக்கும் இந்திய இராணுவத்தின் இரும்புத் தொப்பி தெரிகின்றது.

நிதானமாகத் திரும்பி வந்த வழியே நடக்கிறான்.

'சூய்... சூய்... ய்.... சூ....ய்'

இப்போது ஒரு புதிய இராகத்துடன் ஒலிக்கும் அந்தக் குரலில் ஓர் ஆத்ம திருப்தி தென்படுகின்றது!





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# ஓர் இரவு



அமைதியான அதிகாலை. அன்றைய காலைமட்டும் ஏனோ ஓர் மயான அமைதியாய்.... விடியலில், வேலைக்காகப் புறப்பட்ட பாதங்கள் மீண்டும் தத்தம் வீடுகளிலேயே விரைவுடன் புகலிடம் தேடிக்கொள்கின்றன.
அண்மைக்காலமாக வேட்டுக்களுடன் கண்விழிக்கும் சாவகச்சேரி நகர், அன்று மட்டும் இரைதேடி வந்த 'அமைதிக்' கும்பலினால், ஓசையின்றி முற்றுகையிடப்பட்டது. முற்று முழுதான முற்றுகை.
சப்பாத்துக்களின் சீரான ஓசை. அரவம் கேட்டு விழித்த நாய்கள், பச்சைத் தொப்பிகளைக் கண்டதும் அமர்க்களமாகக் குரைக்கத் தொடங்கின. மக்கள் கிலிகொண்டு வீடுகளினுள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். அமைதிகாக்க வந்தவர்களினால் அன்றும் அமைதி சூறையாடப்பட்டது.
முற்றுகையில் அகப்பட்ட மூன்று விடுதலைப் புலிகள், பாய்வதா பதுங்குவதா என யோசித்தார்கள்.



பாதுகாப்பிடம் ஒன்றில் தயார் நிலையில் பதுங்கியிருந்தனர்.
மதியவேளையாகிக் கொண்டிருந்தது.
திடீரென்று, சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள். அதைத் தொடர்ந்து மக்களின் பீதி நிறைந்த ஓலம். அந்த நேரத்தில்......
'தம்பி...' ஓர் குரல்.
'இந்த நேரத்தில் யார்?'
ஓர் எச்சரிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் சிறிது நேரம் காத்திருந்தவர்கள், மெதுவாக எட்டிப் பார்த்தார்கள். யாரையும் காணவில்லை. ஆனால், சிறியதோர் பானையில் குத்தரிசிப் 'புக்கை' மட்டும் இருந்தது.
புரிந்துகொண்டனர். பசிக்களை தீர்ந்தது.
இடைக்கிடை கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையும், மனித வதையின்போது கேட்ட ஓலங்களையும் தவிர இப்போது வேறு ஓசையில்லை.
பொழுதுசாயும் நேரம் மீண்டும்...
'தம்பி ...'
அதே குரல்.
'அவங்கள் போட்டாங்கள்'
ஒருவித ஆவலுடன் எட்டிப்பார்த்தபோது.... ஓர் முதியவர்
'தம்பியவை சாப்பிட்டியளோ...? குறை விளங்காதேயுங்கோ. என்னால ஏலக்கூடியது இவ்வளவுதான் ராசா'
கண்கள் பனிக்க... 'குறையோ! என்ன ஐயா இது...?'
கைகூப்பி விடை பெற்றபோது மகாகவி பாரதி நினைவுக்கு வந்தான்.
'தழல் வீரத்தில், குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ...'
தள்ளாடும் வயது வரினும் மனிதநேயமும் விடுதலை உணர்வும் மறைந்திடுமோ என்ன?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

அ,அன்ரனி

# இன ஒடுக்குமுறையின் வடிவமாக ஏவப்பட்டுள்ள

பாலியல் பலாத்காரம் என்பது தனி மனிதனொருவனால் அல்லது ஒரு குழுவால் ஒரு பெண் மீது அல்லது ஓர் இனப் பெண் சமூகத்தின் மீது பிரயோகித்து முடிவடைந்து போய்விடும் சாதாரண நிகழ்வல்ல. அதேவேளை, இப்பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடும் இராணுவ வீரனின் அன்றி தனிமனிதனின் சுய உள்ளக் கிடக்கையாக வெளிப்பட்டு நடத்தப்படுகின்ற கொடூரங்களாகவும் இருப்பதுமில்லை. ஏனெனில், விடுதலைப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற மக்கள் இனமொன்றினை ஆயுத முனைகொண்டு முடக்கிவிட கங்கணம் கட்டி நிற்கின்றன பேரினவாத அரசுகள். ஆயுதக் கலாச்சாரத்தை கண்டஞ்சாது விடுதலைப் போரில் வீறுநடை போடுகின்ற அந்த மக்கள் சமூகத்தின் மீது பல்வேறு வழிகளில் வன்முறைகளைப் பிரயோகித்தும் வருகின்றனர். இப்பேரினவாத அரசின் படைகளினால் பெண்கள் சமூகத்தின் மீது பிரயோகிக்கப்படுகின்ற அதி உயர் வன்முறை வடிவமொன்றாகவே பாலியல் பலாத்காரம் விளங்குகின்றது.

தமது தரப்பு ஆட்சியின் விஸ்தரிப்பை நோக்கமாகக்கொண்டு இன்னொரு நாட்டின் மீது தொடுக்கப்படுகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின்போது, இம் மனிதக் காடைத்தனம் மிகக்கூடுதலாக அரங்கேற்றப்படுகின்றது. இன்னொருபுறம் பேரினவாத அரசுகளின் அடாவடித்தனங்களுக்கு எதிராகவும் இழந்த தம் சுயாட்சியை மீளமைப்பதற்காகவும் முன்னெடுக்கப்படும் விடுதலைப் போராட்டங்களை நசுக்கவுமெனக் கூறிக்கொண்டு அந்தந்த நாட்டு அரச படைகளால் 'சர்வதேசக் குற்றங்களில் முதலிடம் வகிக்கின்ற பாலியல் பலாத்காரங்கள்' அதிகளவில் நிகழ்த்தப்படுகின்றன.

உலக வல்லரசு நாடுகளால் பயிற்றுவிக்கப்பட்டு ஆக்கிரமிப்புக்கென அனுப்பப்பட்ட படையினரால் பல்வேறு நாடுகளில் இவ்வகையான பாலியல் பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான பெண்கள் இன்னும் மாறாத வடுக்களாக தமது மனங்களில் இக்கொடூரங்களைச் சுமந்தபடி வாழ்கின்றனர். பல வருடங்களுக்கு முன்பு பாதிப்புக்குள்ளான ஆயிரம் ஆயிரம் பெண்கள் இன்னும் அந்தந்த நாட்டு அரசுகளுக்கெதிராக எதிர்ப்புக்குரல்கள் கொடுத்தபடியும், நீதி நியாயத்தை எதிர்பார்த்தபடியும் வாழ்கின்றனர்.

மேற்படி வழிவகைகளை அடியொற்றிய படிதான் சிங்களப் பேரினவாத அரச படையும் செயற்படுகின்றது. இப்படியாக தமது அரசியல் அபிலாசைகள் நிறைவேற வேண்டும் என்பதற்காக குறுக்கு வழியில் சிந்தித்து, போராட்டத்தை தெரிந்தெடுத்த தமிழினத்தின் மீது வன்முறைகளைப் பிரயோகித்தபடியிருக்கின்றது சிங்களப் பேரினவாதம். போரியல் வரலாற்றில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற பலாத்கார வெறியாட்டங்களின் அந்த நாட்டுப்படைகள் மேற்கொண்ட பலாத்காரங்கள் போன்று சிங்களப் படையினரும் செயற்பட சிங்கள அரசு மறைமுகமாக அனுசரணை வழங்கி வருகின்றது. ஏனெனில் வெளிவரும் மேற்படி பாலியல் பலாத்கார சம்பவத்தோடு, தொடர்புடைய படையினர் மீது மென்போக்கை சிறீலங்கா அரசு கடைப்பிடித்து வருவதோடு, வேண்டுமென்றே இவ் வழக்குகளை காலம் தாழ்த்தி இழுத்தடிப்பது, தகுந்த ஆதாரங்கள் இல்லையெனக்கூறி வழக்குகளை நிராகரிப்பது, இப்படியாக படையினரால் நிகழ்த்தப்படுகின்ற வன்முறைப்போக்குக்கு இசைந்துகொடுப்பது, போன்றதானதொரு நிலைப்பாட்டுடனேயே சிங்கள அரசு நடந்துகொள்கின்றது.

ஆயினும் இவ் இழிசெயல்களைக் கண்டித்தும், நீதி விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் எழுகின்ற கண்டனங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுமுகமாக சிறு கண்துடைப்பு முயற்சிகளாக பலாத்காரத்தில் ஈடுபட்ட படையினரை இடம்மாற்றுவது, பணி நீக்கம் செய்வது, கட்டாய விடுமுறையில் அனுப்புவது எனும் நடவடிக்கைகளோடு மாத்திரம் அரசினது நடவடிக்கைகள் முடிவடைந்து விடுகின்றன.

இவ்வாறு சிறீலங்கா அரசு காட்டுகின்ற பச்சைக்கொடி அசைப்பானது சிங்கள இராணுவத்தினர் மத்தியில் பாலியல் வன்முறைகளைத் தொடருகின்ற மனப்பாங்கை ஆழவேரூன்றி விடுகின்ற நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. எனவே அரச அனுசரணையுடன் பாலியல் வன்முறை படையினரால் ஒப்பேற்றப்படுகின்றது. பாதுகாப்புப் படையினர் என்ற போர்வையில் எமது தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்திருக்கும் சிங்களப்படையினரது இவ் அத்துமீறல்களினால் தமிழ்ப்பெண்களது பாதுகாப்பானது கேள்விக்குரியதொன்றாக மாறிவருகின்றது.

இன்றைய உலகில் அரைப்பங்குக்கு மேல் பெண்கள் சமூகமானது உள்ளது. இவர்கள் மீது அடக்குமுறையாளர்கள் அதி உயர் வன்முறை வடிவமாகிய பாலியல் பலாத்காரத்தை பிரயோகிப்பதன்மூலம் பாதிக்கப்படும் அப்பெண்கள் சார்ந்திருக்கும், மக்கள் இனம் முன்னெடுக்கும் விடுதலைப் போரின்பால் பல தடுமாற்றங்களை ஏற்படுத்திவிடலாமென எண்ணுகின்றனர். விடுதலைப் போரை தேவையற்ற ஒரு போராக கொச்சைப்படுத்தி இதனாலேயே தேவையற்ற இழப்புகளும் பாலியல் பலாத்காரங்களும் இடம்பெற வழிவகுக்கின்றன என தமது தரப்பு வன்முறைகளுக்கு வடிகால் தேடிக்கொள்கின்றனர். எனவே மேலும் போரை முன்னெடுக்காவண்ணம் பிழையானதொரு கற்பிதத்தை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# பாலியல் வன்முறை



உண்டுபண்ணி புனிதப் போரிலிருந்து விலகிக்கொள்ளுமாறு போராடும் மக்களினத்தை வற்புறுத்துவது என இவர்களது சிந்தனையோட்டம் விரிவடைகின்றது. இவ்விதமான நடவடிக்கைகளையே சிங்கள அரசும் அப்படியே அடியொற்றியபடியுள்ளது.

இதுதவிர விடுதலைப் புலிகளோடு போரிட்டு தோல்விகளை அடிக்கடி சந்தித்து விரக்தியின் விளிம்புக்குச் சென்றுவிடுகின்றனர் படையினர். தொடர்ந்தும் இவர்களை வைத்தே தமது உள்ளக்கிடக்கையான 'போரின் மூலமே தீர்வு' எனும் எண்ணக்கருவுக்கு புத்துாக்கம் கொடுக்கவேண்டும் என்பதை நன்கறிந்து வைத்திருக்கின்றது சிங்கள அரசு. எனவே, படையினர் புரியும் வன்முறைச் செயல்கள் எதனையும் கண்டுகொள்ளாதிருப்பதால் லாபகரமாக தனது நோக்கங்களை நிறைவேற்றிவிடலாமென நினைக்கின்றது. அதாவது வன்முறைச் செயல்களைக் கண்டிக்கும்போதும், படையினர் மீது நடவடிக்கைகளை எடுக்கின்றபோதும், அவர்களது மறைமுக எதிர்ப்பு கிடைக்கக்கூடுமென அது அஞ்சுகின்றது.

அத்துடன் சிங்களப் படைத்தரப்பால் தமிழீழப் பெண்கள் மீது இழைக்கப்படும் மேற்படி வன்முறைகள் யாவும் அமுலிலுள்ள செய்தித் தணிக்கை மூலம் வெளித்தெரியாவண்ணம் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விடுகின்றன. இன்னொரு விதமாகவும் இக்கொடுமைகள் வெளிக்கொண்டுவரப்படாது இருப்பதாக செய்தி ஊடகங்கள் பலவும் சில பெண்கள் அமைப்புகளும் குறைபட்டுக் கொள்வதை அன்றாடச் செய்தி ஊடகங்கள் மூலமும் நாம் அறிகின்றோம்.

பலாத்காரத்தில் ஈடுபடுகின்ற படைத்தரப்பு மீதும், கண்டுகொள்ளாதிருக்கும் அரசுமீதும் வெறும் கண்டனக் குரலை மாத்திரம் பிரயோகித்துவிட்டு தப்பித்து விடுகின்றன. பெண்கள் அமைப்புகள் சிலதும், நிறுவனங்களும், பெண்கள் பாதுகாப்பென்றும், பெண்ணுரிமையென்றும் கூறித்திரியும் இவர்கள், பாதிக்கப்பட்ட பெண்கள் விடயத்தில் அதீத அக்கறையெடுத்து நீதி கிடைக்க வழிவகுக்கின்றார்களா என்றால் எதுவுமேயில்லை. வெறும் ஆய்வுகளோடும், தேடல்களோடும் நின்றுவிடும் இவர்களது இலக்குகளாக, விருதுகளும், விலாசங்களும், விளம்பரங்களுமாகவே இருப்பதுதவிர வேறு எதனையும் சாதிக்கவில்லையென இலங்கையிலுள்ள பல செய்தி ஊடகங்களும், மக்களும் குறைபட்டுக்கொள்கின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதொன்று.

எனவே வெளிநாட்டு அமைப்புகளினதும் பெண்கள் அமைப்பினதும் அனுசரணையால் தமது பாதுகாப்பு பலப்படுத்தப்படுமெனவும் இவர்கள் தலையீட்டால் நீதி கிடைக்குமெனவும் எதிர்பார்ப்பதானது தவறாகும். எமக்கான பாதுகாப்பையும், சுதந்திரத்தினையும் உறுதியாக்கும் போதில்தான் அது கைகூடும். எனவே தமிழீழப் போரின் சுழற்சியில் கணிசமான பங்கை ஆற்றிவரும் தமிழீழப் பெண்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக போரின்பால் சார்ந்திருக்கும் போதில் அவர்களது பாதுகாப்பானது பலப்படுத்தப்படும், முற்றுமுழுதாய் உறுதிப்படுத்தப்படும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# சிரம் தாழ்த்தா வாழ்வே

ஈழத்தமிழினமே! முதலில்
அழுவதை நிறுத்து
உனக்கானது ஒப்பாரியல்ல
பாலைவனத்தில் பாலூறாவிடினும்
பாதையிடையில் சோலை
வருமென நம்பு.
இழவு காத்தலை உன்
அகராதியிலிருந்து எடுத்தெறி
கண்ணீரை விரல்நுனியிலெடுத்துச்
சுண்டிவிடு
வாழ்விடிந்து போனதென
வாசலிற் கட்டிய
சோக தோரணங்களை அறுத்து
விழுத்து.
முகிலுரச நிமிர்ந்திருந்த தலை
கவிழ்ந்து
நிலம்பார்த்து உலவுவதை
நிறுத்திவிடு
என்ன நடந்ததெனத் துன்பப்பூ
சூடியுள்ளாய்
விண்ணிடிந்தபோதும் தாங்கும்
வீரியனே!
சின்னப் புண்ணின் வலிக்காகவா
சிரிப்பிழந்து போனாய்?
ஒரு சிறகுதிர்ந்து போனதுக்காக
ராஜபறவைகள் சோககீதம் பாடுமா?
கோட்டை மதில்களைக் குண்டூசியா
துளையிடும்?
எத்தனை துயர்வரினும்
எதிர்கொள்ளப்பழகு
உள்ளெரியும் கோபத்தீ கிளறி
ஒரு பொறியெடுத்து வாசலை
ஒளிசெய்வாய்
புயலின் வலியனே!
உன்னையெவனடா
பூட்டியடைக்க முடியும்?
பாவியரால் ஜீவிதம் கொஞ்சம்
பழுதானதென்னவோ உண்மைதான்
அதற்காகக் கேவியழுவதால்
ஒன்றும் கிடைக்கப்போவதில்லை.
கோடையில் இலையுதிர்ந்து
குற்றுயிராகும் மரங்கள்
வைகாசி வந்ததும் பூப்படைந்து
புன்னகைக்கவில்லையா?
மரங்களிலிருந்து உன்மனதுக்கு
வைரம் பாயட்டும்.
இந்த மண்ணின் முந்தை
வழித்தோன்றல்கள் நாம்
சிங்களத்தின் வருகைக்கு முன்னரே
சிரசில் முடிதரித்த வம்சமெமது
தாமிரபரனிக் கரையில்
தளைத்திருந்த வேரே!
கதம்பநதி தீரத்தில் காற்றளைந்த
தேரே!
எல்லாமும் இன்றிழந்து
போனாயெனினும்
மீண்டும் தொடங்கும் மிடுக்குளாய்
நீ.
பூண்டும்; புல்லுமல்ல நீ பொசுங்கிப்
போவதற்கு
வெளியே வா சிறுத்தையே!
உன் மூச்சின் வீச்சில்
முனையிருந்த
வாழ்வு முளைக்கட்டும்
அகதிக்குடியிருப்பும்
நிவாரண வரிசையும்
குண்டும் குழியுமான
செம்புழுதித்தெருவும்
இயல்பிலிருந்து உன்னை
இல்லாமற் செய்யுமா?
உலையேறா அடுப்புகளின்
அவலக்குரலில்
நீ வேரிழந்து விழுந்துவிடுவாயா?
ஊர்போகும் ஏக்கத்தில் உருகி
எலும்புருக்கி நோயென இடிந்து
போவாயா?
அட; பஞ்சபூதங்களனைத்திலும்
பலவானே!
தமிழரெனும் சூரியக்குடும்பத்தின்
தோன்றலே!
கவலைக்கு முச்சை கட்டிக்
காற்றிலேற்றடா
நம்பிக்கை நூலில் விண்கூவட்டும்
பட்டம்.
பேச்சுவார்த்தை மேசையிற் கசியும்
சலுகை நீரில்
நாக்கு நனைக்கலாமென நம்பாதே
பூதகிகள் இப்படித்தான் பால்
கொடுக்க வருவார்கள்
ஒப்பனைக்குக் குடிப்பதுபோல்
இருக்கலாமே தவிர
அற்புதமான ஆகாரமென
அருந்திவிடாதே.
விமானமேறி வரும் வெள்ளை
மரங்களின் நிழலில்
சுகமான தூக்கம் வரமெனும்
கனவில் மிதக்காதே.
நம்பிக்கையில்லாத் தீர்மானம்
வாக்கெடுக்கும் போதில்
வென்றாலும், தோற்றாலும் உன்
விதியழியமாட்டாது





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# எமக்கான சிம்மாசனம்



போராட்டமே உனக்கு வாழ்வெழுதி
வழிகாட்டும்
போராட்டமே உனக்கு
இழந்தவையை மீட்டு முடிதரிக்கும்
ஆனையிறவுக் கதவுகளின்
அகலத்திறப்பு
எமக்கு வாழ்வுவசமாகுமென்பதற்கான
அடையாளம்
கனவின் மீதியையாவது கவனமாகப்
பொத்திவை
அதிலிருந்து தான் உனக்கான
அழகு
துளிர்க்கப்போகிறது.
பிரபாகரன்
காலமெமக்குக் கைக்கணக்கில் வீசிய
தலைவனல்ல
இவனே காலத்தைப்
படைப்பானெனச்
சொல்லியனுப்பிய பிள்ளை
தளராத உறுதிக்குச்
சான்றென்றிருக்கட்டுமென
இரண்டு நூற்றாண்டுகளுக்குமான
நியமனம்
இதுவெறும் புகழ்பாடும்
விருத்தமல்ல
காலக்குரலறிந்த வியாசனின்
கணிப்பு.
உலகத்தமிழினமே!
உனக்கான வாழ்வின் வசந்தம்
பிரபாகரனென்ற பெயரில்தான்
உலவுகின்றது
கண்டுகொண்டாயானால் காரியம்
சித்திக்கும்
தவறவிடுவாயானால் தத்தளிப்பாய்
நீ வீட்டிற் சும்மா நீட்டிப்படுத்திருக்க
விடுதலையுந்தன் கட்டிலருகே வந்து
கண் திறக்கமாட்டாது
போராடிப் பெறுவதற்குத்தான்
விடுதலையென்ற பெயர்.
பாராளுமன்றில் தருவது பாதியுண்ட
மீதிச்சோறு
அதைவாங்கித் தின்னவா
ஆசைப்படுகிறாய்?
அட எச்சிலுண்ட வம்சமல்லடா
எமது.
எத்தனை உதரக்கொடிகளைப்
புதைத்துவிட்டெழுந்தோம்
வெறும் புல்முளைக்கவா
விதைத்தோம்?
வாழ்வின் அனைத்தையும்
போருக்களித்து
வதையுண்ட பின்னும்
தாழ்வின் படுக்கையிலா
தலைசாய்க்க விரும்புவாய்?
திசையாவும் எம்வசமாகும் காலமிது
பூமிப்பரப்பெங்குமிருந்து எமக்குப்
புதுரத்தம் பாய்கிறது
சோர்வுனக்கு ஆகாது இப்போது
நிலவு தூறும் ஒளிமழையிறங்கி
எம்பூமி சௌந்தர்யா பூசிக்கிடக்கிறது
எழில் சிலிர்த்திருக்கிறது எம்
வயல்கள்
வாய்க்காலில் பொன்னுருகிப்
பாய்கிறது
இரவுப்பறவைகளின் சிறகசைப்பில்
தாளம் பிசகாத சங்கீதம் வருகிறது
கள்ளியும், நாகதாளியும்,
ஆமணக்குமென்றாயினும்
இவை எம் காதற்கொடிகள்
வீட்டுக்கோடியில் நிற்பது வெறும்
வீரைமரமல்ல
எம் வீரமரம்
எங்கள் பரம்பரையின்
மூச்சுப்பட்டுயர்ந்தது
இந்த முதிரை மரம்
இவற்றை இழந்திருக்க எப்படி
ஒப்புவாய்?
பகையிடம் கொடுத்தபின் எப்படிப்
படுத்திருப்பாய்?
போரில் உயிர்கொடுத்துப்
போகலாமெனினும்
விடுதலையின் வேரையிழத்தல்
கூடாது
மானமே மானுடத்தின் மகுடம்
சிரம்தாழ்த்தா வாழ்வே எமக்கான
சிம்மாசனம்
பேச்சும் வார்த்தைகளும், ஒருபுறம்
புன்னகைக்கட்டும்
நீ போருக்கான புரவிகளுக்குக்
கடிவாளம்பூட்டு தேரின்
சக்கரங்களுக்கு எண்ணைபூசு
வேல் முனைகளைக் கூர்மையாக
விளங்கச் செய்
முரசு கொட்டுவோரே! வார்பிடித்துச்
சுருதிசேருங்கள்
பரணியொன்றெழுதப் புலவோரே
தயாராகுங்கள்.
பீரங்கி வாய்கள் பூச்சூடுவதற்கல்ல...
யாரங்கே நிற்பது?
இழுத்து வாருங்கள் பீரங்கிகளை
மேசையிலிருந்து சமாதானம்
வருமெனில் சந்தோஷம்
யாரேனும் ஏமாற்ற
நினைப்பார்களானால்
அது யாராக இருந்தாலும்
இங்கே பாடம் படித்துத் திரும்புவர்
இந்தச் சத்தியத்தின் குரல் வெறும்
சங்கீதமல்ல
தமிழீழத்திற்கான தண்டோரா.

**வியாசன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net




# தென் ஆபிரிக்காவில்







## WORLD CONFERENCE AGAINST RACIS

இனவெறிக்கெதிரான அனைத்துலக மாநாடு தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் 31-08-2001 அன்று ஐ.நா சபையின் செயலர் திரு. கோபி அனான் அவர்களினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. பல நாட்டுத் தலைவர்கள், வெளியுறவுத்துறை அமைச்சர்கள், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என ஆயிரக் கணக்கானோர் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பல்வேறு ஒடுக்குமுறைகளிற்குட்பட்டு வாழும் மக்கள் சமூகத்தின் குரல்கள் அவ்வவ் சமூகத்தின் பிரதிநிதிகளால் இம்மாநாட்டில் வெளிக்கொணரப்பட்டன. இம்மாநாட்டுக்கு முன்னேற்பாடாக, ஓகஸ்ட் 28ம் திகதியிலிருந்து தொடர்ந்து 4 நாட்களாக நிகழ்வு மண்டபத்துக்கு அருகே பிறிதோர் அரங்கைப் பயன்படுத்தி கண்காட்சி கள், கூட்டங்கள், விளக்கவுரைகள் எனப் பல்வேறு வடிவங்களில் நிகழ்வுகள் நடைபெற்றன. தத்தமது இனங்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகளை வெளிக்கொணரும் சிறந்த தளமாக இவ்வரங்கையும், மாநாட்டையும் மிகச் சிறப்பாக அனைவரும் பயன்படுத்திக் கொண்டனர். இந்த வகையில் தமிழீழ மக்கள் மீது சிறீலங்கா அரசால்மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல் களை உலக அரங்கில் வெளிக்கொணரும் பணியில் தமிழர் மனித உரிமைகள் மையம், தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக்குழு என்பன நேர்த்தியாகச் செயற்பட்டன.

தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் கண்காட்சியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள் என்பன புகைப்படங்கள் வாயிலாகவும், ஆவணங்கள் மூல



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# இனவேறுபாட்டுக்கு எதிரான மாநாடு







மும் வெளிக்கொணரப்பட்டிருந்தது. தமிழர் மனித உரிமைகள் மையத்தினால், ஐ. நா. மனித உரிமைக் குழுவின் தலைவர் திருமதி. மேரி ரொபின்சன் அவர்களிடம் வழங்கப்பட்ட மனுவொன்றில் “இலங்கைத்தீவில் தமது அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக தமிழர்களினால் மேற்கொள்ளப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் மற்றும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் என்பன அலட்சியப்படுத்தப்பட்டு பேரினவாத வன்முறைகளின் மூலம் தோற்கடிக் கப்பட்டதனாலேயே, தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை அடைவதற்கு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டிய நிாப்பந்தம் உருவானது” என தமிழர் மனித உரிமைகள் மையம் தெரிவித்திருக்கின்றது. “உலகின் பலபாகங்களிலும் பலவித இனவேறுபாடுகளின் பிரதிபலிப்புகள் உள்நாட்டு யுத்தம், ஆயுதப்போராட்டம், சுதந்திரப்போராட்டம் போன்ற வடிவங்களை அடையச் செய்துள்ளது என்றும், சுயநிர்ணய உரிமையை அடைவதே நிரந்தர தீர்வுக்கான வழி” எனவும் அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 31ம் திகதியில் இருந்து செப்ரெம்பர் 7ம் திகதிவரை நடைபெற்ற இம்மாநாட்டில் 150ற்கும் மேற் பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 10000 பேரிற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.பல நாட்டுத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர்.அரச பிரதிநிதிகள் மட்டுமன்றி, அரசு சாராத தொண்டர் நிறுவனங்களும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் கொண்ட இம்மாநாட்டின் மூலம் இன வெறிக்கெதிரான புதிய உலகம் படைக்கும் சிந்தனை மேலும் கூர்மையடைந்திருப்பதோடு சமூகத்தின் அடித்தள மக்களாலும் ஐ. நாவின் கதவைத் தட்ட முடியும் எனும் நம்பிக்கைக்கும் வித்திட்டிருக்கிறது இம் மாநாடு என, இந் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதிநிதி ஒருவர் தெரிவிக்கின்றார்.

## SM (WCAR) DURBAN - SOUTH AFRICA



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# தாயகம்

மனங்களின் ஒன்றுபட்ட மாற்றம் ஓரிடத்தில் கருத்தில் குவியப்படுத்தும் வேளை- அது ஏற்படுத்தும் விளைவுகள் வலுவானவை. தேசிய உணர்வு ஒருமித்தெழும்போது, அவர்களின் தேசியம் அவர்களிடமே இருக்கும்.

தமிழினம் இன்று தன் தாயகத்தில் ஒருமித்த ஒரு தேசிய எழுச்சியைப் பெற்றுவருகின்றது. தமிழினத்தின் உரிமைகளை மறுக்கின்ற சிறீலங்கா அரசு தமிழர்களை தனித்தீவுகளாக வைத்திருப்பதை ஒரு உபாயமாகக் கையாண்டு வருகின்றது. இராணுவத்தின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழர், அவ்வாறில்லாத பகுதிகளில் வாழும் தமிழர் என்ற இரு வகைப்படுத்தலை ஏற்படுத்தி இந்த பிரித்தாள்தலை அரசு தொடர்கின்றது.

ஆக்கிரமிப்புவாதிகளான சிங்களவர் படையினராக தமிழர் நிலங்களில் நிலைகொண்டுள்ளனர். அவர்கள் தமக்குச் சொந்தமற்ற நிலங்களில் அரசியல்வாதிகளின் செல்வாக்கிற்காக, அதிகாரத்திற்காக நிலைகொண்டுள்ளனர். இது தர்க்க ரீதியாக அவர்களின் ஆக்கிரமிப்புக்காகப் போரிடும் பற்றின் தன்மையை வெளிப்படுத்தும்.

இராணுவப் பகுதிகளில் வாழும் தமிழர்களை இராணுவத்தில் சேர்த்தல் என்ற அரசின் அறிவிப்பு பல நோக்கங்களுக்கானது. இது இராணுவப் பிடியிலுள்ள பகுதிகளில் வாழும் மக்களிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது அல்லது ஏற்படுத்தியிருக்கவேண்டும். யாருடைய நிலத்தில் எதற்காக, யாருக்காக போரிட தமிழர் இராணுவத்தில் சேரவேண்டும் என்ற தர்க்கத்தை இது தமிழர்களிடம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். இன்று விடுதலைப்போர் முனைப்புற்ற நிலையில் உள்ளது. நிலங்களை இழத்தல் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் என்ற சிங்கள அரசின் நிலைப்பாடு எதிர்மறை விளைவை உண்டாக்கியிருக்கின்றது. இது மக்கள் எழுச்சியை வற்புறுத்தியுள்ளது.

மக்கள் எழுச்சி, விடுதலைப் போராட்டங்களின் இலக்கை மிக அண்மையாக்கியுள்ளமை வரலாற்றில் நடந்தவையாகும்.

இத்தகைய எழுச்சி ஒன்று இன்று தமிழர் தேசத்தில் உருவாகி வருகின்றது. இதற்காக ஏற்கனவே இங்கு மக்கள் எழுச்சி இருக்கவில்லை என்று அர்த்தமல்ல. இப்போது அது உச்ச நிலையை எட்டிவருகின்றது.

இந்தத் தேசிய எழுச்சி தாயகத்தில் தம் வாழ்வையும், உயிர்களையும் விலையாகக் கொடுக்கும் மக்களிடம் மட்டும் இருந்தால் போதாது. இச்சந்தர்ப்பத்தில் உலகெங்கும் சிதறிவாழும் தமிழர்கள் தம் ஒட்டுமொத்த எழுச்சியையும் கருத்தொற்றுமையையும் காட்டவேண்டும்.

**1.** உலகம் முழுவதும் தாயகமிழந்து, அந்நியரின் கீழ் அடிபணிந்து, அவர்களிடம் வேலைபார்த்து அங்கும் ஒடுக்குமுறைகளுக்கு இலக்காகி, பாரிய உயிரழிவைச் சந்தித்த யூத இனம் இஸ்ரேலை தனக்கான தாயகமாக கட்டியெழுப்ப உழைத்தது உலகெங்கும் வாழும் யூதர்களாகும். உலகப் பொதுவில் இஸ்ரேலுக்காக யூத இனம் நிதி திரட்டி தனது தாயகத்தை இன்று வல்லரசாகக் கட்டியெழுப்பியிருப்பது ஒட்டுமொத்தமான தேசிய எழுச்சியாலும் உழைப்பாலுமாகவே இருந்தது.

**2.** 1993இல் 30 வருட ஆயுதப் போரின் விளைவாக எத்தியோப்பியாவிடமிருந்து எரித்திரியா விடுதலைபெற்றது. இந்த விடுதலை உலகெங்கும் வாழ்ந்த எரித்திரியர்களின் உழைப்பால் கிடைத்தது. தாயகத்தில் நிற்போருக்கு நிதிப் பங்களிப்பு என்பதைத் தவிர உலகத்திற்கு ஒட்டுமொத்த தேசிய எழுச்சியைக் காட்டவேண்டிய தேவையும் ஏற்படும்போது, அதனை எரித்திரிய மக்கள் நிரூபித்தனர். இதன்போது உலகெங்கும் எரித்திரியர்கள் தமக்கு தாயகம் வேண்டுமென்ற கருத்துவாக்கெடுப்பில் வாக்களித்தனர்.

> 'செல்வத்திற்கெல்லாம்
> தலையான செல்வம் என்ன என்று
> உள்ளுக
> அது மாந்தரின் உள்ள
> எழுச்சியன்றோ
> சக்திகளுக்கெல்லாம்
> பெரும்சக்தி சிகரமாகும்
> பூமியிலும், விண்ணிலும்,
> பூமியினடியிலும்
> அணுசக்தி போன்றது
> மாந்தரின் உள்ள எழுச்சி!'
>
> -விஞ்ஞானி அப்துல் கலாம்

**3.** அரபுப் பிரதேசத்தில் நான்கு நாடுகளால் பிரிக்கப்பட்டுள்ளது குர்தீஸ் மக்களின் தாயகம். துருக்கியின் பிடியில் இருக்கும் குர்தீஸ் மக்களின் விடுதலைக்கான இயக்கம் பி.கே.கே. இதன் தலைவர் அப்துல்லா ஒக்கலான் துருக்கிய அரசால் கைதுசெய்யப்பட்டபோது, உலகெங்கும் வாழும் குர்தீஸ் மக்கள் தாம் வாழும் நாடுகளில் தலைவர் ஒக்கலானை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் புரிந்தனர். ஆர்ப்பாட்டம் அந்த அரசின் உடமைகளை அழிக்கும் வன்முறைகளாகவும் மாறின. துணிச்சலாக குர்தீஸ் மக்கள் தம் தலைமைக்கான எழுச்சியை அங்கு உணர்வுபூர்வமாகக் காட்டினர். இது தாயகம் மீதான அபரிதமான பற்றின் வெளிப்பாடு. குர்தீஸ் மக்கள் தம் உத்தேச அரசுக்கான பாராளுமன்றைக்கூட நெதர்லாந்தில் அமைத்துள்ளனர்.

**4.** வியட்நாம் கெரில்லாக்களின் பாரிய தாக்குதலான தீன்பின்பூ படைத்தள அழிப்பில்... பனியும் இலையுதிர் காலமுமான அந்தக் காலத்தில் அனைத்து மக்களும், ஒவ்வொரு வியட்நாமியனும், தேசப்பற்றுடன் 'எல்லோரும் முன்னணிக்கு, எல்லாமே வெற்றிக்கு' என்ற கோசத்துடன் ஒரு மனிதனுக்கு அப்பாற்பட்ட பணியைச் செய்தனர்.


'எங்களுடைய நீண்டகால விடுதலைப் போரிலே மக்களின் மிகப்பெரிய பங்களிப்பு 1953-54ஆம் ஆண்டுகளில் இருந்தது. எதிரிக்கு எதிராக போரிடும் எமது இராணுவத்திற்கு, சகல வழங்கல் பணிகளையும் அவர்கள் செய்தனர். தீன்பின்பூ தள பிரதான முன்னணி நிலைப்பகுதிக்கு பின்னரங்கப் பகுதியிலிருந்து 400 மைல்கள் தூரம் கடந்து போராளிகளுக்கு உணவையும், வெடிபொருட்களையும் கொண்டுவந்து தந்தார்கள் அவர்கள். ஒழுங்காக வீதிகள் இல்லை. போக்குவரவுக்கு நல்ல வாகனங்கள் இல்லை. வழங்கல் பாதையை எந்நேரமும் எதிரி தாக்கும் அச்சம், பொழியும் பெருமழை. இவற்றிற்கு மத்தியில் எமது மக்கள் அப்பணியை சிறப்பாகச் செய்தார்கள். தீன்பின்பூ சண்டையின் போருபாயத்தில் மிக முக்கியமானது இந்த வழங்கல்தான். உண்மையில் இது எங்களது சக்திக்கு மேலானதுதான். மக்களின் இப்பணியே எதிரியைத் தோற்கடித்தது, அது எவரையும் தோற்கடிக்கும். வாகனங்களை ஓட்டுபவர்கள், நீரோடைகள், மலைகள், காடுகளைக் கடந்து தூக்கத்தைத் தொலைத்து போராளிகளுக்கானவற்றை நேரடியாக வழங்கினர். ஒவ்வொரு குழுத் தலைமையுடனும் மக்கள் படைநேரடியாகத் தொடர்புகொண்டு வழங்கலைப் புரிந்தது. நகர்களிலிருந்து ஆயிரக்கணக்கான சைக்கிள்கள் 400 மைல்களை கடந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# எழுச்சியும் மீட்பும்



போர்முனைக்கு பொருட்களை எடுத்துவந்தன. தோளில் மூங்கில்த்தடி துலாக்கள் மூலம் மக்கள் பொருட்களைக் கொண்டு சென்றனர். போரின்போது எதிரியின் குண்டுகளுக்கு மத்தியில் மக்கள்படை, சமையல், மருத்துவப்பணி, போக்குவரத்து போன்ற சகல பணிகளையும் செய்தது'

'மக்கள் போரின் இராணுவக்கலை' என்ற நூலில் வியட்நாம் விடுதலை அமைப்பின் இராணுவ தளபதி ஜெனரல் கியாப்.

லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நிக்கரகுவா விடுதலைப் போராட்டம், மக்கள் எழுச்சிக்கு சிறந்த உதாரணம். சன்டினிஸ்டா போராளிகள் விடுதலைப் போரை உச்சநிலைக்குக் கொண்டுவந்த போது, இருந்த மக்கள் படையே வெற்றி இலக்கை விரைந்து எட்ட உதவியது.

சீனா, வியட்நாம், வடகொரியா, கியூபா, தென்னாபிரிக்கா உட்பட விடுதலைப் போர்களை வென்ற உலக நாடுகள் மக்கள் படையின் பங்களிப்புடனேயே வெற்றிபெற்றன.

மக்கள் எழுச்சி இந்தத் தேசங்களில் உயர்நிலைக்கு வந்தமைக்கு அந்த மக்களிடையே ஒட்டுமொத்தமாக ஏற்பட்ட தேசிய உணர்வே காரணமாகும். சீனாவில் மாவோ, கொம்யூனிஸ புரட்சியை முன்னெடுத்தபோது, அங்கு பெரும்பான்மையாக இருந்த மக்களிடம் நீ ஒரு சீனன் என்ற தேசிய கருத்துருவை வளர்த்ததன் மூலமே மக்கள் எழுச்சியை ஏற்படுத்தினார்.

அந்த வகையான 'தமிழர்' என்ற தேசிய உணர்வு, தமிழரிடம் இருக்கின்றது. ஆனால், அதனை சிதைப்பதில் சிறீலங்கா அரசு கல்வியை ஒரு பிரதான ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது.

சிறீலங்காவின் கல்வி, சிங்களத் தேசியத்தை சிங்கள தேசத்தை அதன் பண்பாடு, புவியியல் நிலைகளை சித்தரிப்பது. அதனையே தமிழரிடம் திணிக்கின்றது. தமிழர் தம் சுயத்தை, தம் சூழலை, தம் வளத்தை அறியவோ வளம்படுத்தவோ விடாமல் கல்வியை சிங்கள தேசியத்தை மையப்படுத்தியதாகசிறீலங்காஅரசு அமைத்துள்ளது. இக்கல்வி எமக்கான சுயசார்புத் தன்மையை வளர்க்க அனுமதிக்கவில்லை. பதிலாக அரசை மையமாகக் கொண்ட உத்தியோகத்தை இலக்காகக்கொண்டது. இந்த இலக்கை எட்டுவதே ஒவ்வொரு தமிழனின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பது அரசின் நோக்கம். இதன்மூலம் உத்தியோகம் அரசுக்கான விசுவாசத்தை வளர்க்க உதவுகின்றது. நில ஆக்கிரமிப்புடன் இதனையும் கருத்தில் வைத்து யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து தமிழர்களை தம் படையினரின் பிரதேசத்துள் உள்வாங்கி அவர்களின் நோக்கினை திசை திருப்புவதில் அரசு முனைப்போடு செயற்பட்டு வருகின்றது. இராணுவத்தினரின் மூலமாக சிங்கள அரசு மேற்கொள்ளும் இத்தந்திரோபாயத்தை உடைக்கவேண்டிய ஒட்டுமொத்த தேவை தமிழினத்திற்கு எழுந்துள்ளது. தமிழ் மக்களை கையகப்படுத்திய யாழ். குடாநாட்டில் இராணுவத்தின் உண்மை முகம் வெளிப்பட்டுவிட்டது. இது இனிமேல் ஆக்கிரமிக்கப்பட்ட பிறபகுதிகளிலும் தொடரும்.

இதனால், ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளில் இருப்போர் அப்பகுதியை தக்கவைப்பதும், ஆக்கிரமிக்கப்பட்டவற்றை மீட்பதும் தமிழீழ மக்களின் உயிர்க்கடமையாகின்றது.

இதனைச் செய்யப்போகின்ற பெரும் பொறுப்பு கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்கானது. இதிலிருந்து வழுவுவது தமிழருக்குரிய காரியமாக இருக்காது.

அதேபோல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கும் தேசியக் கடமை இருக்கின்றது. தமிழருக்கு நாடு அமைய அவர்கள் தம் தேசிய உணர்வை மறக்கக்கூடாது.

இன்று உலகெங்கும் தமிழர் சிதறி வாழ்கின்றனர், உலகம் முழுதும் தமிழர் வாழ்கின்றனர் என்பது பெருமைக்குரிய விடயமாக இருக்காது. 2ஆம் உலகப்போர் வரை உலகெங்கும் சிதறி வாழ்ந்த யூத இனம் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் உயர்ந்து நின்றபோதும், தமக்கு என்று ஒரு தாயகம் இல்லாது ஏனைய நாடுகளில் அடிமையாக வாழ்வது அவர்களைப் பாதித்தது. தமக்கென ஒரு நாடு வேண்டும் என்பதை அவர்கள் பெருமைக்குரிய விடயமாகக் கருதினர். அதற்காக உழைத்தனர். அதேபோல் இன்று சிறீலங்கா அரசின் ஆதிக்கமே தமிழர்களைச் சிதறடித்து 'அகதிகள்' என்ற பெயரில் சுயமானமிழந்து வாழவைக்கின்றது. இது நிரந்தரமானதல்ல, நிரந்தரமாக இருக்கவும்கூடாது. அதனால், அவர்களும் தாயகத்திற்கான உழைப்பை அதிகரிக்கவேண்டும்.

வியட்நாமியர்களைப்போல, யூதர்களைப்போல, குர்திஸ்களைப்போல ஒவ்வொரு ஈழத்தமிழரும் தன் தாயக உருவாக்கத்திற்கு எந்தவகையிலாவது உழைக்கவேண்டிய தருணம் இது.

யூதர்களுக்கு மஸாடாவைப்போல தமிழீழ மக்களுக்கு வன்னி.

'மஸாடா இனி என்றும் வீழாது' என ஒவ்வொரு யூதனும் மஸாடா சென்று உறுதி எடுத்துக்கொள்வது இஸ்ரேலின் வழமை.

அதேபோல தமிழீழத்தின் ஒவ்வொரு பிரஜையும் உறுதியெடுக்க வேண்டிய நிலை. காலதாமதம் இன அழிவை மிக மோசமாக்கிவிடும். எந்த வகையிலும் தமிழீழத்தின் ஒவ்வொரு மகனும் எங்கிருந்தாலும் தாயகத்தைத் தக்கவைக்க வேண்டும்.

இன்று தாயகத்தில் தமிழ்த்தேசிய எழுச்சி உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஒட்டுமொத்த தமிழினமும் பல்வேறு மாற்றங்களை தமது இயல்புப்போக்கில் மாற்ற வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன.

தி.தவபாலன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

அந்த அறையின் யன்னலோரத்தில் இருந்த மேசை புத்தகங்களாலும் கொப்பிகளாலும் நிறைந்திருந்தது.

மேசையின் முன்னால் கதிரையில் அமர்ந்தபடி மனோ வெளியே பார்த்தான். தெரு வெறிச்சென்றிருந்தது. இந்தப் பட்டப் பகலில் இப்படி ஒரு அமைதியா என்று நினைக்கும் படியாக எந்தச் சலனமும் இல்லாமல் வீதியோர மரங்களும் அசைவற்று நின்றிருந்தன.

மிக நீண்ட நேரம் கழித்து ஒரு சைக்கிள் யன்னலைக் கடந்து அவனது பார்வையிலிருந்தும் விலகி இடது பக்கமாய்ச் சென்று மறைந்து விடுகிறது.

தெருவைத் தாண்டி வலது பக்கமாய் நூறு மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த மீன்சந்தையில் இப்போது நாலைந்து சனங்கள் நடமாடத் தொடங்குவதைக்காண முடிகிறது.

சிலர் மீன்களைக் கொண்டு வந்து கொட்டிவிட்டு, குழையால் வீசியபடி குந்தியிருக்கின்றனர். அதிலும் வயதான பெண்கள்தான் அதிகமாய்த் தெரிந்தார்கள்.

மீன் வாங்குவதற்காக எப்போதாவது ஒருவர் வந்து வாய்த்தர்க்கம் ஒன்றும் இல்லாமலே மீனை வாங்கிக்கொண்டு வந்த வேகத்துடனேயே சென்றுவிடுகிறார்.

முன்னால் முகம்காட்டி அச்சுறுத்துவனவாய் இருந்தன. அவ்வாறான நேரங்களில் ஈரல் கலங்கிப்போய் உடலெல்லாம் வெடவெடக்கும்.

இப்போதெல்லாம் யாரும் யாருடனும் நின்று கதைத்துச் சிரித்துப் போவதைக் காணமுடிவதில்லை. ஏதோ கிலி பிடித்தவர்களது முகங்களைப் போலவே பீதியில் வெளிறிப்போய்க் காணப்படுகின்றது. எப்போது, எங்கே தமக்கு என்ன நேருமோ என்ற பீதி கொண்டவர்களாகவே திரிந்தார்கள்.

முன்னரென்றால் சந்தையில் ஏற்படும் கலகலப்புக்கூட அறைவரைக்கும் தெளிவாய்க் கேட்கும். சனங்கள் மீன் வாங்குவதற்கென்று வந்து குவிவார்கள். கார்த்திகை மார்கழியில் பெய்யிற மழையில் கடல் கலங்கிப்போய் தை மாதத்தில் றால் நல்லாய்ப் பிடிபடும். அந்த நேரம் சந்தை நிறைந்து போய்க்கிடக்கும்.

பெட்டியில் கொண்டுவந்த றாலைக் கொட்டிவிட்டு, மடித்துக்கட்டிய சாறத்திலிருந்து தண்ணீர் சொட்டச் சொட்ட நின்றுகொண்டிருப்பார்கள். முண்டியடித்துக்கொண்டு சனங்கள் அங்கும் இங்கும் அலைவார்கள்.

அப்போதைய சந்தையின் சோபிதம் கண்களுக்குள் வந்து மறைந்தது.

படிக்கும் போதுகூட இந்தப் பயமுறுத்தல் ஞாபகங்களே வந்துவிடுகின்றன. பாடங்களில் கவனம் தவறிவிடுகிறது. முழத்திற்கு முழம் முளைத்துள்ள அரண்களி லெல்லாம் விசாரணை முடிந்து றூமுக்கு வரும்போதுதான் ஓரளவு உயிர் வந்தது போலிருக்கும்.

போனவாரம்கூட மருத்து வபீடத்தில் படித்துக்கொண்டிருந்த மூன்றாம் வருட மாணவி ஒருத்தி திடீரென்றுகாணாமல் போய் விட்டாள். அவளை அவனுக்கு நன்றாகவே ஞாபகம் இருந்தது. தலைமுடியை 'டயானா ஸ்ரைலில்' வெட்டி இருந்தாள். நல்ல நிறம். வட்ட முகத்தில் நாடி மட்டும் கொஞ்சம் சின்னதாய் இருக்கும் கைகளிலும்



சிறுகதை

# சிறையிருப்பு

வேட்டி கட்டிய ஒரு நடுத்தர வயதுக்காரர் கையில் பையுடன் சந்தையை நோக்கி நடந்து வருகிறார். அவர் மலங்க மலங்க விழித்தபடி நடையில் பதற்றம் தெரிய வந்துகொண்டிருப்பது இங்கிருந்து பார்க்கவே தெளிவாய்த் தெரிகிறது.

வந்தவர் சந்தையின் உட்பகுதியைப் பார்வையால் துளாவுகிறார். கிலிகொண்ட அவரது முகம் பார்ப்பதற்கு சவமாய்த் தெரிந்தது. அதுகள் மதிலோடு மதிலாய் மரத்தோடு மரமாய் ஒட்டிநின்று கொள்கின்றனவா என நின்று அவதானித்து, அவரது கண்கள் தேடியலைந்தவைகள் இருபுறமும் இல்லையென்று உறுதி செய்த பின்னரே 'அப்பாடா' எனக் கூறுவது போன்ற நிம்மதி முகத்தில் தெரிய சந்தைக்குள் நுளைகிறார்.

சிவனே! என்று இயல்பாய் நிற்கும் போது, அவைகள் எதிர்பாராத நேரத்தில்

'இந்தக் கிறீச்சிடும் கதிரைக்கும் எனக்கும்தான் எவ்வளவு நெருக்கமான உறவாகிவிட்டது' நினைத்துக்கொண்டே இரண்டு கைகளையும் உயர்த்தித் தலைக்குப் பின்புறமாகக் கோர்த்து சோம்பல் முறித்துக்கொண்டான்.

கல்லூரி வகுப்பு நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலெல்லாம் இந்தக் கதிரையில் இருந்தபடியே யன்னலூடு தெரியும் தெருவெளியைப் பார்த்தபடி இருப்பதுதான் தொடரும் விடயமாகிப் போனது.

'லெக்சரு'க்குச் செல்லும்போதும், முடிந்து வரும் நேரங்களிலும் உடலில் உயிரே இருக்காது. வழியில் அவர்கள் உறுக்கி உறுக்கிக் கேட்கும் புரியாத மொழிக் கேள்விகளால், நாவரண்டு உதடுகள் ஒட்டிக்கொள்ளும். நெஞ்சு 'படக் படக்' என்று வேகமாய் அடிக்கும். வகுப்பில்

காதோரங்களிலும் மெல்லிய, ஆனால் கருப்பான ரோமங்கள் கவர்ச்சியாய்த் தெரிய வளர்த்திக்கேற்ற உடலமைப்புப் பொருந்தி மிகவும் அழகாக இருந்தாள்.

அவளுக்கு அண்ணனோ, தம்பியோ அல்லது அண்ணன்களோ தம்பிகளோ நல்ல வருவாய் உள்ள நாடுகளில் தங்களைக் கரைத்திருக்கவேண்டும். அவ்வளவு பணச்செழுமை அவள் ஆடைகளிலும் உடலிலும் தெரிந்தது.

மாணவர்களிடையே அநேகமாக அவள் தான் கதாநாயகியாக இருந்தாள். எல்லோரிடமும் வளவளவென்று ஏதாவது பேசிக் கொண்டேயிருப்பாள். விழாக்களில் கூட அவள்தான் அதிகம் பங்கேற்றாள்.

'லெக்சர்' முடிந்துவரும் நேரங்களில் அவள் நிறத்தையொத்த கண்ணாடி போட்ட இன்னுமொரு மாணவி அவளுடன் கூடவே சைக்கிளில் வருவதையும் அவன் பார்த்திருக்கிறான். அவள் காணாமல் போய்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்ட பிறகு, அந்தக் கண்ணாடித்தோழி கொஞ்ச நாள் வளாகப் பக்கமே வரவில்லை. இருவாரம் கழித்து அவளை அவளது பெற்றோர்கள் படிப்பை நிறுத்தி வீட்டோடு மறித்து விட்டார்களாம் என்று அறிந்தான்.

மேசை மீதிருந்த புத்தகங்களின் மீது பார்வை தாவியது. படிக்கிற மூட்டும் இல்லை. திவாகரன்ர றூமுக்குப் போய் அவனோட கதைச்சுப்போட்டு வந்தாலே படிக்கிற மூட் வந்துவிடும். ‘என்னடா மனோ! எப்படி இண்டைக்கு லெக்சரெல்லாம்? பொலிற்றிக்கல் நோட்ஸ் ஒழுங்காய் எடுத்தியா இல்லேண்டால் என்ர நோட்ஸ்சைக் கொண்டுபோய் எழுதிப் போட்டு நாளைக்குக் கொண்டுவா. டேய்! என்னதான் நாங்கள் பண்ணினாலும் படிப்பில் மட்டும் அக்கறையாய் இருக்கவேணும். வீட்டில எங்கட தாய் தகப்பன் எவவளவு கஸ்ரப்பட்டு எங்கள இஞ்ச படிக்க விட்டிருக்குதுகள்’ என்றெல்லாம் கூறும்போது, அவனது பக்குவமான வார்த்தைகளைக்கேட்ட மறுநிமிடமே படிபடி படியென்று ஒரு அகோர வெறி எழும்பும். ‘றூமை’ விட்டு இருவரும் வெளியில் வந்து எதிரே இருக்கும் தேநீர்க் கடையில் ‘ரீ’ குடித்துவிட்டு சைக்கிளில் கிளம்பினால் தெரு என்னமாய்க் களைகட்டியிருக்கும் சிரிப்புகளும், குதூகலங்களும், அதையும் தாண்டிய இதயம் நுழையும் பார்வைகளும் சே!.... என்ன வாழ்க்கையப்பா. திவாகரனும் இப்ப என்னை மாதிரித்தான் றூமில அடைஞ்சுபோய்க் கிடப்பான்.

ஒருகணம் திவாகரனது றூமுக்குப் போய் வருவோமோ என்றும் எதற்காக இப்படிப் பயந்து அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்றும் நினைத்தான். மறுகணமே அது எவ்வளவு ஆபத்தானது என்பதை உணர்ந்தவனாய் அலுத்துக்கொண்டான்.

விடிஞ்சதுக்கு இந்தத் தெருவால ஏதும் இளசுகள் போயிருக்கே, பக்கத்து வீட்டு சுலோ அன்ரியாக்கள் இருக்கும் போதென்றால் அடிக்கடி அவவும் பிள்ளைகளும் வந்து பைம்பலாய்க் கதைச்சிட்டுப் போகுங்கள். வீட்டில ஏதாவது, தின்பண்டங்கள் செய்தாலும் கொண்டுவந்து தருங்கள். இப்ப?

அந்த வீடு திறந்து கிடக்கிறது. வீட்டைச் சுற்றி புல் முளைத்திருக்கிறது. வாசற்படியோரம் நிழலுக்காய் ஒதுங்கிய நாயொன்று நாக்கைத் தொங்கப் போட்டபடி இளைப்பாறிக் கொண்டு கிடக்கிறது.

‘சுலோ அன்ரியாக்கள் குடுத்து வச்சதுகள் வன்னியில எங்கேயோ ஒரு இடத்தில நிம்மதியாய் சுதந்திரமாய்....’

இறங்குவெய்யில் சந்தைக் கட்டிடத்தில் மஞ்சள் அடித்தது. மாலையாகியதால் பயமும், பதற்றமும் அவனைச் சூழ்ந்து கொண்டது.பகல் நேரத்தில் என்னதான் பயமிருந்தாலும் அது அவ்வளவு கனதியாய் அவனுக்குத் தெரிவதில்லை. இரவாகிப்போனால் நெஞ்சே காய்ந்துபோய், எப்போது விடியும் என்றிருக்கும்.இரவுபூராவும் தூங்குவதும் அடிக்கடி திடுக்குற்றுவிழிப்பதுமாய் அழியும். விடிந்தால் இரவுத் தூக்கம் சீரில்லாததால் தலையிடிக்கும். கல்லூரிக்குப் போகவே மனம் வராது.

நிலாக்காலமாதலால் இருளின் பூதாகரம் ஆங்காங்கு கட்டிடங்களின் மூலை முடுக்குகளிலும் மரங்களின் கீழும் உறைந்து போய்க்கிடந்தது. சந்தைக் கட்டிடத்தின் மேற்கூரையில் பக்கத்தில் நின்றிருந்த மரக்கிளையின் நிழல் அசைந்தது. மீதி இடம் வெளேரென்றிருந்தது. உட்பக்கம் இருள் அப்பிப் போயிருக்க, வெளிப்புறத்தில் மாடொன்று படுத்துக் கிடந்தபடி வாலசைப்பது தெரிந்தது.

படிப்பதற்காய்ப் புத்தகத்தை விரித்தபடி பார்த்துக்கொண்டிருந்தானே தவிர, புலன் மட்டும் எங்கோ அலைந்தபடி இருந்தது. தாறுமாறாய் ஒற்றையைப் புரட்டியபடி இருந்தான். ஒற்றையைப் புரட்டும் ‘சரக் சரக்’ ஒலிகூட ஒருவித அச்சத்தை உண்டுபண்ணியது.

புத்தகத்தை மூடினான். திடீரென்று வெளியில் தெருப்பக்கம் ஏதோ அரவம் கேட்கவே, லாம்பை எடுத்து அவசர அவசரமாகத் திரியைத் தணித்துவிட்டு ஹோலில் கொண்டுவந்து வைத்தான். மீண்டும் அறைக்குள் சென்று கதிரையில் அமர்ந்தபடி அறையெங்கும் கப்பிக்கிடந்த இருளில் இருந்தவாறே யன்னலூடே வெளியில் பார்த்தான். தூரத்தில் ஒரு எலி ஓடினால்க் கூடக் காணக் கூடியளவிற்கு தெரு நிலவில் பளிச்சென்றிருந்தது.

ஒரு கணம் வீதியின் இருமருங்கிலும் பிசாசுகள் வரிசை வரிசையாக வருவதாக, நரபலி கொள்ளும் ஆயுதங்களைக் கைகளில் ஏந்தி வருவதாக கண்களில் தெரிந்தது.

நெஞ்சு குபீரென்று பயத்தால் படபடக்க கைகால்கள் லேசாய் ஆட்டம் கண்டன. நன்றாக உற்றுப் பார்த்தான். தெரு வெறிச்சோடிக் கிடந்தது. நின்ற மூச்சு வந்ததுபோல் இருந்தது. மரக்கிளைகள் சலசலப்பில்லாமல் அசைந்து கொண்டிருந்தன. அந்தக் கிளைகளுக்கு மேலால் நிலவு எட்டிப்பார்த்தது.

நிலவென்றால் அவனுக்குப் பிடிக்கும். ஊரில இருக்கும்போது, வீட்டு முற்றத்தில் தம்பிமாருடன் நிலவைப் பார்த்து ரசித்த வண்ணம் நீண்டநேரம் கதைத்துக் கொண்டிருப்பதும். அவர்கள் உறங்கிவிட்டதன் பிறகும் தென்னங்கீற்றுக்களிலும், மாமரக் கிளைகளிலும் நிலவொளி சிந்திக்கிடக்கும் அந்த மனோகரமான பொழுதுகளில் தனிமையில் கொஞ்ச நேரம் முற்றத்தில் உலாத்துவதும் அவனுக்குப் பிடித்தமானது.

நிலவின் தோற்றம் அவனைக் காட்டிக் கொடுக்கும் ஒரு உளவாளியாய் அச்சுறுத்தியது. அதன் அழகு பொய்யாகவும்,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

கொடூரமுள்ளதான இன்னுமொரு முகம் அதற்கு இருப்பதாகவும், இப்போது தெரிவது கொடூரமானதாகவும், நிறைய அசுத்தங்களை எல்லாம் தன்னில் கொண்டுள்ளதாகவுமே அவனுக்குப்பட்டது. இதைவிட அமாவாசை இருட்டே எவ்வளவோ மேல் என்று தோன்றியது.

அதன் ஒளியில் உலாவிவர வேண்டுமென்றோ அது முகில்களுக்குள் ஓடி ஒளிந்துகொள்வதை ரசிக்கவேண்டும் என்றோ அவனுக்குத் தோன்றவில்லை.


கதிரையைவிட்டு எழும்பி வந்து ஹோலில் வைத்த லாம்பை எடுத்து திரியைத் தூண்டிக்கொண்டே அறைக்குள் திரும்பச் சென்று மேசையில் வைத்தான்.

எரிச்சலாக இருந்தது. இந்த அங்கிளையும் காணேல்ல. முந்தியெண்டால் படிக்கவிடாமல் வந்திருந்து அலட்டிக் கொண்டிருக்கும். அப்போதெல்லாம் தொடர்ந்து இந்த றூமில இருக்க வேணுமென்பதற்காகவே அவரைத் திருப்திப்படுத்த எங்கோ புலனை விழுத்திக் கொண்டு 'ம்ம்....' எண்டு கதைகேட்கிறது. இப்ப மனுசன் தானும் தன்ர பாடும் எண்டு இருந்திடுறதோடில்லாமல் பொழுதுபட ஏழு மணிக்கெல்லாம் தன்ர றூமில போய் அடைஞ்சுகொள்ளுது.

றூம் கதவு திறக்கும் ஓசையும் தொடர்ந்து ஹோலில் நடந்துவரும் சத்தமும் கேட்டது திரும்பிப் பார்த்தான். 'அங்கிள்' ஓசைப்படாமல் அவனது அறைக்கதவைத் திறந்தார்.

பளுப்பு நிறச் சாரமும் வெள்ளை அரைக்கை பெனியனோடும் வந்தவர் கண்களைச் சுருக்கியபடி அவனைப் பார்த்து 'மனோ! இரவில கனநேரம் படியாதையும். லாம்பு வெளிச்சம் தெருவுக்குத் தெரியும். நேரத்தோட நூத்துப்போட்டுப்படும்' குசுகுசுத்தார்.

'ஓம் அங்கிள்'



'மனோ யன்னலைத் திறந்து போட்டிருக்கிறீர். அடிக்கடி அவங்கட வாகனங்கள் வரும். அவங்களுக்குப் படிக்கிற பொடியள் எண்டிருக்கோ படியாத பொடியள் எண்டிருக்கோ' கூறிக் கொண்டே அவரே இழுத்துக் கதவை அடைத்துவிட்டுப் போனார்.

நேரம் எட்டு மணியைத் தொட்டிராத அந்த முன்னிரவிலும் எந்தச் சலனமும் இல்லாமல் நிசப்தம் நீண்டு கொண்டே போனது. இராப்பூச்சிகளின் 'குய்' என்ற சத்தம்தான் எங்கும் ஒலித்தது.

ஊரை நோக்கிய நினைவுகள் வந்து வந்து போயின. 'தம்பி! உனக்கென்ன வயசே போட்டுது? ரெண்டு வருசம் கழிச்சு போனால் என்ன? அடுத்தடுத்த வருசத்தில நாட்டுச் சீரப்பார்த்து போய்ப்படியன்' 'இல்லேய்யா, என்ர 'பச்' பொடியள் எல்லாம் போட்டாங்கள். நான் மட்டும் நிண்டால் ஒருவருசம் வீண் தானே' 'ஏதோ எனக்கெண்டால் நல்லாய்ப்படேல்ல. நீ போறன் எண்டு நிக்கேக்க இனி மறிக்கிறதில பலனில்ல நல்லபடியாய்ப் போட்டுவா' கடைசி நேரத்தில் 'பஸ்' ஏற முதல் ஐயா கூறியது காதுகளில் ஒலித்தது, இப்ப நெஞ்சுக்குள் வலித்தது.

சே! எவ்வளவு தப்புப் பண்ணிட்டன். ஊரில இருந்து இவ்வளவு அவசரப்பட்டு யாழ்ப்பாணம் வந்திருக்கவே கூடாது.

இரவின் அமைதி அந்தகாரமாக இருந்தது. 'ங்வோ மியாவோ' குழந்தை ஒன்றின் அழுகுரலைப் போல ஆரம்பித்து, இரவின் அமைதியைக் குலைத்துப் பயங்கரமாக ஒலி எழுப்பியது கடுவன் பூனை ஒன்று. சற்று நேரத்தில் வேறும் சில பூனைகள் சேர்ந்து எழுப்பும் அருவருப்பான ஒலிகள் ஒருகணம் பயத்தைத் தருவித்தன. கொஞ்ச நேரம் ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்தான்.

'சனியனுகள்' என்று திட்டிக்கொண்டே லாம்பை அணைத்துவிட்டு எழும்பும்போது கதிரை கிறீச்சிட்டது. ஓசைப்படாமல் கட்டிலில் சாய்ந்தான்.

ஊர் நினைவுகள்தான் அடிக்கடி வந்தது. அம்மாவைப் பார்க்க வேணும்போல ஆசையாக இருந்தது.

எங்கோ தூரத்தில் 'ட்ரக்' வண்டிகளின் இரைச்சல் ஒன்றின் பின் ஒன்றாய் கேட்டது. நெஞ்சு 'திக் திக்' என்று அடிக்க கை கால்கள் சோர்ந்து போய்க்கிடந்தன. உடலெங்கும் அசையமுடியாதபடிக்கு ஆணி அடித்து இறுக்கியதுபோல் அப்படியே கிடந்தது. அங்கங்களின் ஒவ்வொரு முனையிலும் ஏதோ ஒரு எரிதிரவம் ஊற்றப்படுவதாய் அது கொஞ்சம் கொஞ்சமாக அரித்து அரித்து உடலுள்ளுறுப்புகளையும் சல்லடைக் கண்களாக்குவதாய் அவஸ்தைப் பட்டான்.

'ட்ரக் வண்டிகளின் இரைச்சல் நெருங்க நெருங்க வாழ்வின் கடைசி நிமிடங்களுக்கும் மரணத்திற்கும் இடையிலான பெரும்பாடு. ஐயா, அம்மா யாருமேயில்லாத இடத்தில் அநாதரவாகப் பிடிபடப் போவதை நினைத்துப் பார்த்தான். அவனது முகத்திற்கு மேலே ஏராளமான பிசாசுகளின் மூர்க்கத்தனமான முகங்கள் கெக்கலித்தபடி வருவதாய், கண்களை இறுக மூடிக்கொண்டான்.

வந்த 'ட்ரக்' குகள் சந்தை முடக்கால் திரும்பி, வடக்கு நோக்கிப் போவதாகச் சத்தம் ஓய்ந்துபோனது. கொஞ்சம் கொஞ்சமாய் இதயத் துடிப்புச் சீராகியது. ஆனால் நிம்மதியை வரவழைக்க மிகவும் பிரயத்தனப்பட்டுக் கொண்டு படுத்திருந்தான்.

இரவு ஏதோ ஒரு ஊர் சுற்றி வளைக்கப்படும். அதிகாலையில் தாம்தூமென்று கதவு தட்டப்படும். திறந்தால் குலை நடுங்கவைக்கும் பீதியைத் தரக்கூடிய கொடிய தோற்றத்தில் தலைக் கவசமும் துப்பாக்கியுமாய் குவிந்து போய் நிற்பர். வீட்டில் உள்ள இளசு பழசெல்லாம் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்படுவர். அவர்களில் யார் யார் திரும்புவார்களோ? எத்தனைபேர் மிஞ்சுவார்களோ? தூக்கமின்றிக் கட்டிலில் புரண்டபடி கிடந்தான். இரவு இருளில் கரைந்து கொண்டிருந்தது.

## சிறையிருப்பு

முல்லைக்கோணேஸ்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

மொழிபெயர்ப்பு: எம்.ஏ. நுஃமான்

# பலஸ்தீனக் கவிதைகள்

பலஸ்தீனக் கவிதைகளும் பலஸ்தீனப் பிரச்சனையும் பலஸ்தீனப் போராட்டமும் ஈழத்தமிழர்களுக்கு மிகவும் பரிச்சயமானது. கடந்த ஐம்பது வருடங்களாக அவர்களது அரசியலையும் அதன் வழியான போராட்டத்தையும் அதற்குரிய இலக்கியத்தையும் நமது சூழல் அறிந்திருக்கிறது. இதில் பலஸ்தீனக் கவிதையும் கவிஞர்களும் நல்ல அறிமுகத்தை ஏற்கனவே பெற்றிருக்கின்றனர். ஆயினும் மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்சினையும் இந்தக் கவிதைகளும் உலகெங்கும் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கிறது உலகின் எல்லா தொடர்பு சாதனங்களினூடாகவும் தினமும் "பலஸ்தீனம்" என்ற சொல் அதன் தீராத கொதிநிலைப் பிரச்சினையால் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. நமது பிரச்சினைகளைப் போல, நமது உணர்வுகளைப்போல, நமது போராட்டத்தைப்போல, நமது தாகத்தைப்போலவே அவர்களுக்கும் ஒரு சமாந்தரத் தன்மை பொதுமைப் பண்பு உண்டு. எனவே, இங்கே பலஸ்தீனக் கவிதைகளில் சிலவற்றைப் பிரசுரிக்கின்றோம், நமது உணர்வுகளைத் தட்டியெழுப்பவும் நமது வேட்கையைத் தூண்டவும் இவை ஊக்கமளிக்கின்றன. இக்கவிதைகள் "பலஸ்தீனக் கவிதைகள்" என்ற தொகுப்பிலிருந்து நன்றியுடன் தரப்படுகிறது.



## வங்குறோட்டானவனின் அறிக்கை

சமீஹ் அல்–காசிம்

என் பாண் துண்டை நான் இழக்க நேரிடினும்
என் சட்டையையும் கட்டிலையும்
விலைகூற நேர்ந்தாலும்
கல்வெட்டியோ சுமை காவியோ
தெருக் கூட்டியோ நான் பிழைக்க நேரினும்
உன் பண்டகசாலையைத்
துடைத்து மினுக்க நேரிட்டாலும்
குப்பையைக் கிழறி உணவெடுக்கும்படி வந்தாலும்
பட்டினி கிடந்து அழுந்த நேரினும்
மனிதனின் எதிரியே
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

என் காணியின் கடைசித் துண்டையும் பறித்தெடு என்
இளமையைச் சிறைக்
கூண்டினுள்ளே புதைத்திடு
என் முதுசொத்தைக் கொள்ளையடி
என் நூல்களை எரித்திடு
என் கோப்பைகளில் உன் நாய்களுக்கு இரைபோடு
என் ஊரிலுள்ள கூரைகள் மீது
உன் பயங்கர வலைகளை விரித்திடு
மனிதனின் எதிரியே
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

என் கண்ணெதிரே
நீ எல்லா விளக்குகளையும் ஊதி அணைத்தாலும்
உதடுகளின் முத்தங்கள் அனைத்தையும்
உறைவித்தாலும்
என் நாட்டின் காற்றினைச்
சாபங்களால் நிறைத்தாலும்
என் ஓலமிடும் குரல்வளையை
அமுக்கி ஒடுக்கினாலும்
என் காசுகள்போல் பொய்க்காசு தயாரித்தாலும்
என் பிள்ளைகளின் முகத்து முறுவலைப்
பிடுங்கி எடுத்தாலும்
இகழ்ச்சி ஆணி கொண்டு
என் விழிகளில் அறைந்தாலும்
மனிதனின் எதிரியே
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

மனிதனின் எதிரியே
துறைமுகங்களில் சைகைகள் உயர்த்தப்பட்டு விட்டன
காற்றெங்கும் அழைப்புக்கள் நிரம்பிவிட்டன
எங்கெங்கும் அவை தெரிகின்றன
அடிவானத்திலே கப்பற் பாய்களைக் காண்கிறேன்
முயன்று இடர் மீறி, இழப்புக் கடல்களினின்றும்
யூனிசசின் கப்பல்கள் மீண்டு வருகின்றன
பொழுது புலர்கிறது மனிதன் முன்னேறுகிறான்
நான் பொருட்டாக நான் சத்தியம் பண்ணுவேன்
நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்
போராடுவேன்.

கவிதைகள்தொடரும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# நேர்காணல்

## தமிழீழ எழுச்சிப் பாடகர்

# எஸ். ஜி. சாந்தன்

இன்று தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் மிக நன்றாக அறியப்பட்ட பாடகர் எஸ்.ஜி. சாந்தன். இவர் தமிழீழத் தேசியத் தலைவரின் விருதினைப் பெற்றவர். கம்பீரம் தொனிக்கும் தன் குரலால் தமிழீழ எழுச்சிப் பாடல்களை அனைவரும் கேட்கும்வண்ணம் வசப்படுத்தியவர் இவர். எழுச்சிப் பாடல்களில் அதிகமான பாடல்களைப் பாடியவரும் இவரே. வீதிகள் தோறும் ஊர்கள் தோறும் மக்களின் முன்னிலையில் பாடித் தன்னுடைய பாடல்களின் மூலம் தமிழீழத் தேசிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதில் கணிசமான பங்கு இவருக்குண்டு, இந்த மண்ணுக்குரிய மனிதனாகப் போராளிகளுடன் இணைந்து நின்று அவ்வப்போதெல்லாம் போர்களத்திலும் பணிபுரிந்திருக்கின்றார். ஒரு மாமாங்கக்காலம் (பன்னிரண்டு ஆண்டுகள்) எமது விடுதலைப் போராட்டத்துடன் தன்னைப் பிணைத்துக்கொண்டு எழுச்சிப் பாடல் களினூடாக இசைப்பணி செய்துவருகின்றார். இவர் ஒரு பாடகர் மட்டுமல்ல ஹரிச்சந்திரா. சத்தியவான் சாவித்திரி, போன்ற இசைநாடகங் களினூடாக ஒரு நல்ல நடிகராகவும் தன்னை அடையாளப்படுத்தி வருகிறார். வீடியோத் திரைப்படங்களில் நடித்த அனுபவமும் இவருக்குண்டு. மக்களின் மனங்களில் தனிச்சிறப்பிடம் பெற்ற பாடகராக விளங்கும் எஸ்.ஜி.சாந்தனின் நேர்காணலை வெளியிடுவதில் எரிமலை மகிழ்கின்றது.

**இன்று தமிழீழத்தின் முதன்மைப் பாடகராக விளங்கும்உங்களின் இளமைக்காலம் பற்றியும் நீங்கள் இசைத்துறைக்கு வந்த உங்களது பின்னணி பற்றியும் கூறுங்கள்.**

நான் என்னுடைய பன்னிரண்டு வயதில் கொழும்பிலுள்ள யாழ்ப்பாணத்தார் கதிரேசன் கோவிலில் நினையாப் பிரகாரமாக மேடையேறினேன். அங்கேதான் என்னுடைய முதல் நிகழ்ச்சி நடந்தது. என்னுடைய இளமைக்காலம் இசைத்துறைக்கு வருவதா அல்லது ஒரு வியாபாரத்தில் ஈடுபடுவதா என்று பெரும் இழுபறி நிலையில் இருந்ததது. பின்பு என்னை இசைத்துறையே ஈர்த்துவிட்டது. நான் அப்பொழுதும் இப்பொழுதும் இசையையே உயிராக நேசிக்கின்றேன்.

**தொடர்ந்து பாடகனாக வரும்வரையில் என்ன செய்தீர்கள்.**

நான் இசையில் ஈடுபடுவதை, பாடிக்கொண்டு திரிவதை என்னுடைய தந்தையார் விரும்பவில்லை. நிரந்தரமான ஒரு தொழிலை, வருவாயைப் பெறவேண்டும் என்பதே அவரின் விருப்பமாக இருந்தது. ஒருநாள் கொழும்பில் ஓரிடத்தில் சிலரின் விருப்பத்திற்காகப் பாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்குப் பத்து வயதிருக்கும். என்னுடைய பாடலைக் கேட்டபடி அவ் விடத்துக்கு ஒருவர் வந்தார். பெரிய முறுக்கு மீசை, பெரிய தோற்றம் இன்னும் பாடும்படி கேட்டார். நான் பாடினேன். அவருக்குப் பிடித்துவிட்டது. என்னுடைய விபரத்தைக்கேட்டபின், நாளைக்கு வான் ஒன்று வரும் அதில் ஏறி வா என்று சொல்லிவிட்டுப் போனார். அவர்தான் இலங்கை வானொலியில் முகத்தார் என்ற பெயரில் புகழ்பெற்ற யேசுரட்ணம். அவருடைய ஏற்பாட்டில் சிறுவர் மலர், வாலிபவட்டம் ஆகிய நிகழ்ச்சிகளிலெல்லாம் பங்குபற்றினேன். அப்போது என்னுடன் சிறிதர் பிச்சையப்பாவும் அந்த நிகழ்ச்சிகளில் இணைந்திருக்கின்றார்.

**இசைநிகழ்ச்சிகளில் மேடைப்பாடகராக இருந்த நீங்கள் தாயக விடுதலைப் பாடகராக வந்த விதம் குறித்துச் சொல்லலுங்கள்.**

இந்திய இராணுவம் எமது மண்ணில் இருந்த காலத்தில் மாவீரர் நாளுக்காக கிளிநொச்சியில் பெரு கணேசன் என்பவர் ஒரு பாடலை இயற்றியிருந்தார். அந்தப் பாடலை பின்பு புதுவை அண்ணர் 'இந்த மண் எங்களின் சொந்த மண்' என்ற ஒலிப்பதிவு நாடாவில் என்னைப் பாடவைத்தார். (அப்போதும் அதற்கு முன்பும் நான் என்னுடய பெயரில் இசைக்குழு ஒன்றை வைத்திருந்தேன்) தொடர்ந்து பாடிவருகிறேன்.

**ஒரு தேர்ந்த பாடகனுக்கு இசை ஞானமும் சுருதி சுத்தமும் வேண்டுமென்பது மிகமுக்கியம். இந்த இரண்டுமே தங்களிடம் இருப்பதை உங்களின் பாடல்களைக் கேட்கும்போது உணர முடிகிறது. இதை எப்படி நீங்கள் வசப்படுத்திக் கொண்டீர்கள்?**

நான் ஒரு முருகபக்தன், எனக்கு இவைகளை இறைவன் தந்ததாகவே நினைக்கிறேன்.

**இன்று தமிழர் வாழுமிடமெல்லாம் உங்கள் பாடல்களினூடாக அறிமுகமாகியிருக்கிறீர்கள். பல இசையமைப்பாளர்களின் இசையாள்கையில் பலவகையான பாடல்களையும் பாடியிருக்கிறீர்கள். இவ்வாறானபோதெல்லாம் பல அனுபவங்களும் சுவாரசியமான சம்பவங்களும் நிகழ்ந்திருக்கும். அவை பற்றிக் கூறுங்கள்.**

புதுவை அண்ணருடன் சேர்ந்து ஒலிப்பதிவு செய்வது சுவாரசியமாக இருக்கும். பாடலின்போது நான் தமிழை ஒழுங்காக உச்சரிப்பதற்கே அவர்தான் காரணம்.

**தாயக எழுச்சிப் பாடல்களை அன்று தொட்டு இன்றுவரையிலும் தொடர்ந்து ஒருபணியாக பாடி வருகிறீர்கள். இந்தப் பாடல்கள் நேற்று இன்று என ஒரு வளர்ச்சிப்படியில் இருந்து வருகின்றன. இந்த வகையில் இனி உருவாகும் பாடல்கள் எப்படி இருக்கவேண்டுமென விரும்புகின்றீர்கள்.**

தமிழ் உச்சரிப்பு சரியாக இருக்க வேண்டும். எங்களின் பாடல்கள் ஒவ்வொன்றும் ஆவணம். எனவே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

இசையும் சம்பவங்களை உணர்த்துவதாக இருக்கவேண்டும்.

**உங்களுடன் இணைந்து பாடிய பாடகர்களுடனான அனுபவங்களையும் நெகிழ்வூட்டும் நினைவுகளையும் பற்றிச் சொல்லுங்கள்.**

போராளியாகவும் பாடகராகவும் இருந்து மாவீரரான மேஜர் சிட்டுவை மறக்கமுடியாது. அவரை நினைக்கும்போதெல்லாம் மனம் ஒரு முறை கனக்கும்.

**நாடகத்துறையிலும் உங்களுக்கு ஈடுபாடுண்டு. மக்களிம் உங்கள் நாடகங்களும் நடிப்பும் மிகுந்த வரவேற்ப்பைப்பெற்றிருக்கின்றது. இந்த அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்.**

பாடசாலை நாட்களிலேயே நாடகங்களில் நடித்திருக்கிறேன். சாம்ராட் அசோகன் நாடகத்தில் கௌதமபுத்தராக நடித்தேன். பலரும் பாராட்டிய நாடகமும் நடிப்பும் அது. அனுராதபுரம் வரையிலும் ஒரு போட்டிக்காக அந்த நாடகம் சென்றது. இசைநாடகத்தில்தான் பின்னாளில் நடித்துவருன்கிறேன். என்னுடைய ஆர்வத்தைப் புரிந்துகொள்ளாமல், எனது முயற்சிக்கு ஒத்துழைக்கச் சிலர் மறுத்ததையும் இங்கே குறிப்பிடவேண்டும் என்றாலும் பின்பு யாழ்ப்பாணத்தில் அரியாலை நடிகமணி வைரமுத்து அவர்களுடன் சந்திரமதியாக நடித்திருந்த செல்வராசா, அரியாலை ரத்தினம் ஆகியோரும் என்னை இந்தத் துறையில் ஊக்கப்படுத்தி வளர்த்தவர்கள். அவர்களுடன் ஹரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி என்ற நாடகங்களில் நடித்தேன்.

**ஒரு விடுதலைப்பாடகன் என்றவகையில் மக்களின் முன்னிலையில் நீங்கள் பாடிச் செல்லும்போது நீங்கள்பெறும் உணர்வும் அனுபவமும் எப்படியிருக்கிறது.**

ஒரு முறை எங்களின் நிகழ்ச்சி தொடங்க முன்பு பெண்போராளி ஒருவர் உரையாற்றினார். பின்பு நாங்கள் பாடினோம். பாடும்போது நான் அழுதுவிட்டேன். என் நன்பன் சுகுமாரும் அழுதுவிட்டான். எங்களின் மண்ணில் எத்தனையோ அற்புதமான நிகழ்வுகள் இந்தப் போராட்டத்தில் நடக்கின்றன. அதில் ஒன்றையே அந்தப் போராளி கூறியிருந்தார். அது எங்களின் உணர்சியைப் பெருக்கி அழவைத்துவிட்டது. ஆனால், நிகழ்ச்சி முடிந்தபின் எம்மைத் தேடிவந்தவர்களில் ஒருவர் நீங்கள் நல்லபாடகர் மட்டுமல்ல நல்ல நடிகராகவும் இருக்கிறீர்கள் என்றார் எம்மைப் புரிந்துகொள்ளாமல். மலர்கொண்டு வாழ்த்துவோரும் இருக்கின்றனர். கல்லால் அடிப்போரும் இருக்கின்றனர். எப்போதும் விடுதலைப் பாடல்களைப் பாடும்போது எம்முன்



ஒரு பெருமித உணர்வும் மகிழ்வும் தேசவிடுதலைக்கனவும் பெருகியபடியே இருக்கும்.

**பிரபலமான பாடகராக விளங்கும் நீங்கள் மிக எளிமையாக போர்க்காலத்தின் சுமையைத் தாங்கியபடி வாழ்ந்து வருகிறீர்கள். இதுபற்றிக் கூறுங்கள்.**

இப்படி வாழ்வதில் நான் நிறைவடைகிறேன். இந்த மண்ணில் இந்தக் காலத்தில் வாழ்வதிலும், என்னாலான பணிகளை இந்தப் போராட்டத்திற்குச் செய்வதிலும் மகிழ்வடைகிறேன். இதுவேபோதும் எனக்கு.

**நீங்கள் ஒரு மாவீரனதும் ஒரு போராளியினதும் தந்தையாக இருக்கிறீர்கள். எழுச்சிப்பாடல்களைப் பாடும்போது இந்த உணர்வுகள் எப்படியெல்லாம் பாதிக்கின்றது? இந்தப் பாதிப்புக்கள் எப்படியெல்லாம் பாடல்களில் பிரதிபலிக்கின்றன?**

மாவீரர் துயிலும் இல்லத்துக்காகப் பாடிய பாடலில் வரும் 'மடியில் தவழ்ந்த மகனே' என்ற வரியை உச்சரிக்கும்போது நான் உண்மையிலேயே கரைந்துபோனேன்.

**நீங்கள் தமிழீழத் தேசியத் தலைவருடன் நேரடியாகப் பரிச்சயமுள்ளவர் என்ற ரீதியிலும் அவரிடம் பரிசில்களைப் பெற்றவர் என்ற வகையிலும் பல போராளிகளுடன் நெருங்கிப் பழகுபவர் என்பதாலும் இவர்களைப் பற்றியும் இந்தப் போராட்டம் பற்றியும் இந்தப் போராட்டத்திற்குச் செய்யவேண்டிய பணிபற்றியும் கூறுங்கள்.**

தமிழினத்துக்கென்று இறைவனால் தரப்பட்ட தலைவரைப் புரிந்துகொண்டு அவருடன் இணைந்து நாம் எல்லோருமாகப் போராடி வெற்றிபெறவேண்டும். தலைவரையும் போராளிகளையும் நான் கண்கண்டதெய்வங்களாகவே கருதுகிறேன்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# ஈழத்தமிழர் தாயகம் தமிழீழம்



போராளி சி.விபுலேந்திரன் (ரவி)

வட இந்தியாவிலிருந்து விஜயனும் அவன் தோழர்களும் இலங்கைக்கு வந்து குடியே றியதாகக் கூறப்படும் காலத்திற்கு (2500 ஆண்டுகளுக்கு) முன்னர் தமிழீழத்தின் தனி மரபினரான நாகர்களும், இயக்கர்களும் வாழ்ந்து வந்தனர்.

இலங்கை முழுவதிலும் தமிழ் மக்கள் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் பல்வேறு பகுதி களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பெருங்கற் பண்பாட்டை யொத்ததாக இங்கும் பரவலாகப் பல தொல்பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு, இலங்கையிலும் 3000 ஆண்டு களுக்கு முன்னர் (கி.மு.1000 ஆண்டுகளுக்கு முன்னர்) தமிழினம் சிறந்த நாகரிகத்தோடு வாழ்ந்தமையை எடுத்துக்காட்டுகின்றன.

13ஆம் நூற்றாண்டிலிருந்து 16ஆம் நூற் றாண்டின் இறுதிவரை இலங்கையின் வலி மைமிக்க அரசாக யாழ்ப்பாணத் தமிழரசு திகழ்ந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை யும் புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதியையும் உள்ளடக்கிய பகுதி தமிழர் தாயகமாக இருந்துவந்தது.

இலங்கை முழுவதிலும் தமிழ் மக்கள் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந் தாலும் 2390 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழரும் சிங்களவரும் மாறி மாறி இலங் கையில் அநுராதபுரத்திலும் அதற்குத் தெற் கேயும் ஆட்சி நடாத்தியிருக்கின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் ஓரிரு சிங்கள அரசர்களே குறிப்பிட்ட சில ஆண்டுகள் இலங்கையின் வடபகுதியையும் சேர்த்து ஆட்சி செய்தனர்.


கி.பி. 1215ஆம் ஆண்டு மாகன் என்ற தமிழ் மன்னன் ஆட்சிபீடமேறியதன் பின் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதி தமிழ்ப் பகுதியாகவும் தென்மேற்குப் பகுதியும் மலை யகப்பகுதியும் சிங்களப்பகுதியாகவும் மாறி விட்டன.

இந்த நிலையில் 13ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து 16ஆம் நூற்றாண்டுவரை தமிழீழ அரசு உறுதியான தமிழரசாகத் திகழ்ந்தது. 16ஆம் நூற்றாண்டின் பின் யாழ்ப் பாண அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சிய டைந்தது. போர்த்துக்கேயரும் அவர்களின் பின் ஒல்லாந்தரும் இலங்கையின் கரை யோரப் பகுதி முழுவதையும் கைப்பற்றி ஆட்சி நடாத்திய போதிலும் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரங்களோடு மலைய கத்தையும் கைப்பற்றியதன் பின்னர்தான் இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்தனர்.

மேலும் ஆங்கிலேய வரலாற்று ஆய் வாளர்களால் வரையப்பட்ட இலங்கைப் படத் தில் 'தமிழர் தாயகம்' என்ற புவியியற் பகுதி தெளிவாகப் பிரித்துக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கைத்தீவில் நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தமிழர் தாயகப் பகுதி ஏறத்தாழ 20000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும். இது இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங் களுடன் புத்தளக் கரையோரப்பகுதியையும் உள்ளடக்கிய பகுதியாகும். இது இலங்கை யின் மொத்த நிலப்பரப்பில் 32 வீதம் ஆகும். மேலும் இலங்கையின் மொத்தக் கடற்பரப் பில் 60 வீதமான பகுதியைத் தமிழர் தாயகம் உள்ளடக்கியிருந்தது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் கும்புக்கன் ஆறு வடமேல் மாகாணத்தின் மகா ஓயாவும் அதன் இரு எல்லைகளாகக் காட்டப்பட்டு மகாவலிகங்கை, பட்டிப்பளை ஆறு, கந்தளாய்க்குளம், ஜான் ஓயா, அருவி ஆறு போன்ற ஆற்றுப் படுக்கைகளும் அதன் எல்லைப் பிரதேசமாகக் காட்டப்பட்டுத் தமிழர்களின் தாயகமான 'தமிழீழ அரசுப் பிரதேசம்' வரையறுக்கப்பட்டிருந்தது. ஏறக் குறைய 20000 இற்கு மேற்பட்ட சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட தமிழீழம் என்ற வளமான பகுதியே 1948இல் பிரித்தா னியரால் இலங்கை என்ற தனியான நிர்வாக அலகிற்கு உட்பட்டவகையில் சிங்களவரிடம் ஒப்படைக்கப்பட்டது.




ஒப்படைக்கப்பட்ட அன்றிலிருந்து இன்று வரையான அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்திற்குள் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் 'தமிழர் தாயகம்' என்ற எண்ணக்கருவை அழிக்கத் திட்டம் போட்டன. இத்திட்டத்தின் அடிப்படை யில் தமிழர் தாயகப் பகுதியை ஆக்கிர மிக்கும் வகையில் சிங்களவர்களைத் தமிழர் தாயகப் பகுதியில் (தமிழீழப்பகுதியில்) குடி யேற்றுவதற்கான செயற்திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

| மாவட்டம் | மொத்தப் பரப்பு (சதுர கிலோமீற்றரில்) | மாகாணம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1025.3 | |
| கிளிநொச்சி | 1279.3 | |
| மன்னார் | 1996.2 | வட மாகாணம் |
| வவுனியா | 1966.9 | |
| முல்லைத்தீவு | 2616.6 | |
| திருகோணமலை | 2728.8 | |
| மட்டக்களப்பு | 2854.3 | கிழக்கு மாகாணம் |
| அம்பாறை | 4414.9 | |
| புத்தளம் | 1488.5 | வடமேல் மாகாணம் |
| தமிழீழம் | 20369.1 | தமிழீழம் |

## தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்கள்

2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடமாக இருந்து வந்த தமிழீழ மண்ணில் சிங்களக் குடி யேற்றங்கள் திட்டமிட்ட அடிப்படையில் இலங் கையில் ஆட்சிபுரிந்த சிங்கள அரசுகளால் உருவாக்கப்பட்டுத் தமிழர் தாயகப்பகுதி சிங்களவர்களின் வாழ்விடங்களாக்கப்பட்டு ள்ளன.

தமிழீழ மண்ணின் 1/3 பகுதிக்கும் கூடு தலான பிரதேசம் அதாவது, 8000 சதுரகிலோ மீற்றருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு தமிழர் தாயகத்திலிருந்து நிலப்பறிப்புச் செய்யப் பட்டது.

சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்களின் தனித்துவத்தை அழித்து, தமிழர் தாயகப் பகுதியைப் பிரித்து, தமிழ்த்தேசியம் என்ற எண்ணக்கருவை தமிழ் மக்களின் நெஞ் சங்களிலிருந்து அகற்றும் வகையில் சிங்கள அரசுகள் திட்டம் போட்டுச் செயற்பட்டன.

அன்று டி.எஸ். சேனநாயக்கா என்ற இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி ஆரம்பித்து வைத்த திட்டம் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் வரை அரை நூற்றாண்டாகத் தொடர்ந்து கொண்டி ருக்கிறது.

இத்திட்ட நடைமுறையில் சர்வதேசக் குடியேற்ற விதிமுறைகளுக்கு அமைவான நேரடிக்குடியேற்ற முறைகளும், சர்வதேச குடியேற்ற விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் மறைமுகக்குடியேற்ற முறை களும், அத்துமீறல் குடியேற்றங்களும் கை யாளப்பட்டன.

இதனடிப்படையில் சிங்களத் தலைமை களால் விசேடமானதும், கவர்ச்சிகரமானது மாகச் சிங்களக் குடியேற்றங்களை மையப் படுத்தி உருவாக்கப்பட்ட திட்டங்கள் பல உள்நோக்கங்களைக் கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டன.

*சிங்களவர்களைப் பெரும்பான்மை யாகக் கொண்ட பிரதேசங்களை உருவாக்கி அப்பிரதேசம் சிங்களவர்களுடைய பூர்வீக மான மண்ணாகக்காட்டும் ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

*தமிழ், சிங்கள இராச்சியங்களுக்கிடை யேயான காட்டு எல்லையை அழித்தல்.

* தமிழீழ மாவட்டங்களைத் துண்டாடல்.

* தமிழீழப் பிரதேச நிலப்பரப்பை அப கரித்து தமிழ்ப்பிரதேச நிலப்பரப்பைக் குறைத்தல்.

* கிராம, பிரதேச, மாவட்ட, மாகாண ரீதியாகச் சிங்களவரின் எண்ணிக்கையை அதிகரித்து தமிழரின் வீதத்தைக் குறைத்தல்.

*சிங்களவர்களுக்கான நிர்வாக நிலப் பரப்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கான உதவிகளைக் கூட்டல்.

* பிரதேச ரீதியாக அதிகாரங்களைப் பரவலாக்கல்.

* தமிழீழத் தலைநகரைச் சிதைத்தல்.

* தமிழ் மாவட்டங்களின் பகுதிகளைப் பறித்தல்.

* எல்லை மாவட்டங்களை அபிவிருத்தி செய்தல்.

* எல்லை மாவட்டப் பகுதிகளைத் தமிழ் மாவட்டங்களுடன் இணைத்தல்.

* தமிழ்ப் பெயர்களை மாற்றிச் சிங்களப் பெயர் வைத்தல்.

* பாராளுமன்ற அங்கத்துவத்தை அதிகரித்தல்.

* சிங்கள அரச அதிகாரிகளை நிய மித்தல்.

* பாதுகாப்புப்படைகளுக்குக் காணிகள் வழங்கல்.

சிங்களக் குடியேற்றங்களுக்கான நியா யங்களாக சிங்கள அரசினால் சர்வதேச குடியேற்ற விதிமுறையான 'ஒரு நாட்டின் தலைமைப்பீடத்திற்குப் பூரணமாகக் கட்டுப் பட்டு அந்த நாட்டிலுள்ள மக்களை அவர் களினதும், நாட்டினதும் மேம்பாடு கருதி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு சென்று அந்த நாட்டு அரசால் குடியேற்றலாம்' என்ற ஒழுங்குகள் அரசால் எடுத்துக் கூறப்பெற்றது. இந்தவகையில் குடியேற்றங்களுக்கான உதவிகள் சர்வதேச அமைப்புகளிடமிருந்து பல திட்டங்களின் அடிப்படையில் தயாரித்து வழங்கப்பெற்றுப் பெறப்பட்டன.

அத்துடன் அரசிற்குச் சார்பான பல அரசசார்பற்ற நிறுவனக் கட்டமைப்புகள் மூலமும் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

### பாரிய குடியேற்றத்திட்டங்கள்

* கல்ஓயா குடியேற்றத்திட்டம்.
* அல்லை கந்தளாய் குடியேற்றத்திட்டம்.
* மல்வத்துஓயா குடியேற்றத்திட்டம்.
* மதுறுஓயா குடியேற்றத்திட்டம்.
* வெலிஓயா குடியேற்றத்திட்டம்.
* யான்ஓயா குடியேற்றத்திட்டம்.
* பதவியா குடியேற்றத்திட்டம்.
* துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம்.
* பாவற்குளம் குடியேற்றத்திட்டம்.

**'சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் தனித்துவத்தை அழித்து, தமிழர் தாயகத்தைப் பிரித்துத் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் நோக்க இலக்குகளைக்கொண்டு சிங்கள அரசால் செயற்படுத்தப்பெற்றன'**





இக்குடியேற்றத்திட்டங்கள் மூலம் தமிழ் மாகாண, மாவட்டங்களின் இன விகிதாசாரம் பெருமளவு மாற்றம் அடைந்தது.

1935ஆம் ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட பெயர்களிலான இக்குடியேற்றத்திட்டங்கள் மூலம் காணிகளின் மறுபகிர்வினை அரசாங் கம் மேற்கொண்டது.

1. பாரிய குடியேற்றத்திட்டங்கள்.
2. உயர்நிலக் குடியேற்றத்திட்டங்கள்.
3. கிராம விரிவாக்கத் திட்டங்கள்.
4. இளைஞர் குடியேற்றத்திட்டங்கள்.
5. காணிக் கொடைகள் (சிறப்பு ஏற் பாடுகள்)
6. அத்துமீறிய குடியேற்றங்களை ஒழுங் குபடுத்தல்.
7. நடுத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத் திட்டங்கள்.
8. மழை நீர்ப்பாசனப் பண்ணை அபிவி ருத்திக் குடியேற்றத்திட்டம்.
9. நகர அபிவிருத்தித்திட்டம்.
10. பெண்கள் குடியேற்றத்திட்டம்.

நேரடிக்குடியேற்றங்கள் மூலம் இக் குடியேற்றத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுச் சிங் களவருக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



| மாகாணம் | பரப்பளவு (சதுர கிலோ மீற்றர்) |
|---|---|
| வடக்கு மாகாணம் | 8879.6 |
| கிழக்கு மாகாணம் | 10001.0 |
| மொத்தம் | 18880.6 |

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்த 1927ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது காணி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு இவ்வாணைக் குழுவின் சிபார்சில் 1935ஆம் ஆண்டு 'காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்' இயற்றப்பட்டு வேகமான காணிக் குடியேற்றயுகம் ஒன்றின் தோற்றத்திற்கு வழிவகுத்து எவ்வித மாற்றமும் இன்றி இன்றும் இக்கொள்கை தொடர்ந்தும் கடைப் பிடிக்கப்பட்டு வருவதோடு, இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் 1959, 1987இல் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள்கூட சிங்களக் குடியேற்றங்களை வேகமாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவி வருகின்றன.

இச் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் பல்வேறு பெயர்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுச் சர்வதேசங்களிலிருந்து நிதிகளையும், உதவிகளையும் பெற்று நடைமுறைப் படுத்தும் நோக்கங்களையும் கொண்டிருந்தது.

* காணி அற்றோருக்குக் காணி வழங்குதல்.

* காணிப் பகிர்வில் நிலவும் சமனின்மையைக் குறைக்கத்தக்க வகையில் காணி மறுபகிர்வினை மேற்கொள்ளல்.

* உற்பத்தியினை, குறிப்பாக நெல் மற்றும் உப உணவு உற்பத்தியினைப் பெருக்குதல்.

* கிராமிய மட்டத்தில் நிலவும் வேலையின்மையை நீக்குதல்.

* மக்களின் வருமான மட்டத்தினை அதிகரிப்பதன் மூலம் கிராமிய வறுமையினை நீக்குதல்.

* பிரதேசரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

இந்நோக்கங்கள் சிங்களக் குடியேற்றங்களுக்குச் சர்வதேசத்தில் நிதிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்ததோடு, பலப்படுத்துவதற்கும் உதவியது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்திலேயே முதன் முதலில் அதிகளவில் குடியேற்றத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

கிழக்கு மாகாணத்தின் நிலப்பரப்பு அதிகமாக இருந்ததும் மாவட்டங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததும் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளைக் கொடுத்திருந்தன.

மேலும் இலங்கைத்தீவின் மொத்த நிலப் பரப்பில் 82.3 வீதமான காணிகள் அரசிற்குச் சொந்தமானதாகவும், 17.7 வீதமான நிலப் பரப்பே தனியாருக்குச் சொந்தமானதாகும். இந்நிலையே தமிழர் தாயகப்பகுதியின் நிலப் பரப்பிலும் காணப்படுவதால் பெரும் வீதமாக உள்ள அரச காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதுகூடச் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வசதியாகஇருந்தது.

தமிழ் மாகாணங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை முழுவதும் இறுதியாக மேற்கொள்ளப்பெற்ற (1981) குடிசன மதிப்பீட்டின்படியும் இன விகிதாசாரத்தில் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஒவ்வொரு ஆண்டு ரீதியான குடிசன மதிப்பீட்டிலும் சிங்களவர்களின் எண்ணிக்கையும் வீதமும் அதிகரித்துச் செல்ல தமிழர்களின் வீதம் குறைந்து சென்றது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுடன், முஸ்லீம்களின் வீதமும் குறைந்ததை அவதானிக்கமுடிகிறது.

இத்துடன் தமிழர் தாயகப் பகுதியான வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டமும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து பறிக்கப் பட்டதை நாம் மறந்துவிடமுடியாது.

## புத்தளம் மாவட்டம்

1953ஆம் ஆண்டுவரை தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த புத்தளம் மாவட்டம் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களினாலும் பிற மாவட்டப் பகுதிகளை இணைத்ததனாலும் 85 வீதம் சிங்களவர்களைக் கொண்ட மாவட்டமாக மாற்றப்பட்டுவிட்டது.

இலங்கைத்தீவில் ஆங்கிலேயரின் ஆட்சி ஒருங்கிணைப்பின்போது 1833இல் அன்றைய புத்தளம் மாவட்டத்துடன் சிங்களவர் பெரும்பான்மையினராக இருந்த சிலாபம் மாவட்டம் இணைக்கப்பட்டிருந்தாலும், 58 ஆண்டுகளுக்குள் (1891) புத்தளத்துடன் சிலாபத்தை இணைத்தது பொருத்தமற்றது எனப் புத்தளத்திலிருந்து சிலாபம் அன்றைய ஆங்கிலேய ஆளுநரால் பிரித்து வேறாக்கப்பட்டது.

அதன்பின் தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த புத்தளம் மாவட்டத்தில் அத்துமீறிய பல சிங்களக் குடியேற்றங்களைச் சிங்கள அரசு ஊக்குவித்ததோடு சிங்களவரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட சிலாபம் மாவட்டத்தை 1953இல் மீண்டும் இணைத்து மல் வத்துஓயா சிங்களக் குடியேற்றத்தையும் மேற்கொண்டு சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட மாவட்டமாக அன்றே மாற்றிவிட்டது.

புத்தளம் மாவட்டத்தில் முதல் குடிசன மதிப்பீட்டின்போது 35 வீதமாக இருந்த இஸ்லாமியத் தமிழரின் குடித்தொகை விகிதாசாரம் இன்று 9.7 ஆகக் குறைக்கப்பட்டது. மொத்தத்தில் 60 வீதம் தமிழ்மக்கள் (32 வீதம் இஸ்லாமியத் தமிழர்கள் 28 வீதம் ஏனைய தமிழர்கள்) வாழ்ந்து வந்தது புத்தளம் மாவட்டம். இன்று சிங்கள ஆட்சியாளர்கள் புத்தளம் மாவட்டத்தை முழுமையான சிங்கள மாவட்டமாக மாற்றும் சதி முயற்சியாக சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த சிலாபம் மாவட்டத்தைப் புத்தளம் மாவட்டத்துடன் இணைத்ததன் மூலம் 85 வீதம் சிங்களவர் வாழும் மாவட்டமாக மாற்றப் பட்டுத் தமிழ் பேசும் மக்கள் 15 வீதம் ஆக்கப் பட்டனர்.

**வடக்கு கிழக்குப் பகுதியில் நடைபெற்ற சிங்களக் குடியேற்றங்கள்.**

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை கிழக்கு மாகாண மாவட்டங்களான திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் 1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற 'கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டமே' முதலில் ஆரம்பிக்கப் பெற்ற பாரிய குடியேற்றத்திட்டமாகும்.

பட்டிப்பளை என்ற பாரம்பரியத் தமிழ்ப் பெயரைக் கொண்ட பிரதேசம் 'கல்லோயா' என்ற பெயர் சூட்டப்பட்டு 'கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கையின் தேசபிதா என்ற டி.எஸ். சேனநாயக்காவால் போடப் பட்ட திட்டம் 1949 ஆவணி 28 அன்று இங்கினியாகலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம்

* 2 இலட்சம் பேர் குடியமர்த்தப்பட்டனர்.

* 38 சிங்களக் குடியேற்றக் கிராமங்கள், 6 தமிழ்க் குடியேற்றக் கிராமங்கள் ஏற்படுத்தப்பட்டு இத் தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் 1956, 1958 இனக்கலவரங்களில் துரத்தியடிக்கப்பட்டு இன்று பூரணமான சிங்கள மயமான குடியேற்றத் திட்டமாக இது மாற்றப்பெற்றுள்ளது.

* மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில் 1959ஆம் ஆண்டு அம்பாறை எனும் புதிய தேர்தல் தொகுதி உருவானது.

* 1961ஆம் ஆண்டு சித்திரை 10ஆம் திகதி 'அம்பாறை மாவட்டம்' உருவாகியது.

* 7004 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைகொண்ட மட்டக்களப்பு மாவட்டம் 4500 சதுர கிலோமீற்றர் பரப்பை இழந்து 2500 சதுர கிலோமீற்றராகக் குறுகியது.

* மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவரின் இனவிகிதாசாரம் அதிகரித்தது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் சிங்களவரின் இனவிகிதாசாரம் அதிகரித்ததன் மூலம் 1953ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இருந்த 4 தமிழ்ப்பிரதேச



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilananagam.net



செயலர் பிரிவுகளும், 1 சிங்களப் பிரதேச செயலர் பிரிவும் 1931இல் 7 தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவுகளாகவும், 5 சிங்களப் பிரதேச செயலர் பிரிவுகளாகவும் மாற்றம் பெற்றன.

இதன்படி அம்பாறை, அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான 4318 சதுர கிலோமீற்றரில் 3391 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு சிங்களப் பிரதேச செயலர் பிரிவுகளுக்குரியதாகும். அதாவது மாவட்டத்தில் 60 வீதத்திற்கு மேற்பட்டதாக தமிழ் பேசும் மக்களான தமிழ்-முஸ்லீம் மக்கள் வாழ்ந்தும் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 78.5 வீதமான நிலப்பரப்பு சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாக உள்ளது.

## திருகோணமலை மாவட்டக் குடியேற்றம்

இம் மாவட்டத்தில் விவசாய நீர்ப்பாசனக் குடியேற்றங்கள் மீனவக் குடியேற்றங்கள், புனிதப் பிரதேச குடியேற்றங்கள், ஆயுதப் படையினர் குடியேற்றங்கள், திருமலை நகர்ப்புறக் குடியேற்றங்கள் எனத் தொடர்ச்சியாக 1949ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை குடியேற்றத் திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பெற்ற அல்லை கந்தளாய், பதவியா, மொரவேவ, கல்மெல்டியாவ, ஜான்ஓயா, சேருவில, கோமரங்கடவல, மகா திவுல்வெவ குடியேற்றத் திட்டங்கள் முக்கியமானவை. இக்குடியேற்றத் திட்டங்கள் மூலம்,

* மாவட்ட சனத்தொகையின் இன விகிதாசாரத்தினை பெரும் மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

* 55 வீதத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பு சிங்களவர் மயமாகியுள்ளது.

* சேருவில என்ற தேர்தற் தொகுதியின் தோற்றத்திற்கு வழிவகுத்துள்ளது.

* கந்தளாய், சேருவில, மொரவேவ, கோமரங்கடவல, பதவிசிறிபுர என்ற 5 சிங்களப் பிரதேச செயலகங்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

* சிங்களவர்களுக்கான பாராளுமன்ற அங்கத்துவத்தை மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

* மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகளின் பெயர்கள் மாற்றப்பட்டுச் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டு, அப்பிரதேசங்கள் சிங்களப் பிரதேசங்களாகக் காட்டும் முயற்சி மேற்கொள்ளப்பெற்றது.

சிங்களக் குடியேற்றங்கள் மூலம் 'தமிழர் தாயகம் தமிழீழம்' என்ற எண்ணக்கருவை தமிழர் நெஞ்சங்களில் இருந்து அழிக்கும் வகையில் தமிழீழத் தலைநகராம் திருகோணமலையைச் சிதைக்கும் பலதிட்டங்களைச் சிங்கள அரசுகள் மேற்கொண்டன.

இந்தவகையில் திருகோணமலை மாவட்டத்தை சிங்களவர்களை பெரும்பான்மையாகக்கொண்ட மாவட்டமாக்கும் முயற்சியை சிங்கள அரசுகள் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளன. இந்நிலையை 1987ஆம் ஆண்டு

**வட மாகாணச் சனத்தொகை [1981 குடிசன மதிப்பீட்டின்படி]**

| ஆண்டு | சகல இனங்களின் மொ. எண் | சிங்களவர் | வீதம் | தமிழர் | வீதம் | முஸ்லீம் | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1931 | 374829 | 3795 | 1.0 | 356801 | 95.1 | 13095 | 3.4 |
| 1946 | 479572 | 9602 | 2.0 | 449958 | 93.8 | 18183 | 3.3 |
| 1953 | 570650 | 14222 | 2.4 | 581393 | 93.1 | 23233 | 4.0 |
| 1963 | 741910 | 20270 | 2.7 | 689470 | 92.9 | 30760 | 4.1 |
| 1971 | 874629 | 26847 | 2.9 | 802105 | 92.5 | 38565 | 4.4 |
| 1981 | 1111468 | 33149 | 3.0 | 1023223 | 92.1 | 52638 | 7.4 |

குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரத்திலிருந்து அறிந்துகொள்ளமுடியும். இதன் மூலம் சிங்களவரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட மாவட்டமாகத் திருமலை மாவட்டம் மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன் ஏற்பாடாக 1982ஆம் ஆண்டு அநுராதபுர மாவட்டத்தின் 'பதவி சிறிபுர' என்ற தனியான சிங்களப் பிரதேச செயலர் பிரிவு அநுராதபுர மாவட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு திருகோணமலை மாவட்டத்துடன் சிறீலங்கா அரசால் இணைக்கப்பட்டது.

மேலும் திருமலை நகர்ப்புறப் பகுதியில் பல சிங்களக் குடியேற்றக் கிராமங்களை உருவாக்கி நகர்ப் பகுதியைச் சிங்களமயமாக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. மேலும் இல்மனைட், சீனி, மா ஆலை போன்ற தொழிற்சாலைகளையும், எண்ணெய்க் கூட்டுத்தாபனம், கப்பல் கட்டும் கூட்டுத்தாபனம், புகையிலைக் கூட்டுத்தாபனம் என்பவற்றையும் மாவட்டத்தில் நிறுவிச் சிங்களவர்களின் எண்ணிக்கையை சிங்கள அரசு அறிவித்தது. இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மாவட்டத்தின் அரச அதிபராக சிங்களவர் மட்டுமே இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் சிங்கள அரசுகளால் நியமிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## வடமாகாணச் சிங்களக் குடியேற்றங்கள்

வடமாகாணத்தைப் பொறுத்தவரை வவுனியா மாவட்டத்திலேயே முதலில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1956ஆம் ஆண்டு 'பாவற்குளம்' குடியேற்றத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்பத்தில் தமிழ் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டும், பிற்பட்ட காலங்களில் இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் துரத்தப்பட்டு இது சிங்களக் குடியேற்றப் பிரதேசமாகியது.

இதனுடன் இணைந்ததாகப் பிரதான குடியேற்றத்திட்டங்கள், நடுத்தரமட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள், கிராம விரிவாக்கத் திட்டம் என்ற பெயர்களில் பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்குடியேற்றத்திட்டத்தின் மூலம் வவுனியா மாவட்டத்தில் சிங்கள மக்களுக்கு எனத் தனியான 'வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு' என்ற பிரதேச செயலர் பிரிவு உருவாகியது. குடிசன மதிப்பீட்டின்படி மாவட்ட இன விகிதாசாரம் பெருமளவு மாற்றம் அடைந்தது.

## மன்னார் மாவட்டம்

இம் மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கைக்கென மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் சிலாவத்துறை, கொண்டச்சி, மறிச்சுக்கட்டி, பண்டிவிரிச்சான், மடு பகுதியில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 1700 ஏக்கர் நிலம் 299 தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் பெரும் பணச் செலவு செய்து நிலத்தைச் சீர்செய்து கிணறுகளையும் வெட்டியதன் பின் கூட்டுத்தாபனத்திற்கு இழப்பு (நட்டம்) என்று கூறி அந்த மக்களின் உரிமங்களை நீக்கி காணிகளைத் திரும்பப் பிடுங்கிய சிங்கள அரசு அவற்றை ஓய்வுபெற்ற சிறீலங்கா இராணுவத்திற்கு வழங்கியது.

தொடரும்

**கிழக்கு மாகாணச் சனத்தொகை [1981 குடிசன மதிப்பீட்டின்படி]**

| ஆண்டு | சகல இனங்களின் மொ. எண் | சிங்களவர் | வீதம் | தமிழர் | வீதம் | முஸ்லீம் | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1921 | 192821 | 8744 | 4.5 | 103251 | 53.5 | 75992 | 30.4 |
| 1946 | 279112 | 28456 | 8.5 | 146059 | 52.3 | 109024 | 39.1 |
| 1953 | 354410 | 46470 | 13.1 | 167893 | 47.3 | 135322 | 38.1 |
| 1963 | 546130 | 109690 | 20.1 | 246190 | 45.1 | 185750 | 34.0 |
| 1971 | 717571 | 148572 | 20.7 | 315560 | 43.9 | 248567 | 34.6 |
| 1981 | 976473 | 243358 | 24.9 | 409451 | 41.9 | 315201 | 32.2 |



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



தமிழ் மற்றும் இந்தியத் திரைப்பட உலகின் நடிப்பின் சிகரம், நடிகர்திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் 21.06.2001 அன்று சென்னை அப்பலோ மருத்துவமனையில் காலமானார்.

74 வயதான சிவாஜி கணேசன் அவர்கள் விழுப்புரம் சின்னையா மன்றாடியார் அவர்களின் மகனாகப் பிறந்து, தனது ஆறாவது வயதிலேயே கலைப்பணியில் செயற்படத் தொடங்கினார். இந்திய சுதந்திர விடுதலைப் போராட்ட காலப்பகுதியில் 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' நாடகத்தைப் பார்த்து அதன்பால் கவரப்பட்டு வீட்டைவிட்டு ஓடி நாடக நிறுவனம் ஒன்றில் சேர்ந்துகொண்டார். ஆரம்ப காலங்களில் சிறுசிறு வேடங்களேற்று நடித்த வி.சி.கணேசன் அவர்கள் அதிகமாக பெண் வேடமேற்று நடித்துவந்தார்.

1952ஆம் ஆண்டில் வி.சி.கணேசன் அவர்களை திரையுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். 'பராசக்தி' திரைப்படத்தின் மூலம் சினிமா உலகில் அடியெடுத்து வைத்த கணேசன் அவர்கள் முதற்படத்திலேயே முத்திரை பதித்தார். தொடர்ச்சியாக வெளிவந்த தனது திரைப்படங்களில் மிகச் சிறப்பாக நடித்து மக்கள் மனங்களில் குடிகொண்டார்.

இக்காலப்பகுதியிலேயே 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' என்னும் நாடகத்தில் மராத்தியவீரர் சத்ரபதி சிவாஜியாக கணேசன் அவர்கள் நடித்ததை கண்ணுற்ற தந்தை பெரியார் அவர்கள், அவரது திறமையைப் பாராட்டி 'சிவாஜி' எனப்பட்டமளித்தார். இதன்பின்னரே இவரது பெயர் 'சிவாஜி கணேசன்' எனப் புகழ்பெற்றது.



## நடிகர்திலகம் சிவாஜி கணேசன்

ஏராளமான விருதுகளைப் பெற்ற சிவாஜி கணேசன் அவர்களுக்கு வீரபாண்டிய கட்டப்பொம்மன் திரைப்படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக ஆசிய-ஆபிரிக்க திரைப்படவிழாவில் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது. 1962இல் சீனப் போரின்போது, எல்லைக்குச் சென்று தமது நாட்டு இராணுவத்தினரை தனது நடிப்பின் மூலம் உற்சாகப்படுத்தியமைக்காக இந்திய மத்திய அரசு சிவாஜி கணேசனுக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கிக் கௌரவித்தது. நவராத்திரி என்னும் திரைப்படத்தில் 9 வேடமேற்று மிகச் சிறப்பாக நடித்ததைப் பாராட்டி பிரெஞ்சு அரசு 'செவாலியே' என்னும் விருதினை சிவாஜி கணேசனுக்கு வழங்கியது. 50 ஆண்டுகால அயராத கலைப்பணிக்காக இந்திய மத்திய அரசு மீண்டும் நடிகர்திலகத்திற்கு 'தாதா சாகேப் பால்கே' என்னும் விருதினை வழங்கிப் பாராட்டியது. இவ்வாறு அதிக விருதுகளைப் பெற்ற இவரது தெய்வமகன் என்னும் படம் ஒஸ்கார் விருதுக்காக அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நாடகத்துறையில் இருந்து திரைப்படத் துறைக்கு வந்து பிரபலமான சிவாஜி கணேசன் அவர்கள் 1949இல் அண்ணா அவர்கள் ஆரம்பித்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து பிரச்சாரச் செயற்பாடுகளில் செயற்பட்டார். இக்காலப்பகுதியில் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாட்டால் அக் கட்சியில் இருந்து விலகி தமிழ் தேசிய கட்சியில் இணைந்தார். பின் அங்கிருந்தும் வெளியேறி 1955இல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். 1969இல் காங்கிரஸ் கட்சி உடைந்தபோது, காமராஜருடன் இணைந்து உறுதியுடன் செயற்பட்டார். 1975இல் காமராஜர் இறந்தபின் இந்திரா காந்தி அவர்கள் தலைமையில் ஒன்றுபட்ட காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். இந்திரா காந்தி அவர்களது மரணத்திற்குப்பின் ராஜீ காந்தி அவர்களது கட்டுப்பாட்டில் கட்சிவந்தபோது, சிவாஜி அவர்களும், அவரது ஆதரவாளர்களும் ஓரங்கட்டப்பட்டு வந்தார்கள். ஜனதா தளம் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவராகவும், சிலகாலம் பதவி வகித்தார். எம்.ஜி. ஆர். அவர்கள் இறந்த பின்னர் அ.இ.அ.தி.மு.க. ஜானகி அணிக்கு தனது ஆதரவை வழங்கி தமிழக முன்னேற்ற முன்னணி என்னும் கட்சியை ஆரம்பித்து, 1986இல் நடந்த சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டார். இதில் சிவாஜி கணேசன் அவர்கள் படுதோல்வி கண்டதனால் நிரந்தரமாகவே அரசியலில் இருந்து விலகிக்கொண்டார்.

தனது நடிப்பாற்றல் மூலம் மொழிகளைக் கடந்து ரசிகர்களது மனங்களில் குடிகொண்ட நடிகர்திலகம் அவர்களது இழப்பு, தமிழ் சினிமா உலகின் நடிப்பாற்றலில் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பது உண்மையிலும் உண்மை.

## பூலான்தேவி

இந்தியாவின் முன்னாள் 'கொள்ளைராணி'யும் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினருமாக விருந்த பூலான்தேவி 25.07.2001 அன்று சுட்டுக் கொல்லப்பட் டார்.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர், மேல் ஜாதியினரால் பாலியல் வல்லுறவு மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டதனால், பின்னாளில் கொள்ளை ராணியாகி அவர்களில் 22 பேரை கொலை செய்தார். 1983இல் பொலிசாரிடம் சரணடைந்து, 1994இல் மன்னிப்புப் பெற்று விடுதலையானார். 1996இல் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

புதுடில்லியில் உள்ள அவரது வீட்டிற்கருகே வைத்து முகமூடி அணிந்த மூவரினால் சுட்டுக் கொல்லப்பட்ட இவரது வரலாற்றை வைத்து 'கொள்ளை ராணி' (Bandit queen) என்னும் திரைப் படமொன்றும் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# நினைவுக் குறிப்பு

## குடியுரிமை பறிப்பு

தமிழர்கள் என்னும் காரணத்துக்காக குடியுரிமைச் சட்டம் என்னும் போர்வையின் கீழ் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை 1948.08.20 அன்று சிங்களப் பேரினவாத ஆட்சிபீடத்தினால் பறிக்கப்பட்டது.



## சுதுமலைப் பிரகடனம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 1987.08.04 அன்று முதன்முதலில் தமிழீழ மக்கள் முன்தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடன மாகும்.

'இந்திய-இலங்கை ஒப்பந்தமானது, எமது தேசிய இனப்பிரச்சி னைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது' என்பதனை மிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந்தார் தலைவர் அவர்கள்.

## வல்வெட்டித்துறைப் படுகொலை

1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2,3,4 ஆகிய திகதிகளில் யாழ். குடாவின் வல்வெட்டித்துறைப் பகுதியில் வீடுகளிலும், வீதிகளிலும் நின்ற மக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதேவேளை, இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களும் அடித்துக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைச் சம்பவத்தில் சிறுவர், மாணவர், வயோதிபர், பெண்கள் உட்பட 64 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, சொத்துக்கள், உடமைகள் என்பனவும் பெருமளவில் நாசமாக்கப்பட்டன.

## வீரமுனைப் படுகொலை

அம்பாறை மாவட்டத்தில் 1990.08.10 அன்று கோவில் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லீம் காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டனர். 100 தமிழ் மக்கள் வரை கொல்லப்பட்ட இத்தாக்குதல், ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்களது ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்டது.

## அராலிக் கண்ணிவெடித் தாக்குதல்

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிங்களப்படைத்துறையின் வடபிராந்திய தலைமையை ஒரே தாக்குதலின் மூலம் இல்லாதொழித்தது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித்தாக்குதல். சிங்கள ஆட்சியாளர்களையும், படைத்தலைமை யையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய இத்தாக்குதல் 1992.08.08 அன்று நிகழ்த்தப்பட்டது.

## மயிலந்தனைப் படுகொலை

மட்டக்களப்பு மயிலந்தனைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்குப் பயந்து பதுங்கச் சென்றவேளை, அங்கு பதுங்கியிருந்த சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் அப் பொதுமக்களை வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர். 1992.08.09 ஆம் திகதி நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் 50 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

## சண்டிலிப்பாய் படுகொலை

1995.08.21 அன்று 'ரெகன் பயர்' என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிறீலங்கா படையினரின் எறிகணை வீச்சில் 12 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# பதிவுகள்







தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் இனப் பாகுபாடு, இனவெறிக்கெதிரான ஐ.நாவின் அனைத்துலக மாநாடு 31.08.2001 அன்று ஆரம்பமானது. ஐ.நா சபையின் செயலர் திரு. கோபி அனான் அவர்கள் கலந்துகொண்டு இந் நிகழ்வுகளை தொடக்கிவைத்தார்.

உலகின் பல பாகங்களிலிருந்தும் ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்தின் பிரதிநிதிகள் இந் நிகழ்வில் கலந்துகொண்டதுடன் பல நாட்டுத் தலைவர்களும் கலந்துகொண்டனர். இந் நிகழ்விற்கு முன்னேற்பாடாக ஊர்வலங்கள், கூட்டங்கள், கண்காட்சிகள் என்பன ஜூலை 28ஆம் திகதியில் இருந்து 31ஆம் திகதிவரை நடைபெற்றன. தொடர்ந்து 7 நாட்கள் நடைபெற்ற இந் நிகழ்வில் பல்லாயிரக் கணக்கானோர் பங்கு பற்றினார்கள்.

இந் நிகழ்வுகளில் ஈழத் தமிழர்களது பிரச்சினை சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டதுடன் பலரது கவனத்தையும் ஈர்த்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.





**22.07.2001** அன்று இத்தாலியின் பலெர்மோ நகரில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மாவீரர் அகவணக்கத்துடன் ஆரம்பித்த இந் நிகழ்வுகளில் பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப் பட்டதுடன் பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

1200ற்கு மேற்பட்டோர் கலந்துகொண்ட இந் நிகழ்வில் 200 வரையான இத்தாலியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், கலை நிகழ்வுகளிலும் பங்குகொண்டனர். நிகழ்வின் இறுதியில் தமிழிசைப்பாணர் புஸ்பவனம் குப்புசாமியின் எழுச்சி கீதங்களும் இடம்பெற்றன.

**சிறீலங்கா விமானப்படையின் மிக்- 27 யுத்தவிமானம் வீழ்ந்து நொருங்கியது.**

கட்டுநாயக்க விமானப் படைத்தளத்துக்கு அருகே பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிறீலங்கா விமானப்படையின் மிக் 27 ரக யுத்த விமானம் ஒன்று 18-08-2001 அன்று குரான பகுதியில் வீழ்ந்து நொருங்கியது. இரண்டு மாடி வீடு ஒன்றின் மேல் வீழ்ந்து நொருங்கிய இவ விமானத்தின் உக்ரேன் நாட்டு விமானி அவ்விடத்திலேயே உடல்சிதறிப் பலியானதுடன் மேலும் ஆறு பொதுமக்கள் இச் சம்பவத்தில் காயமடைந்தனர்.









தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# பதிவுகள்

**சிறீலங்காவின் இரசாயன ஆயுதக் கொள்வனவிற்கு விடுதலைப் புலிகள் கண்டனம்.**

சிறீலங்கா அரசு அண்மையில் ரஸ்யாவிடமிருந்து கொள்வனவு செய்துள்ள நவீன இரசாயன ஆயுதம் குறித்து விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைச் செயலகம் (17-08-2001 அன்று) கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட இவ் ஆயுதக் கொள்வனவின் மூலம் சிறீலங்கா அரசானது ஈழப்போரை ஓர் புதிய ஆபத்தான பரிமாணத்துக்கு விரிவாக்கம் செய்துள்ளது என்றும், இவ்வாயுதம் வடகிழக்குப் போர்முனைகளில் பாவிக்கப்பட்டால் பாரதுாரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளனர். மிகவும் ஆபத்தான இவ்வாயுதத்தை கொள்வனவு செய்தமைக்காக சிறீலங்கா அரசை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டியதுடன், இவ் ஆயுதப்பாவனையால் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகள் பற்றியும் அவ் அரசுக்கு அச்சுறுத்தல் விடுக்கவேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் இயக்கம் அவ் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

**கிபிர் குண்டு வீச்சில் மாணவன் பலி.**

சிறீலங்கா வான்படையின் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் 12-08-2001 அன்று விசுவமடுப்பகுதியில் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 22 வயதுடைய பரமகுலசிங்கம் ஜெகதீஸ் எனும் மாணவன் உடல்சிதறிப் பலியாதுடன், இளம் பெண்ணொருவரும் படுகாயமடைந்துள்ளார்.

**மத்திய முகாம் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்**

அம்பாறை மத்திய முகாம் (சென்றல் காம்ப்) பொலிஸ் நிலையம் மீது 20-08-2001 அன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரதாக்குதலில் 25 ற்கும் மேற்பட்ட சிறீலங்காப் பொலிசார் கொல்லப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

15 நிமிடங்களே நீடித்த சண்டையில் முகாமை தமது முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுவந்த புலிகள் ஆயுதங்களைக் கைப்பற்றிய பின்னர் அங்கிருந்து வெளியேறினர்.

**கொக்குத்தொடுவாய், ஜானகபுர படைமுகாம்கள்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்.**

23-08-2001 அன்று மணலாறு கொக்குத்தொடுவாய், ஜானகபுர படைமுகாம்கள்மீது ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். ஆட்டிலறி மற்றும் மோட்டார் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் படையினரின் 7 சடலங்களைக் கைப்பற்றியதோடு பெருமளவு நவீன ஆயுதங்களையும் கைப்பற்றிச் சென்றனர். தமது தரப்பில் மேலும் 9 பேரைக் காணவில்லை என சிறீலங்கா அரசு தெரிவித்தது.

**கிளைமோர் தாக்குதலில் இராணுவத்தினர் பலி**

28-08-2001 அன்று வவுனியா மாவட்டம் கல்மடுப்பகுதியில் இராணுவ முன்னணிக் காவலரண்களுக்கு உணவு கொண்டு சென்ற இராணுவ உழவு இயந்திரம் ஒன்று விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் சிக்கி முற்றாகச் சேதமடைந்ததுடன் அதில் பயணம் செய்த 5 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.



**"பெரும்பான்மை பலமற்ற நிலையில் பேசத்தயாரில்லை" அரசின் பேச்சுக்கான அழைப்புக் குறித்து திரு. அன்ரன் பாலசிங்கம்.**

இருதரப்பும் பரஸ்பரம் இணக்கப்பாட்டுடன் யுத்தநிறுத்தத்தை அறிவித்து விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைக்கத் தயார் என சந்திரிகா அரசு அறிவித்திருப்பதானது அரசின் நெருக்கடியை திசை திருப்புவதற்கான "அரசியல் ஏமாற்று வித்தை" எனக் கூறி 30-08-2001 அன்று விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்தனர். திறமையற்றதும், மோசமானதும், பாராளுமன்றத்தில் பெருன்பான்மை பலமற்றதும் ஸ்திரத்தன்மை அற்றதுமான அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபடத் தமது இயக்கம் தயாராக இல்லை என்றும், மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறிக்கொள்ள நாம் அப்படி முட்டாள்கள் அல்ல. என்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**இனவாதத்துக் கெதிரான சர்வதேச மாநாடு.**

ஐ.நா மன்றத்தின் இனவாதத்திற்கெதிரான சர்வதேச மாநாடு 31-08-2001 அன்று தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரத்தில் ஆரம்பமாகி, தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெற்ற இம் மாநாட்டை ஐ.நா பொதுச்செயலாளர் திரு. கோபி அனான் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். பல நாட்டுத் தலைவர்கள், மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்கள் பொது அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இம்மாநாட்டில், அரசசார்பற்ற நிறுவனங்களின் கண்காட்சிகள் மற்றும் பிரச்சாரச் செயற்பாடுகளும் நடைபெற்றன. சிங்களப் பேரினவாத அரசின் ஆக்கிரமிப்பிற்குள் ஈழத்தமிழர்கள் படுகின்ற துன்பங்கள், கொடுமைகள் குறித்த கண்காட்சியும் இடம்பெற்றது குறிப்பிடதக்கது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# ரெற் தாக்குதல்

அமெரிக்க ஏகாதிபத்திய இராணுவத்தை உலுக்கிய வியட்கொங் படைகளின் பாரிய தாக்குதலான 'ரெற்' தாக்குதல், வியட்நாமியப் போர் வரலாற்றில் ஓர் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. அளவிட முடியாத விரிவாக்கம், வேகம், வீச்சு ஆகியவற்றைக் கொண்ட இத்துணிகரத் தாக்குதல் வடவியட்நாம் கிராமப்புறங்களிலிருந்த போரை தென்வியட்நாமிய நகரப்புறங்களுக் குத் திசை திருப்பியது.

1968இல் அமெரிக்கா தேர்தலை எதிர்நோக்கியது. 1967ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் தென் வியட் நாம் பகுதி யில் போர்ஸ் தம்பிதமடைந்திருந்தது. வியட்நாமியரின் அமைதியை அவதானித்த அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் கீ சாங் (Khe sanh) என்ற இடத் தில் மீண்டும் ஓர் 'தியன் பியன்பூ'வை எதிர்பார்த்து படைவீரர்களை அங்கு குவித் தனர்.



வடவியட்நாமியப் படைகளும் வியட்கொங் படையணிகளும்அமெரிக்காவைப் பலமிழக்கச்செய்யும் வகையில், பின்னடைவை ஏற்படுத் தக்கூடிய ஓர் தாக்குதலைத் திட்டமிட்டனர். ரெற் தாக்குதல்கள் மூலம், ஜியாப் அவர்கள் அமெரிக்கப் படைகளை வியட்நாமிலிருந்து விரட்டியடித்து வியட்நாமியர்களின் ஒன்றிணைவுக்கும் விடுதலைக்கும் வழிசமைப்பதே முதன்மை நோக்கமாகக் கொண்டு திட்டமிட்டார். அவ்வாறு முடியாதுவிடின், அமெரிக் கப்படைகளின் பலவீனத்தை உலகுக்கு அம்பலப்படுத்தி, அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்பதாகும். இத்தாக்குதல்கள் மூலம் தென்வியட்நாமில் ஓர் மக்கள் எழுச்சியையும் வியட்நாமியப்படைகள் எதிர்பார்த்தனர்.

இத்தாக்குதல்களை வியட்நாமியரின் புதுவருடப்பிறப்பான ரெற் நாளன்று ஆரம்பிக்கத் திட்டமிட்டனர். ரெற்றை முன்னிட்டு ஓர் போர்நிறுத்தம் அமுலில் இருப்பதால் இராணுவ வீரர்கள் விடுமுறையில் இருப்பார்கள். இராணுவ அதிகாரிகள் அலுவலகத்தில் இருக்க மாட்டார்கள். முகாம்கள் தளர்ந்த நிலையில் இருக்கும். வியட்கொங் படைகள் புதுவருட சனநெருக்கடிக்குள் புகுந்து, ஆயுதங்களை மரக்கறி வண்டிகளிலும், போலியான ஈமச்சடங்கு ஊர்வலங்கள் நடத்தியும் தம் நிலைகளுக்கருகில் பதுக்கி வைத்தனர். சில படைவீரர்கள் அமெரிக்க வாகனங்களில்கூடத் தம் நிலைகளை அடைந்தனர்.

1968இல் வியட்நாமியரின் புதுவருடப் பிறப்பான ஜனவரி 31ஆம் திகதி ரெற் முற்றுகைப் போரை ஆரம்பித்தனர். அமெரிக்கப் படைகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக 1967ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ரெற் இலக்குகளுக்குத் தொலைவே பரவலாக ஆங்காங்கே அமெரிக்கப் படைகளின் நிலைகள் மீது சிறிய தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல் கள் அமெரிக்கப்படைகளால் முறியடிக்கப்பட்டன.

ரெற் தாக்குதல் ஏககாலத்தில் பரவலாக தென்வியட்நாமின் 5 முக்கிய நகரங்களிலும், 40 மாகாணத் தலைநகரங்களில் 36 நகரங்களிலும், 6 முக்கிய நகரங்களில் 5 நகரங்களிலும், 64 மாவட்டத்தலைநகரங் களிலும், 50 குக்கிராமங்களிலும் பரவலாக நடத்தப்பட்டது. வியட்கொங் படையினர் மலைப் பிரதேச நகரங்களான பான்மிதோட் (Banmethout), கொன்ரம் (Kontum), பிளேக்கு (Pleiku) ஆகியவற்றை முற்றுகையிட்டு பின்னர் அதிக குடியேற்றங்களைக் கொண்ட பிராந்தியமான மீகொங் டெல்ரா (Mekong Delta)வின் 16 மாகாணத் தலைநகரங்களில் 13 தலைநகரங்களினுள் புகுந்து பரவலாகத் தாக்கினர்.


சைகோன் தலைநகரில், ஜனாதிபதி மாளிகை, வானொலி நிலையம், விமானத் தளம், தூதுவராலயம், மற்றும் 3 அமெரிக்க இராணுவ முகாம்கள் ஆகியவற்றைத் தாக்கினர். தாக்குதல் தினமான ஜனவரி 31



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# TET OFFENSIVE





அதிகாலை 3 மணிக்கு டாக்ஸியில் வந்திறங்கிய வியட்கொங் படைத்தளபதிகள் 5 நிமிடங்களுள் 4 உயரதிகாரிகளைக் கொன்று அப்பிரதேசத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். வானொலி நிலையத்தினுள் உட்புகுந்த 14 தளகெளும் 18 மணிநேரம் நிலையத்தினுள் பதுங்கியிருந்து பின்னர் தம்முடன் சேர்த்து அந்நிலையத்தைத் தகர்த்தொழித்தனர்.

சைகோன் நகரின் சந்தடி மிக்க பகுதியில் அமைந்திருந்த அமெரிக்கத் தூதுவராலயத்தின் மீதான தாக்குதல், உலகின் பார்வையை வியட்நாம் பக்கம் திசைதிருப் பியது. இத்தாக்குதலின் போர்ப்பரிமாணமும் சுற்றிவளைப்பும் அமெரிக்க இராணுவத் தளபதிகளை திகைப்படைய வைத்தது. இத்தாக்குதல் அமெரிக்காவிற்கு ஓர் கரும்புள்ளியாக அமைந்தது. இத்தாக்குதல் வியட்நாமியரை இராணுவரீதியில் வெல்ல முடியாது என்பதை அமெரிக்காவுக்கு உணர்த்தியது. இப்போரின் விளைவாக அமெரிக்கா 'தொடர்ந்து போராடுவது' என்ற நிலையை மாற்றி போரை முடிவுக்குக் கொண்டுவர முடிவெடுத்தது. ரான் சோன் நுட் (Tan Son Nhut) விமானத்தளம், ஜனாதிபதி மாளிகை, தென்வியட்நாமிய ஊழியர்களின் தலைமைச் செயலகம் ஆகியவற்றின் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வழமைபோல் அமெரிக்கா வியட்நாமியப் படைகளின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டிருந்தது. கீ சாங் (Khe Sanh) மீது கவனம் செலுத்தியிருந்த அமெரிக்கப் படைகள் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டன. கீ சாங்கிலிருந்த படைகள் தாக்குதல் நடைபெற்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டன. விடுமுறையில் சென்றிருந்த படைவீரர்களைத் திரும்ப அழைத்து களங்களுக்கு அனுப்பின. விரைவில் வியட்நாமியப் படைகளை முறியடித்து தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. வியட்நாமியப்படைகள் தோல்வியைச் சந்தித்தது.

இத்தாக்குதல் இரண்டு பகுதிகளுக்குமே வெற்றி தோல்வியாக அமைந்தது. தாம் நினைத்த இலக்குகளை அடைய முடியாவிட்டாலும், இது வியட்நாமியப் படைகளுக்கு ஓர் வெற்றியாகவே அமைந்தது. ரெற் தாக்குதல் வியட்நாமியப் போரின் முடிவுக்கு ஓர் ஆரம்பமாக அமைந்தது. இராணுவ ரீதியாக வியட்நாமியப்படைகள் தோல்வியைச் சந்தித்தாலும் உளவியல், அரசியல் ரீதியாக பாரிய வெற்றியை அளித்தது. ரெற் தாக்குதலின் விளைவாக உலகின் பார்வை வியட்நாம் பக்கம் திரும்பியது. பலத்த இழப்புக்களைச் சந்தித்தபோதும், வியட்நாமியப் படைகள் மனஉறுதியும், நுட்பமான திட்டமிடலும், தந்திரோபாயங்களும் கொண்ட ஓர் படை என்பதை இத்தாக்குதல் உலகிற்கு உணர்த்தியது. இராணுவ ரீதியில் வியட்நாம் படைகளை வெல்ல முடியாது என அமெரிக்கா உணர்ந்ததன் விளைவாக 'தொடர்ந்து போராடுவது' என்ற நிலையை மாற்றி, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இணக்கம் காட்டியது. ரெற் தாக்குதலே வியட்நாமுக்கு விரைவில் விடுதலையைத் தேடித் தந்தது.

வையந்தா





தமிழ் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilanangam.net



# அணையாததீபம்

## கடற்கரும்புலி
## மேஜர் சந்தனா

(குணசிங்கம்- கவிதா) யாழ் மாவட்டம் வீரச்சாவு.. 26-06-2000.

அவளுக்கு நன்கு தெரிந்திருந்தது, தனது நீண்டநாள் கனவு, இலட்சியம் இம் முறை எந்தத் தடையும் இன்றி வெற்றியடையும் என்று. அந்த நம்பிக்கையின் நிறைவோடு தன்னைப் பெற்றவளை, தன் உறவுகளை இறுதியாக ஒரு தடவை பார்த்துவிட்டு வருவதற்காய் வீடு செல்கிறாள்.


'அடிக்கடி வீட்டை வா மோனை' என்று கூறிய தன் தாயிடம் சொல்கிறாள் 'கிட்டடியில வந்திடுவேன் அம்மா' அவள் கூறியதன் அர்த்தம் புரியாது கண்ணீரோடு கட்டியணைத்து முத்தமிட்டு விடைகொடுக்கின்றாள் அந்தத் தாய். இன்னும் சில நாட்களில் நிழற்படமாகத்தான் தன் மகள் தன்னிடம் வரப் போகிறாள் என்பதை அப்போது அறிந்திருக்கவில்லை அத்தாயுள்ளம்.

ஒல்லியான தோற்றம், எப்போதும் முகத்தில் இனிய புன்னகை இவள்தான் மேஜர் சந்தனா. தனது இனத்தின் விடுதலை வேண்டி போராடப் புறப்பட்ட ஆயிரம் ஆயிரம் வீராங்கனைகளில் இவளும் ஒருத்தி. மகளிர் படையணியில் இருந்து 1995ஆம் ஆண்டு தலைவரின் அனுமதியுடன், கரும்புலிக் கனவுகளுடன் தன்னை கடற்புலிகளின் அணியில் இணைத்துக்கொண்டாள். கரும்புலி அணிகளுக்கான விசேட பயிற்சிகளை முடித்துக் கொண்டு எதிரியின் இலக்குகளைத் தேடத்தொடங்கினாள்.

எதிரியின் அதிஸ்ரம், அவள் வெடிமருந்து நிரம்பிய படகுடன் கடலில் இறங்கும் போதெல்லாம் அவன் தப்பிப் பிழைத்துச் சென்றுகொண் டிருந்தான். சந்தனாகூட அடிக்கடி கூறுவாள் "என்ர படகு கடலுக்க நிக்குதெண்டு நேவிக்காரனுக்குக்கூடத் தெரியும் அதுதான் உயரவாப் போறான்" என்று. தன் நகைச்சுவைப் பேச்சால் அனைவரது உள்ளங்களிலும் குடிகொண்டிருந்த சந்தனா, தன் இறுதிக் கணங்கள் வரைகூட எந்தவித மாற்றங்களுமின்றி அதே சிரிப்பு, அதே நகைசுவைப் பேச்சு என கலகலப்பாகவே இருந்தாள். அவளது இறுதித் தாக்குதலுக்காக படகை கடலில் இறக்கும் போது தன் சக போராளியிடம் தனது புதிய காலணியை கழற்றிக் கொடுத்து விட்டு "நான் திரும்பி வரமாட்டன்" இதை நீ வைச்சிரு என்று கூறிவிட்டு மறுநிமிடமே தனது குறும்புத்தனத்துடன் சொன்னாள் "திரும்பி வந்தா குறைநினைக்காமல் கழட்டித் தா" என்று. அந்த இறுதிக் கணப்பொழுதிற்கூட மற்றவர்களைச் சிரிக்கவைத்து மகிழ்ந்தாள் சந்தனா.

26- 06- 2000 அன்று

யாழ் குடா படைகளுக்குரிய ஆயுதங்கள், வெடிபொருட்கள், உணவுப் பொருட்கள் என்பவற்றை ஏற்றிக்கொண்டு கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்துகொண்டிருந்தது 'உகண' கப்பல். கடற்புலிகளது சண்டைப்படகுகளும், கரும்புலிப்படகுகளும் கடலில் களமிறங் கின. கடற்படையின் இரு பீரங்கிப் படகுகள் மற்றும் 6 டோராப் படகுகள் சகிதம் பாதுகாப்பாக வந்தது 'உகண' கப்பல். பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து 55 கடல்மைல் தொலைவில் வைத்து கடற்புலிகளால் வழிமறிக்கப்பட்டு கடும் சமர் வெடித்தது. சமரின் நடுவே லாவகமாக உள்நுழைந்த கரும்புலிப் படகுகள் உகண கப்பலுடன் மோதி வெடிக்க, உகண முற்றாக எரித்து கடலில் மூழ்கியது. 10 கடற்படையினர் பலியாக கடற்படையினரின் டோராவும் சேதமாகிப்போனது. இந்த வீர வரலாற்றை எழுதி மேஜர் சந்தனாவுடன், கடற்கரும்புலிகளான லெப். கேணல் ஞானேந்திரன். மேஜர் ஆரன், மேஜர் நல்லப்பன், கப்டன் இளமதி, கப்டன் பாமினி ஆகிய 5 காவிய நாயகர்களும் கடலில் சங்கமமாகினர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# மீள்பார்வை 2001

ஜூலை 2001

### 01.07.2001

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டும் என போப்பாண்டவர் ஜோன் போல் அவர்கள் தெரிவித்துள்ளார். ரோம் நகரத்தின் சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில் பாரம்பரியமாக நிகழ்த்தும் உரையின்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### 02.07.2001

யாழ்ப்பாணத்திலும், பூநகரியிலும் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது சிறீலங்கா அரசாங்கங்கள் விமான, மற்றும் எறிகணைத் தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருப்பதானது, சமாதான முயற்சி களை நிரந்தரமாகப் பாதித்துவிடும் என எச்சரித்து, விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இக்கடு மையான விமானத்தாக்குதல்கள், ஆத்திரமூட்டும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை எனவும் திட்டமிட்ட போர் விரிவாக்கம் என்றும் இவ்வாறு தமிழர் மீதான போர் தீவிரமாக்கப்படுமாயின் அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

### 02.07.2001

விடுதைலப் புலிகளினால் கிளிநொச்சியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் முன்னிலையில், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த கைதி யொருவர் விடுதலை செய்யப்பட்டார். 1997 யூலையில் வடபகுதிக் கடற்பரப்பில் மிசன் என்னும் கப்பலில் வைத்து கைது செய்யப்பட்ட மாலுமியே விடுதலை செய்யப்பட்டவராவார்.

### 02.07.2001

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒருவர் உரும்பி ராய்ப்பகுதியில் வைத்து சிறீலங்காப் படையினரால் கைது செய்யப் பட்டார். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செய லாளரான கிருஸ்ணசாமி திவ்வியன் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### 05.07.2001

'மிக இக்கட்டான காலகட்டங்களில் நெருக்கடியான சூழ்நிலைகளில் எதிர்வந்த தடைகளைத் தகர்த்து விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியவர்கள் கரும்புலிகளே' என தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கரும்புலிகள் நாள் நிகழ்வின்போது உரையாற்று கையில் தெரிவித்தார். வன்னியில் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்ட இடமொன்றில் கரும்புலி மாவீரர்களுக்கு மலர்மாலை அணிவித்து, தலைவர் அவர்கள் வணக்கம் செலுத்தினார். தமிழீழத்தின் பல பாகங்களிலும் கரும்புலிகள் தினம் மிகச்சிறப்பாக நடைபெற் றுள்ளன.

### 06.07.2001

தமிழ் மக்கள் மீது சிறீலங்காப் படையினர் புரிந்துவரும் மனித உரிமை மீறல்கள், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் மற்றும் சித்திரவதைகளைக் கண்டித்து, நாட்டின் பல பாகங்களிலும் கதவடைப்பு, கடமை புறக்கணிப்பு, ஊர்வலங்கள் என்பன நடாத்தப் பட்டுள்ளன. இதனால், நாட்டின் முக்கிய நகரங்கள் யாவும் ஸ்தம்பித நிலைக்குட்பட்டன.

### 10.07.2001

சிறீலங்கா இராணுவத்தின் உத்தரவின் பெயரில் யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டது. யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து, பல்கலைக்கழக மாணவர் சமூகம் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையினாலேயே பல்கலைக்கழகம் மூடப்பட்டதாக சிங்கள அரசு தெரிவித்தது. பல்கலைக்கழகம் மூடப்பட்ட செயலுக்கு பல தரப்பினரிடமிருந்தும் அதிருப்தி தோன்றியது.

### 10.07.2001

இரண்டு மாதங்களுக்கு பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதாக ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் அறிவித்தார். இத்திடீர் அறிவிப்பைக் கண்டித்த எதிர்க்கட்சி மற்றும் பிற அமைப்புக்கள் இச் செயலானது, சந்திரிகா அவர்களது சர்வாதிகாரப் போக்கை தெழிவாக எடுத்துக்காட்டுவதாகவும் தெரிவித்தன.

### 13.07.2001

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்தும், யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டதைக் கண்டித்தும் வன்னியின் பல பாகங்களிலும் கண்டன ஊர்வலங்கள், கூட்டங்கள் மற்றும் பாடசாலைப் பகிஸ்கரிப்புகள் என்பன நடைபெற்றன.

கல்முனைப் பகுதியில் இரு முஸ்லீம் மாணவர்களை சிங்களப் பொலிசார் சுட்டுக்கொன்றனர். மொகமட் அபூபக்கர் நியாஸ் (வயது 19), மொகமட் கனீபா நசீத் (வயது 19) ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர். இதனையடுத்து கண்டன ஆர்ப்பாட்டங்களும், கடையடைப்பு, பகிஸ்கரிப்பு என்பனவும் நடாத்தப்பட்டன.

### 15.07.2001

'எமது விடுதலை இயக்கத்திற்கும், எமது இயக்கத்தால் முன்னெடுக்கப்படும் எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் ஓர் மகத்தான வீர வரலாறுண்டு. அந்த வீர வரலாற்றை நாமே படைக்கிறோம், நாமே எமது வீரவரலாற்றின் கதாநாயகர்கள்' என சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டும், மாவீரர் லெப். சாள்ஸ் அன்ரனியின் 18வது ஆண்டு நிறைவை முன்னிட்டும் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இந் நிகழ்வுகள் வன்னியின் பல பகுதிகளிலும் சிறப்பாக நடைபெற்றன.

### 19.07.2001

சந்திரிகா அரசு பாராளுமன்றத்தை ஒத்திவைத்ததைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் கொழும்பில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியை அடக்கமுயன்ற பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடு, வன்முறைகளினால் 2 ஐ.தே.க. ஆதரவாளர்கள் கொல்லப்பட்டதுடன் 75 பேர்வரை காயமடைந்தனர்.

### 24.07.2001

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 27 விமானங்கள் அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் உள்ளன. விமானப்படையின் 21 விமானங்களும், எயாலைன்ஸ் நிறுவனத்தின் 6 பயணிகள் விமானமும் இத்தாக்குதலில் அழிவையும் சேதத்தையும் சந்தித்துள்ளன.

### 28.07.2001

மட்டக்களப்பு வாழைச்சேனை கிண்ணியடியில் சிங்களப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் இரண்டு சிறுவர்கள் உட்பட 3 பொதுமக்கள் பலியாகியுள்ளதுடன் எட்டுப் பொதுமக்கள் படு காயமடைந்துள்ளனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"

காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு....




சின்னஞ்சிறு பூக்கள்
சிரிப்பை மறந்த முகங்கள்
தன்னுடன் பிறந்த இளையதுக்குத்
தானே உணவும் மருந்துமாய்
இன்னும் இன்னும் ஆயிரம் இருக்கு
ஈழநாட்டின் இளங் குருத்து.
எம் மண்விட்டு வந்தோமே,
எம் உணர்வும் உறவும் விடுவோமா?
எம் பகை எரிக்கிறான் தலைவன். ஆம்
எம் மக்கள் அடிமை எரித்திடுவோம் நாம்.

திருமதி. அ. றிச்சேட்
சிண்டில் பிங்கன்
ஜேர்மனி.

அஞ்சி நடுங்கியும் நெஞ்சம் பதைத்தும்
ஆயுள் கழிந்தது தோழா உயிர்
கொஞ்சம் இருக்கு கூறடா இந்தக்
கொடுமைக்குப் பேரென்ன தமிழா
உன் விடுதலைக்கு மேற்குலகைச்
சுற்றிவரும்
கடல் கடந்து நிலமடைந்த தமிழா!
உதவடா உன் கரத்தால் பணத்தை
வளர் இள மழலைகள் விழிப்பதற்கு.

வசந்தா மோகன்
கிளிச்சி
பிரான்ஸ்.

ஆராரோ பாடியது யாரோ?
ஊரோடு ஓடினோம்
ஓயவில்லை எம் கால்கள்
ஒரு கணம் உட்கார்ந்தோம்,
விழியோர ஈரமினும் காயவில்லை
வீதியோரம் எம் வாழ்வு
ஒரு துண்டுப் பாணில்
எம்மிருவருக்கும்
மூவேளை உணவிங்கே.
உலகமே நீ எமை நோக்காதே
உனக்குண்டு ஓராயிரம் வேலைகள்.

யாழினி
சுவிற்சர்லாந்து.

பாணெடுத்தாயோ நீ பாவப்பட்ட உன்
தம்பிக்குக் கொடுக்க
உன் ஆடையில் பாதி கிழிப்பாயோ
உருக்குலைந்த உன் உறவுக்காக
எப்படியெல்லாம் வளர்க்க ஆசைப்பட்டோம்
என்று எண்ணி ஏங்க உன் தாயில்லை
அருகே
ஆனாலும் நீயுமொரு தாயாகிப்
போனாயேடா,
அந்தப் பிஞ்சு பிய்ந்துவிடாமல் இருப்பதற்கு,
அவனைக் கவனமாக வளர் வீரனாக வளர்.
வளர்த்து எங்கே அனுப்பப்போகிறாய்.
பாடம் படிக்கப் பள்ளிக்கா, இல்லை
பாடை கட்ட, எதிரிக்குப் பாடை கட்ட.

இ. திலீபன்
பாரிஸ்
பிரான்ஸ்.

எப்படி வாழ வேண்டியவர்கள்
எப்படியோ வாழுகின்றார்கள்
இளய தலைமுறையின் இன்றைய கோலம்
என்ன?
இப்படி பசியிலும் பட்டினியிலும்
வாழவேண்டுமா
நீங்கள் எமது எதிர்காலச் சிற்பிகள்
இப்படிச் சோர்ந்திருக்கலாமா
விடியப் போகும் எமது புதிய ஈழத்தின்
புத்துயிர்கள்
இப்படிப் பொசுங்கிப் போகலாமா.
உங்களைப் பெற்றவர்களின் கனவுகளையும்
ஆசைகளையும் ஈடேற்ற வேண்டாமா
புறப்படுங்கள் அண்ணனின்
செஞ்சோலையை நோக்கி
அங்கு உங்களுக்கு புதிய எதிர்காலம்
காத்திருக்கிறது.

திருமதி. சுமி சீலன்.
வின்சன்
ஜேர்மனி.

தந்தை களம் போனார்
தாய் அவளைக் கொன்றுவிட்டார் எதிரிகள்
காவு கொண்டு சென்றவளைக்
களம் கண்டு உயிர்பறிக்க
அண்ணனிடம் மண்டியிட்டேன்
அரவணைத்துச் சொன்ன பதில்
காலம் வரும் வரைக்கும்
காத்திரு நீ உறிதியுடன்
என்ற நற் சொல் கேட்டு
என் நேரம் வரும்வரைக்கும்
காத்திருக்கிறேன் இவ்விடத்தில்
களம் கண்டு பகைமுடி.

த. சு. மணியம்
ஜேர்மனி.

என் வாழ்வில் என்றும் சோகம்
ஏக்கங்கள் என் வாழ்வின் சொத்து
என்றழியும் என் மனதின் தாகம்
தீர்ப்பதற்கு யார் வருவார் இன்று?
உறவு சொல்ல என் அருகில் அண்ணன்
உயிரோடு நாம் இருவர் மட்டும்
பரிதவிக்கும் நிலைதனைக் கண்டும்
பரிந்துதவ யார் வருவார் என்று
மனதினிலே ஓர் கேள்வி மட்டும்
எழுந்து நிற்கும் நிலையினைக் கண்டும்
எமக்குதவ யார் வருவார் இன்று?

சாந்தினி வரதராஜன்
ஜேர்மனி.

## ஜூன் மாதத்திற்கான...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net


ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசக்குரல்- போர்க்கால இலக்கியத்தின் யதார்த்தப் பதிவு-

விடுதலை வேட்கை மிக்க எழுச்சிப் படைப்புக்கள்-மண்ணின் மணத்தோடு

மன உணர்வுகளை வெளிப்படுத்தும் உன்னத இலக்கியமாக எரிமலை





# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை.

இவ்விதழ் சார்ந்த தொடர்புகளுக்கு

ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

Fax: (33) 1 43 58 11 91 Email: erimalai@freesurf:fr


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

